பக்கங்கள் 20
20/=
Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli
27 ஜூன்-03 ஜூலை 2018

Raja Bojun
Sri Lankan Buffet
Liberty Arcade,
No 282, R.A.De Mel Mawatha Colombo 03.
Tel. 4 71 61 71 / 2577097-8 web : rajabojun.lk




# ஊருக்குள் புகுந்த சிறுத்தை

“ஆளை விடுங்கோ அரசியலே வேண்டாம்”

## தமிழீழத்துக்கு மட்டுமல்ல, இலங்கைக்கும் சிறுத்தையே தேசிய விலங்கு!

KOTAGALA NURSING SCHOOL
KNS
KOTAGALA

REG P11/6063



තෘතීයික හා වෘත්තීය අධ්‍යාපන කොමිෂන් සභාව
மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழு
Tertiary and Vocational Education Commission
TVEC

**2018ஆம் ஆண்டுக்கான வருடத்திற்கான வைத்தியசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அகில இலங்கை ரீதியில் முதன்முறையாக வைத்தியாசாலைகளில் அனைத்துப் பதவி வெற்றிடங்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தரத் தொழில் நியமனங்களைப் பெற்றுத்தர விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

- Theater Assistant - சத்திர சிகிச்சைப் பிரிவு
- Labour Room Assistant - பிரசவ அறை
- I.C.U. Assistant - அவசர சிகிச்சைப் பிரிவு
- Nurses - தாதிமார்

**சாதாரண தரத்தோடு கல்வியை இடைநிறுத்தியவர்களுக்கு விசேட பயிற்சிகளும் நிரந்தரத் தொழில் நியமனங்களும் வழங்குவதோடு, உயர்தரம் கற்றோர்களுக்கு கல்வித் தகைமைக்கேற்ற தகுந்த நியமனங்கள்.**

- சாதாரண தரத்தில் தாய்மொழி உட்பட 7 பாடங்களில் சித்தி
- பெற்றோர்கள் தோட்டத் தொழிலாளாராயின் இதுவும் ஒரு விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.
- வைத்தியசாலைகளில் தொழில் செய்ய விருப்பமுடையோர்
- ஆங்கிலம் அல்லது சிங்கள மொழி தொடர்பான மொழி அறிவு.
- தத்தமது பிரதேசங்களில் தனியாக வைத்தியசாலை சார்ந்த தொழில்களைச் செய்ய உத்தேசித்துள்ளோர். (Lab, Chanel Centre, Hospital, Home Nursing)

**பயிற்சியில் ஈடுபடும் அனைவருக்கும் நிச்சயமாக நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும்.**

## எம்மிடம் இருந்து உங்களுக்கு

- 3 மாத கால வகுப்பறை கற்கைக் நெறி
- 4ம் மற்றும் 5ஆம் மாதங்களில் வயோதிபர் பராமரிப்பு கொடுப்பனவுகளுடன் தனிச்சான்றிதழ்
- 4 மாதப் பிரபல வைத்தியசாலைகளில் பிரத்தியேக பயிற்சி (OPD to Operation Theater)
- சிறந்த வைத்தியர்கள், தாதிய சகோதரிகள் மற்றும் ஆய்வுகூட தொழில்நுட்ப விரிவுரையாளர்களின் சிறந்த விரிவுரை
- பயிற்சி காலத்தில் மாதாந்த கொடுப்பனவுகள்
- தங்குமிட வசதிகள் இலவசம்
- வைத்தியசாலை பயிற்சிகளின் போது உணவு, சம்பளம், தங்குமிட வசதிகள்
- ஆங்கிலம் மற்றும் சிங்களப் பேச்சுப் பயிற்சி
- மருத்துவ முகாம்கள்.

**தமிழ் பேசும் நம்மவர்களுக்குக் கிடைக்கும் இறுதிச் சந்தர்ப்பம்
உங்கள் விண்ணப்பங்களில் விரும்பும் பதவி, தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு உங்களது விண்ணப்பங்களை 07.07.2018 முன் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.**

# KOTAGALA NURSING SCHOOL

25, Wotton Town, Kotagala. Email : nursingkotagala@gmail.com

**மேலதிக அனைத்து விபரங்களுக்கும் : மாகாணப் பணிப்பாளர் - 071 111 1880**

எதிரொலி
Ethiroli

அம்பலம் பதிப்பகம்,
இல. 241, கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

## யார் கெட்டிக்காரரர்?

அரசியலில் நிரந்தர எதிரியும் கிடையாது, நண்பனும் கிடையாது. 'நீதியரசர் பேசுகிறார்' நூல் வெளியீட்டு விழாக் காட்சிகள் இதையே மக்களுக்குச் சொல்லி நிற்கின்றன. இதுநாள் வரையும் கிடைக்கின்ற மேடைகளில் எல்லாம் எவ்வளவுக்கு கழுவி ஊற்ற முடியுமோ அந்தளவுக்கு ஒருவரையொருவர் தூற்றித் திரிந்தவர்கள் எல்லாம் ஒன்றாகச் சந்தித்துக் கை குலுக்கி, கட்டியணைத்து மகிழ்ந்தார்கள். மாவை சேனாதிராசா, சுமந்திரன் ஆகியோர் இந்தப் புத்தக வெளியீட்டுக்கு வருவதாக இருக்கவில்லை. ஆனால் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் எல்லோரும் கட்டாயம் புத்தக வெளியீட்டு நிகழ்வுக்கு வந்துதான் ஆகவேண்டும் என ஒரே போடாகப் போட்டுவிட்டார். அதற்குப் பின்னர் என்ன சொன்னாலும்,சம்பந்தர் கேட்க மாட்டார் என்பது தெரிந்துவிட்டதால், முரண்டு பிடிக்காமல் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவும், சுமந்திரன் எம்.பியும் நல்ல பிள்ளைகளாக நிகழ்வுக்கு வந்துவிட்டனர்.

முதலமைச்சரும் லேசுப்பட்டவர் அல்ல. வந்தவர்களைக் கண்டும் காணாதது போல, முகத்தை மறுபக்கம் நீட்டாமல் ஓடோடிச் சென்று அவர்களை அழைத்து வந்து, உட்கார வைத்துவிட்டுத் தான் மறுவேலை பார்த்தார். ஆனாலும் அதன் பின்னர் தனதுரையில், எல்லோரையும் ஒரு பிடியும் பிடித்திருந்தார்.


தமிழரசுக் கட்சிக்கு விரோதமாக நடக்கிறார் என்று அந்தக் கட்சியின் முக்கிய புள்ளிகள் எல்லாம் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீது சேற்றை வாரியிறைத்து வரும் சூழலில், அந்தக் கட்சியின் உயர்மட்டத் தலைவர்கள் அனைவரையும் கட்டாயமாக நூல் வெளியீட்டு விழாவுக்குப் போகச் செய்ததன் மூலம், எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் ஒரு அழுத்தமான செய்தியைக் கட்சியினருக்குச் சொல்லியிருக்கிறார். என்னதான் கட்சியினர் குழம்பினாலும், தீர்க்கமான முடிவுகளைத் தானே எடுப்பேன் என்பதே அது.

முதலமைச்சர் விக்னேஸ்வரன், தன் மீது தமிழரசுக் கட்சி காட்டிவரும் விரோதமனப்பாங்கால், புதுக் கட்சி ஒன்றைத் தொடங்கும் முனைப்பில் இருக்கிறார். அவ்வாறு அவர் புதுக்கட்சி தொடங்கினாலோ, அல்லது இன்னொரு கட்சியினருடன் கூட்டணி அமைத்தாலோ அது அடுத்து வரும் மாகாண சபைத் தேர்தலில் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தும். சிலவேளைகளில் வடக்கு மாகாண சபையின் ஆட்சியதிகாரத்தைக் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் கைப்பற்ற முடியாமல் போகும் ஆபத்தும் உண்டு.


இதைவிட, முதலமைச்சர் விக்னேஸ்வரனை தமிழரசுக் கட்சி கழற்றிவிட்டால், தாமும் வெளியேறிவிடுவோம் எனக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் வெருட்டத் தொடங்கியுள்ளன. எனவே விக்னேஸ்வரன் வெளியேறுவதோ அல்லது வெளியேற்றப்படுவதோ கூட்டமைப்புக்கு பலத்த இழப்பாகவே இருக்கும். எனவேதான் யார் எதிர்த்தாலும், அதையும் மீறி கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தர், அடுத்த மாகாண சபைத் தேர்தலிலும் கூட்டமைப்பின் சார்பில் விக்னேஸ்வரனையே களத்தில் இறக்கப்போகிறார் என்பதையே, 'நீதியரசர் பேசுகிறார்' நூல் வெளியீட்டு நிகழ்வுக் காட்சிகள் சொல்லாமல் சொல்லி நிற்கின்றன. ஒரு நூல் வெளியீட்டின் மூலம், காய் நகர்த்தி, எதிர்த்தரப்பின் வாய்களை அடைத்த சம்பந்தரும், விக்னேஸ்வரனும் உண்மையிலேயே கெட்டிக்கார்கள் தான்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# ஊருக்குள் வந்த சிறுத்தையும் செல்ஃபி யுகத்து தமிழர்களும்



சிறுத்தையைக் கண்டவர்கள் பொலிஸுக்கு தகவல் கொடுத்ததும் பொலிஸ் சம்பவ இடத்துக்கு வந்துவிட்டது. ஆனால் பொலிஸ்காரர் சிறுத்தை பதுங்கியிருந்த வளவுக்கு அருகிலிருந்த ஒரு சாலையில், அயலில் இருந்த ஒரு வீட்டிருந்து சில கதிரைகளைப் பெற்று அங்கேயே குந்தியிருந்திருக்கிறார்கள். ஊர் மக்கள் சிறுத்தையைக் கொன்று அதைத் தூக்கி வைத்துக் கொண்டாடிய போது பொலிஸ் அதைப் பார்த்துக் கொண்டு இருந்திருக்கிறது.



சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடுக்கப்பட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. இது தொடர்பில் சில கேள்விகள் உண்டு. ஒரு பாடசாலைக்கு அருகே ஒரு சிறுத்தை வந்து தன்னைத் துரத்தி வந்த பத்துப் பேரைத் தாக்கிய பின் அந்த ஊர்மக்களின் உணர்வு எப்படியிருக்கும்?



சிறுத்தையின் தாக்குதலுக்குள்ளான ஒருவரின் காயம்



**நிலாந்தன்**

ஊருக்குள் வந்த சிறுத்தை தன்னை தற்காத்துக் கொள்வதற்காக மனிதர்களைத் தாக்கியது. மனிதர்கள் தம்மைத் தற்காத்துக் கொள்வதற்காக சிறுத்தையைத் தாக்கினார்கள். தன்னைக் கொல்ல வரும் பசுவைக் கொல்லலாம் என்று ஒரு கிராமியச் சொற்றொடர் உண்டு. எனவே ஊருக்குள் நுழைந்து மனிதர்கள்ளைத் தாக்கிய சிறுத்தையை மனிதர்கள் தாக்கியதில் ஒரு தர்க்கம் உண்டு. வீட்டுக்குள் வரும் விஷப்பாம்பை அப்படித் தான் எதிர்கொள்வதுண்டு. அதுபோலவே ஊருக்குள் திரியும் கட்டாக்காலி நாய்க்கு விசர் பிடித்தாலும் அப்படித்தான் எதிர்கொள்வதுண்டு.

ஆனால் அம்பாள் குளத்தில் சிறுத்தையைக் கொன்ற விதமும், கொன்ற பின் கொண்டாடிய விதமும் தான் மிருகவதைக் குற்றங்களாகக் கருதப்படத் தக்கவை ஆகும். காயப்பட்ட சிறுத்தையைப் பிடித்து வன ஜீவராசிகள் திணைக்களத்திடம் கையளித்திருக்க வேண்டும். அதைக் கும்பலாகச் சூழ்ந்து நின்று கொடூரமாகக் கொன்றிருக்கக் கூடாது. அப்படிக் கொன்ற பின் அந்த வெற்றியை செல்ஃபி எடுத்துக் கொண்டாடியிருக்கவும் கூடாது. அப்படிக் கொண்டாடிய விதம் மிருகத்தனமானது. கடைசிக் கட்டப் போரில் அழிவுகளையும் இழப்புக்களையும் சந்தித்த ஒரு சமூகம் அதைச் செய்திருப்பதை ஏற்றுக் கொள்ளவே முடியாது. ஆனால் அதற்காக குற்றத்தை முழுக்க முழுக்க சாதாரண சனங்களின் மீது சுமத்தவும் முடியாது.

### சிறுத்தை கொல் படலம்

சுமார் ஏழு மணியளவில் சிறுத்தை அம்பாள் குளத்தில் காணப்பட்டிருக்கிறது. முதலில் அது ஒரு பற்றை வளவுக்குள் தான் காணப்பட்டிருக்கிறது. ஊர் மக்கள் சுற்றி வளைக்கத் தொடங்க அது அருகில் உள்ள ஒரு தோட்டக் காணிக்குள் ஓடியிருக்கிறது. கிட்டத்தட்ட ஐந்து மணித்தியாலங்கள் அதைக் கட்டுப்படுத்தவோ பிடிக்கவோ முடியவில்லை.


மாடு கட்டப் போன ஒருவரை அது முதலில் தாக்கியிருக்கிறது. அவர் காயத்தோடு புத்திசாலித் தனமான ஒரு வேலையைச் செய்திருக்கிறர். அருகில் உள்ள பாடசாலைக்கு அதை அறிவித்திருக்கிறார். அதன்பின் பொலிஸூக்கும் வனஜீவராசிகள் திணைக் களத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. பாடசாலை நிர்வாகம் பிள்ளைகளை மேல் மாடிக்கு அனுப்பி பாதுகாத்திருக்கிறது. பொலிஸ் சம்பவ இடத்துக்கு வந்து நின்றிருக்கிறது. வனஜீவராசிகள் திணைக்களத்தின் கிளிநொச்சி அலுவலகத்தில் இருந்து சிலர் முதலில் வந்திருக்கிறார்கள். ஆனால் வெறும் கையோடு வந்திருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கும் ஊர் மக்களுக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. அதே சமயம் தன்னை நெருங்கி வந்த ஊர் மக்களையும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் அலுவலர் ஒருவரையும் சிறுத்தை தாக்கியிருக்கிறது. பாடசாலை நிர்வாகமும், கல்வித்திணைக்களமும் சம்பவ இடத்துக்கு வந்து பிள்ளைகளின் பாதுகாப்புக் குறித்து பதற்றமடைந்திருக்கிறார்கள்.

இவ்வாறான ஒரு பதற்றச் சூழலில் கிட்டத்தட்ட 11.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு மருத்துவரின் தலைமையில் வனஜீவராசிகள் திணைக்கள அலுவலர்கள் உரிய உபகரணங்களோடு வந்திருக்கிறார்கள். ஏற்கனவே பொறுமையிழந்து காணப்பட்ட ஊர் மக்கள் அந்த மருத்துவரோடும் ஏனைய அலுவலர்களோடும் முரண்பட்டிருக்கிறார்கள்.

(04ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
Ethiroli
27 ஜூன்-03 ஜூலை 2018

# ஊருக்குள் வந்த சிறுத்தையும் செல்ஃபி யுகத்து தமிழர்களும்




(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

தூசணத்தால் பேசியும் இருக்கிறார்கள். "நீங்கள் விலகி நின்றிருந்தால் நாங்கள் உரியதைச் செய்யலாம்" என்ற தொனிப்பட திணைக்கள அலுவலர்கள் ஊர் மக்களைக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் "நீங்கள் சிறுத்தையைக் காப்பாற்றி காட்டுக்குள் துரத்தி விடுவீர்கள் அது பிறகும் ஊருக்குள் வரும். அது பலரைக் காயப்படுத்திய பின் நீங்கள் பிந்தி வந்து நடவடிக்கை எடுப்பீர்கள்" என்றெல்லாம் கூறி ஊர் மக்கள் திணைக்கள அதிகாரிகளுடன் முரண்பட்டிருக்கிறார்கள். ஒரு கட்டத்தில் ஊரவர்களைக் கட்டுப்படுத்த முடியாத திணைக்கள அலுவலர்கள் சம்பவ இடத்தை விட்டு வெளியேறிவிட்டார்கள்.

அதன் பின் ஊர் மக்கள் சட்டத்தைக் கையில் எடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே சிறுத்தை பலரைக் காயப்படுத்தி விட்டு தப்பியிருந்த ஒரு பின்னணியில் பாடசாலைப் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற கவலைகளின் பின்னணியில் சிறுத்தை வேட்டை நடந்திருக்கிறது. ஓர் ஊரவர் மரம் வெட்டப் பயன்படுத்தப்படும் செயின்சோ எனப்படும் எந்திர வாளை இயக்கியபடி முன்னே போயிருக்கிறார். சிறுத்தை அவரை நோக்கிப் பாய்ந்திருக்கிறது. ஆனால் அதன் கால்கள் வாளில் சிக்கிச் சேதமடைந்து விட்டன. சிறுத்தை காயத்தோடு விழுந்து விட்டது. அதன் பின் எல்லோரும் அதைச் சூழ்ந்து நின்று தாக்கியிருக்கிறார்கள். அதன் பின் செல்ஃபி எடுத்திருக்கிறார்கள். குறைந்தது அது காயப்பட்ட பின்னராவது அதை அவர்கள் உரிய திணைக்களத்திடம் ஒப்படைத்திருக்கலாம்.

ஆனால் அப்படி நடக்கவில்லை. மனிதனுக்கும் விலங்குக்கும் இடையிலான போராட்டத்தில் இறுதியில் வெற்றி பெறும் மனிதன் அடையும் வெற்றிக் களிப்பு அந்த மக்களையும் தொற்றிக் கொண்டு விட்டது. சுமார் ஐந்து மணித்தியாலப் போராட்டத்தின் பின் சிறுத்தையைக் கொன்ற போது ஏற்பட்ட மகிழ்ச்சி அது. ஊரில் விஷப்பாம்பைத் துரத்திச் சென்று அடித்த பின் ஏற்படும் ஒரு வித நிம்மதி உணர்வை ஒத்தது அது. ஆனால் சிறுத்தையைக் கொன்ற பின் ஒருவர் கூறுகிறார் "படம் எடுக்கிறவர் எடு" என்று. இங்கே தான் செல்ஃபி யுகத்தின் கொடூரம் வெளிப்படுகிறது. ஒரு கிடாய் ஆட்டின் தோற்றத்தைக் கொண்டிருந்த ஒரு விலங்கைப் பலர்



சேர்ந்து கொன்றுவிட்டு அந்த வெற்றியை செல்ஃபி எடுத்துக் . கொண்டாடிய போது வடமாகாண முன்னாள் அமைச்சர் ஐங்கரநேசன் கூறுவது போல தமிழ் மக்கள் சிறுமைப்பட்டுத்தான் போகிறார்கள்.

## கைகட்டி நின்ற பொலிஸ்

இவ்வளவும் நடந்த போது பொலிஸ் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு நின்றிருக்கிறது. அங்கிருந்த பிரதேச சபை உறுப்பினர்களாலும் எதையும் கட்டுப்படுத்த முடியவில்லை. சிறுத்தையைக் கண்டவர்கள் பொலிஸூக்குத் தகவல் கொடுத்ததும் பொலிஸ் சம்பவ இடத்துக்கு வந்துவிட்டது. ஆனால் பொலிஸ்காரர் சிறுத்தை பதுங்கியிருந்த வளவுக்கு அருகிலிருந்த ஒரு சாலையில், அயலில் இருந்த ஒரு வீட்டிருந்து சில கதிரைகளைப் பெற்று அங்கேயே குந்தியிருந்திருக்கிறார்கள். ஊர்மக்கள் சிறுத்தையைக் கொன்று அதைத் தூக்கி வைத்துக் கொண்டாடிய போது பொலிஸ் அதைப் பார்த்துக் கொண்டு இருந்திருக்கிறது.

இப்பொழுது சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்கு தொடுக்கப்பட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. இது தொடர்பில் சில கேள்விகள் உண்டு. ஒரு பாடசாலைக்கு அருகே ஒரு சிறுத்தை வந்து தன்னை துரத்தி வந்த பத்துப் பேரைத் தாக்கிய பின் அந்த ஊர்மக்களின் உணர்வு எப்படியிருக்கும்?

பாடசாலைப் பிள்ளைகளை மேல் மாடிக்கு அனுப்பிவிட்டு கல்வித்திணைக்கள அதிகாரிகள் பதற்றத்தோடு அச்சூழலில் நடப்பவற்றை அவதானித்துக் கொண்டிருந்த ஒரு பின்னணியில் தான் சிறுத்தை வேட்டை நடந்திருக்கிறது. இதில் சம்பந்தப்பட்ட வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் ஏன் சம்பவ இடத்தை விட்டுச் சென்றார்கள்?

பொது மக்கள் ஒத்துழைக்கவில்லை என்றால் அரச ஊழியர்களான அவர்கள் தமது கடமையைச் செய்யவிடாது தடுத்த சனங்களை கட்டுப்படுத்துமாறு பொலிஸிடம் கேட்டிருக்கலாம் தானே? பொலிஸ் ஏன் பொது மக்களைக் கட்டுப்படுத்தி வன ஜீவராசிகள் திணைக்களம் அதன் கடமையை செய்வதை உறுதிப்படுத்தவில்லை? அப்படி செய்ய முடியாத அளவுக்கு பதற்றமான ஒரு சூழல் அங்கு நிலவியதா? அதற்கு அருகில் இருந்த ஒரு பாடசாலையும் காரணமா?

மேலும், ஊர்மக்கள் முரண்படுகிறார்கள் என்பதற்காக ஒரு திணைக்கள அலுவலர்கள் கோபித்துக் கொண்டு போகலாமா? ஐந்து மணித்தியாலங்களுக்கு மேலாக ஒரு பாடசாலைக்கு அருகே சிறுத்தை பதுங்கியிருந்த ஒரு சூழலில் முதலில் வெறுங்கையோடு வந்த வனஜீவராசிகள் திணைக்களத்தின் மீது பொதுமக்கள் கோபப்பட்டது சரியா? பிழையா?

அப்படிக் கோபப்பட்ட பொதுமக்களோடு கோபித்துக் கொண்டு திணைக்கள அலுவலர்கள் வெளியேறியது சரியா? காடும் காடும் சார்ந்த இடங்களையும் அதிகமுடைய ஒரு பெருநிலத்தில் உரிய திணைக்களம் தேவையான உபகரணங்களோடு ஆயத்தமாக இருக்கவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு மருத்துவர் வரவேண்டியிருந்திருக்கிறது. இது எதைக் காட்டுகிறது? இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் எழுப்பியிருக்கும் கேள்விக்கும் பதில் கூறப்பட வேண்டும்.

## சிறுத்தை ஏன் வந்தது?

சிறுத்தை ஊருக்குள் நுழைந்ததற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. பிரதான காரணம் காட்டுக்குள் மனிதர்கள் நுழைந்தமை. வேட்டைக்காரர்கள் எப்பொழுதும் காட்டுக்குள் நுழைகிறார்கள். காடு அவர்களுக்கு மற்றொரு வீடு. காட்டில் உள்ள இரகசியமான வேட்டைத்தடங்கள் வேட்டைக்காரர்களுக்கு மட்டுமே வாலாயமானவை. வேட்டைக்காரர்கள் காட்டின் பிள்ளைகளே. அவர்கள் காட்டைத் துவம்சம் செய்வதில்லை. கவிஞர் ஜெயபாலன் கடைசிக்கட்டப் போரின் போது வன்னியிலுள்ள ஒரு நண்பருக்கு எழுதிய மின் மடலில் "காடு எந்த ஒரு வேட்டைக் காரனையும் தூக்கிச் சாப்பிட்டு விடும்" என்று எழுதியிருக்கிறார். அதுதான் உண்மை.

ஆனால் வேட்டைக்காரர்களையும் காட்டையும் ஒரு சேரச் சாப்பிடும் மிகப்பெரிய வேட்டைக்காரர்கள் இப்பொழுது காட்டைப் பிடித்து வைத்திருக்கிறார்கள். காட்டுக்குள் அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? என்ன செய்கிறார்கள்? என்பதெல்லாம் சாதாரண சனங்களுக்குத் தெரியாது. செய்மதிப் படங்களுக்கும் அதிகம் தெரியாது. வன்னிக் காட்டில் பிரதான சாலையிலிருந்து காட்டுக்குள் நுழையும் பல கிரவல் சாலைகளின் முடிவில் என்ன இருக்கிறது? என்ன நடக்கிறது? என்று படைத்தரப்புக்கு மட்டுமே தெரியும். எனவே காட்டுக்குள் படை வந்துவிட்டது. அதனால் காட்டு விலங்குகளுக்கும் மரங்களுக்கும் ஏனைய காட்டு வளங்களுக்கும் எது நடந்தாலும் முதற் பொறுப்பு படைத்தரப்பு தான்.

காட்டைப் பிடித்து வைத்திருக்கும் படைத்தரப்பு வேட்டைத் தடங்களை மூடிவிட்டது. வேட்டைக் காரர்கள் இப்போது அங்கே போக முடியாது. போனாலும் அவர்கள் கொல்லும் உடும்புக்கும் மானுக்கும் மரைக்குமாக அவர்களுக்கு சட்டப்படி பெரிய தண்டனை கிடைக்கும்.

ஆனால் வேட்டைக் காரர்களை விடவும் மிகப்பெரிய வேட்டைக் காரர்களான படைத்தரப்பை வனஜீவராசிகள் திணைக்களம் கட்டுப்படுத்துமா? நிச்சயமாக இல்லை என்று வன்னி வாசிகள் கூறுகிறார்கள்.

## படையினரின் வளர்ப்புச் சிறுத்தையா?

சில நாட்களுக்கு முன்பு அம்பாள் குளம், கிருஷ்ணபுரம் பகுதிகளில் படைத்தரப்பினர் தமது வளர்ப்புப் பிராணி ஒன்று தொலைந்து போய் விட்டதாகக் கூறித் தேடியிருக்கிறார்கள். கொல்லப்பட்ட சிறுத்தை மிகவும் கொழுத்த ஒரு சிறுத்தை என்றும் அது காட்டில் வளரும் சிறுத்தைகளை விட மினுக்கமாகக் காணப்பட்டது என்று ஓர் ஊர்வாசி கூறினார். இது தவிர கேப்பாபுலவில் படைத்தரப்பு ஒரு சிறுத்தையைக் கொன்றதாகவும் ஒரு தகவல் உண்டு.

2009ஆம் ஆண்டு மேக்குப் பின் வன்னிக்காடு பொது மக்களுக்கும் குறிப்பாக வேட்டைக்காரருக்குப் பெருமளவுக்கு மூடப்பட்டுவிட்டது. எனவே காட்டுக்குள் இருக்கும் மர்மங்களைப் பற்றி படைத்தரப்பைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. அங்கே எவ்வளவு மரங்கள் வெட்டப்படுகின்றன. எவ்வளவு மண்ணும் கனிப்பொருட்களும் அகழப்படுகின்றன என்பது பற்றியும் யாருக்கும் தெரியாது. இது வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கும் சம்பந்தப்பட்ட ஏனைய திணைக்களத்துக்கும் தெரியுமா?

எனவே சிறுத்தை கொல்லப்பட்டமை தொடர்பில் அளவுக்கு மிஞ்சி உணர்ச்சி வசப்பட முடியாது. அங்கே மிருக வதை நடந்திருக்கிறது. அதில் குற்றம் புரிந்தவர்கள் தாங்களே எடுத்துக் கொண்ட செல்ஃபிப் படங்கள் தான் இப்பொழுது அவர்களுக்கு எதிராகத் திரும்பியிருக்கின்றன.

அதே சமயம் இது தொடர்பாக தென்னிலங்கை ஊடகங்கள் காட்டும் பிரதிபலிப்புக்களை ஒரு முஸ்லிம் நண்பர் முகநூலில் விமர்சித்திருக்கிறார். மாத்தள விமான நிலையத்தைக் காட்டுக்கு அருகே கட்டிவிட்டு அங்கு காட்டிலிருந்து வரும் விலங்குகளைச் சுட்டுக் கொல்லுமாறு உத்தரவிட்ட போது அதைப்பற்றி விமர்சிக்காத மேற்படி ஊடகங்கள் சாதாரண தமிழ் மக்கள் ஒரு சிறுத்தையைக் கொன்றதைத் தூக்கிப் பிடிக்கின்றன என்ற தொனிப்பட அவர் விமர்சித்திருக்கிறார்.

ஒரு சிறுத்தையை வைத்து மனிதாபிமான விவகாரங்களை நடாத்தும் எவரும் அச்சிறுத்தைக்குப் பின்னாலுள்ள சூழழியல்சார் அரசியலையும் அச்சிறுத்தையைக் கொன்ற சாதாரண சனங்களின் உளவியலையும் விளங்கிக் கொள்ள வேண்டும். செல்ஃபி யுகத்தின் உளவியலையும் விளங்கிக் கொள்ள வேண்டும். தமது காட்டின் மீதும் தமது தேசிய மிருகத்தின் மீதும் உரிமை கொண்டாட முடியாத ஒரு மக்கள் கூட்டம் அவர்கள். தமது காட்டையும் விலங்குகளையும், பறவைகளையும், பூச்சி புழுக்களையும் பாதுகாக்கும் உரிமையற்ற மக்கள் அவர்கள். தமது கடலையும், கடலேரிகளையும், கடலட்டைகளையும், பாதுகாக்கும் உரிமையற்ற மக்கள் அவர்கள். இவ்வாறான கூட்டு உரிமைகளற்ற மக்களைத்தான் வனஜீவராசிகள் சம்பந்தப்பட்ட சட்டங்களின் கீழ் விசாரிக்கப் போகிறார்கள்.

அதே சமயம், ஐந்து மணித்தியாலங்களுக்கும் மேலாக அதுவும் ஒரு பாடசாலைக்கு அருகில் ஒரு சிறுத்தையைக் கட்டுப்படுத்தத் தவறிய வனஜீவராசிகள் திணைக்களமும் பொலிஸ் திணைக்களமும் இது தொடர்பில் பதில் கூற வேண்டும். ஆயுத மோதல்கள் முடிந்து ஒன்பதாண்டுகளான பின்னரும் உரிய திணைக்களங்கள் வினைத்திறனுடன் செயற்பட முடியாதிருப்பதற்கு யார் பொறுப்பு? ஒரு சிவில் சமூகத்தில் ஒரு சிறுத்தையைக் கட்டப்படுத்த உரிய திணைக்களங்களால் முடியவில்லை என்பதும் முடிவில் ஐந்து மணித்தியாலங்களுக்குப் பின் மக்கள் சட்டத்தைக் கைகளில் எடுத்ததும் எதைக் காட்டுகின்றன? அங்கே சிவில் நிர்வாகம் முழுமையாகச் செயற்பட வில்லை என்பதையா?

தமது காட்டையும், நிலத்தையும், கடலையும், கடலட்டைகளையும் அனுபவிக்க முடியாத ஒரு மக்கள் கூட்டம், அதை வேறு யாரோ அனுபவிப்பதை கையாலாகாத் தனத்தோடு பார்த்துப் பொருமிக் கொண்டிருக்கும் ஒரு மக்கள் கூட்டம் தமது தேசிய விலங்கைத் தாங்களே அடித்துக் கொன்று விட்டார்கள்.

# ஆறுமுகனா வெறுமுகனா

- 3 ஆண்டுகளில் 3 தடவைகளே சபையில் உரை
- 95 வீதமான அமர்வுகளில் பங்கேற்கவுமில்லை

■ கங்காணி

இலங்கை மட்டுமல்ல முழு உலக நாடுகளிலும் நாடாளுமன்றமே அதி உயர் சபையாகக் கருதப்படுகின்றது. அரச இயந்திரத்தையும், நிர்வாகப் பொறிமுறையையும் உரிய வகையில் செயற்படுத்துவதற்குத் தேவையான சட்டங்கள் இயற்றப்படும் சட்டவாக்கசபையாகவும் அது திகழ்கின்றது.

மக்களின் வாக்குரிமையால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பல்வேறு சிறப்புரிமைகள் வாரி வழங்கப்பட்டுள்ளன. நீதிமன்ற தீர்ப்புகளைக்கூட சபைக்குள் விமர்சிப்பதற்குரிய சுதந்திரம் இருக்கின்றது.

அதுமட்டுமல்ல குற்றவியல் குற்றமல்லாத வழக்கு விசாரணையெனில், நாடாளுமன்ற அமர்வு நாளாக இருக்கும் பட்சத்தில் வழக்கு விசாரணைக்கு செல்லாது, சபைக்கு வருவதற்குரிய அதி உயர் சலுகையும் எம்.பிக்களுக்கு இருக்கின்றது.

அரசியல் மேடைகளில் விண்ணதிர முழங்கும் வீர வசனங்களைவிட, சபையில் முன்வைக்கப்படும் கருத்துகளே சட்டபூர்வமானதாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. வரலாற்று ஏடுகளிலும் அது உள்வாங்கப்படுகின்றது. மக்களுக்குத் தேவையான விடயங்கள் நிறைவேற்றப்படுவதாலேயே நாடாளுமன்றத்துக்கும், அதில் அங்கத்தவர்களாக இருக்கும் உறுப்பினர்களுக்கும் அவ்வளவு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

இப்படியான உயரிய சபையில் மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கின்றன என்பதை 'எதிரொலி' தொடர்ச்சியாக ஆராயவுள்ளது. இதன் முதற்கட்டமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்கள்மீது எங்கள் கழுகுப்பார்வை இப்போது. அதற்கு முன்னர் இ.தொ.காவின் கடந்தகால வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.



### இ.தொ.காவின் உதயம்

தெற்காசியாவில் மிகப்பெரிய தொழிற்சங்கங்களுள் ஒன்றாகவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விளங்குகின்றது. அதற்கென அரசியல் கிளையொன்றும் இருக்கின்றது.

இலங்கையில் வாழ்ந்த இந்திய மக்களை குறிவைத்து 1939 ஆம் ஆண்டு கொழும்பு அரசால் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. இதன்படி 1934ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதிக்குப் பிறகு அரசாங்க சேவையில் இணைக்கப்பட்ட அனைத்து இந்திய வம்சாவளியினரையும் நாடு கடத்த முடிவெடுக்கப்பட்டது.

டி.எஸ். சேனாநாயக்கவின் இந்தத் தீர்மானத்துக்கு தமிழ்ப் பிரதிநிதிகள் போர்க்கொடி தூக்கியிருந்தாலும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பில் அன்று இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக இருந்த மகாத்மா காந்திக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து தனது விசேட பிரதிநிதியாக நேருவை, 1939 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கைக்கு அவசரமாக அனுப்பிவைத்தார்.

அந்தக்காலப்பகுதியில் கொழும்பை தளமாகக் கொண்டு இயங்கிய இந்திய அமைப்புகளிடையே ஒற்றுமை இருக்கவில்லை. இதை உணர்ந்த நேரு அனைவரையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் இறங்கினார். கொழும்பில் உள்ளவர்களை மட்டுமின்றி தோட்டத்தொழிலாளர்களையும் இணைத்து பலமான தொரு அமைப்பை உருவாக்க அடித்தளமிட்டார். இதன்பயனாகவே 1939 ஆம் ஆண்டு இலங்கை, இந்தியக் காங்கிரஸ் உதயமானது. அதன் ஸ்தாபகத்தலைவராக லக்ஸ்மன் செட்டியார் நியமிக்கபட்டார். 1940 இல் முதல் மாநாடு நடைபெற்ற பின்னரே, அவ்வமைப்பு சௌமியமூர்த்தி தொண்டமானின் கைகளுக்குள் சென்றது.

குடியுரிமை பறிக்கப்பட்டதால் 1977 ஆம் ஆண்டுக்கு பிறகே இலங்கையில் அரசியல் செய்யும் வரம் மலையகத் தமிழர்களுக்கு கிடைத்தது. காலப்போக்கில் இலங்கை, இந்திய காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸாக மாறியது. சுமார் 12 எம்.பிக்கள் வரை தெரிவாகினர். கொழும்பில்கூட எம்.பியை அக்கட்சி கொண்டிருந்தது. குடியுரிமையைத் பெற்றுத்தந்த அமைப்பு என்ற பெருமையும் அதற்கு இருக்கின்றது. ஆனால், இன்று இரண்டு எம்.பிக்கள் மாத்திரமே அந்தக் கட்சிக்கு இருக்கின்றனர் என்பதுதான் பரிதாபம்.

### ஆறுமுகனும் இ.தொ.காவும்

இ.தொ.காவின் சாவிக்கொத்தை தனது கட்டிப்பாட்டின்கீழ் வைத்திருந்த சௌமியமூர்த்தி தொண்டமானின் மறைவின் பின்னர், அவரது அந்தரங்கச் செயலாளராக இருந்த அவரது பேரனான ஆறுமுகன் தொண்டமானிடம் தலைமைப் பொறுப்பு கையளிக்கப்பட்டது. அவரே தற்போது பொதுச் செயலாளர் பதவியையும் அலங்கரிக்கின்றார்.

மத்தியகுழு, நிர்வாகக்குழு என பல கட்டமைப்புகள் இருந்தாலும் ஆறுமுகன் எடுப்பதே இறுதி முடிவாகும். அதை எந்தவொரு உறுப்பினர்களும் சவாலுக்குட்படுத்தமாட்டார்கள். அவ்வாறு உட்படுத்தினால், அடுத்து என்ன நடக்கும் என்பதைக் கட்சித் தொண்டர்கள் அனைவரும் அறிந்தே வைத்துள்ளனர் .

மலையகத்தில் தோட்டப் பகுதிகளில் தொழிற்சங்க அரசியலில் ஈடுபட்டாலும், தேசியத் தளத்திலும், நாடாளுமன்றத்திலும் இதொகாவின் செயற்பாடுகளென்பது ஆமைவேகம் அல்லது சூனியமென்றே சொல்லவேண்டும். அதிலும் குறிப்பாக நாடாளுமன்ற அரசியலென்பது பூஜ்ஜியமாகுமென்பது கசப்பான உண்மையாகும்.

2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்வரை 253 நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெற்றிருந்தாலும், 54 அமர்வுகளில் மாத்திரமே ஆறுமுகன் தொண்டமான் கலந்துகொண்டுள்ளார். அதுவும் ஐந்து நிமிடங்களுக்கு மேல் அவர் அவைக்குள் அமர்ந்திருப்பதில்லை. அவரின் சபைக்கான சமூகமென்பது இரண்டு நிமிட நூடில்ஸின் கதை தான்.

2018 மே மாத நாடாளுமன்ற அமர்வை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முடக்கியதால், எட்டாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு ஜூன் மாதத்திலேயே தொடங்கியது. அன்றுமுதல் கடந்தவார அமர்வுரை எதிலுமே அவர் பங்கேற்கவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினரொ ருவர் எவ்வித முன்னறிவித்தலுமின்றி, சபைக்கு உரிய வகையில் அறிவிக்காது, தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் சமூகமளிக்காவிட்டால் எம்.பி.பதவியை இழக்க நேரிடும். இதனால், இடையிடையே தலைகாட்டும் தந்திரமும் அரங்கேறிவருகின்றது.

### மூன்று வருடங்களில் மூன்றே மூன்று உரை

நாடாளுமன்ற அமர்வு நாட்களில் முக்கிய பல விவாதங்கள் நடைபெறும். கடந்த மூன்றாண்டுகளில் மூன்று தடவைகள் மாத்திரமே தொண்டமான் உரையாற்றியுள்ளார். அதுவும் 5நிமிடங்கள் தாண்டியதில்லை. வருடம் ஒரு உரையென்ற வகையிலேயே அவரது சராசரி இருக்கின்றது.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களின் தரவரிசைப்பட்டியலில் 221 ஆவது இடத்திலேயே அவர் இருக்கின்றார். சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களில் பிரதி தவிசாளர், பிரதமர் ஆகியோர் பொதுவாக விவாதங்களில் பங்கேற்பதில்லை. அப்படியென்றால் இவர்தான் பட்டியலில் கடைசியென்பதை நாம் கூறித்தான் தெரிய வேண்டுமா என்ன? எவ்வளவுதான் துரோகம் அரங்கேற்றப்பட்டாலும் தமது இனத்தை சார்ந்தவர், பிரஜாவுரிமையை பெற்றுதருவதற்கு வழிவகுத்தவரின் பேரன் என்ற காரணத்தால் இன்றும் தொண்டமானை தோளில் சுமந்து, வாக்களித்து அழகுபடுத்தி பார்ப்பவர்கள் மலையகத்தில் இல்லாமல் இல்லை. அப்படி பட்டவர்களுக்காக குறைந்தபட்ட நடவடிக்கையையேனும் எடுக்கலாம் அல்லா?

எட்டாவது நாடாளுமன்றத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் எம்.பிக்களால் இதுவரை எந்தவொரு சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையும் கொண்டுவரப்படவில்லை. தனிநபர் பிரேரணைகளும் முன்வைக்கப்படவில்லை. வாய்மூலவிடைக்கானகேள்விநேரத்தின்போதுகூட கேள்விகள் எழுப்பியதில்லை. ஏன், பிரதமரிடம் நேரடியாகவே வினாக்களை எழுப்பி, பதில்களைபெறும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் அதைக்கூட ஆறுமுகன் பயன்படுத்தியதாக ஆதராம் இல்லை.

(9 ஆம் பக்கம் பார்க்க)



# சோக்காயிருக்குது சோலர்!

## நவக்கிரிக்கு அடித்த அதிர்ஷ்டம்

■ வீ.கே.எஸ்.ஆனந்தா

புத்தூர் -நவக்கிரிப் பக்கத்தால் போகும் எவரையும் சட்டென ஒருகணம் தன் பக்கம் நீலவண்ணம் கொண்ட அந்தப் பெரிய பட்டம் போன்ற அமைப்பு தன் பக்கம் இழுக்காமல் விடாது. சில நாட்களுக்கும் முன்னர் தான் நவக்கிரி விவசாயக் காணிகளுக்கு மத்தியில் அந்த நீலச் சதுரம் கிணற்றடியில் இருந்து, சூரியக் குளியல் செய்து வருகின்றது. தோட்டம் செய்யும் இடத்தில் இந்த சதுரத்துக்கு என்ன வேலை? ஒரு வேளை இராட்சதப் பட்டம் ஏதும் கட்டுகிறார்களோ? இப்படித்தான் பலரும் எண்ணுவார்கள். ஆனால் உண்மை என்னவெனில் , அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் இனி மண்ணெண்ணெய் விலையேறுமோ? மின்சாரம் 'கட்' ஆகுமோ? என்றெல்லாம் கவலைப்படத் தேவையில்லை. சூரிய ஒளியைக் கொண்டு, நீரிறைக்கும் முறைமை அங்கு வந்து விட்டது. வந்ததுடன் மட்டுமல்லாது வெற்றிகரமாக நீரைப் பாய்ச்சி விவசாயிகளின் மனதிலும் இடம் பிடித்து விட்டது. அந்த சூரியகலப் படலம் தான் இராட்சதப் பட்டம் போல , கிணற்றடியில் படுத்துக் கிடக்கிறது.

### எனக்கு நீ: உனக்கு நான்

இற்றைக்கு எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்து விவசாயக் கிராமங்கள் நீர்ப்பாசனத்துக்காக அதிக அளவில் மனித மற்றும் விலங்கு வலுவினையே நம்பியிருந்தன. ஆகக் கூடிய வசதி வாய்ப்பைக் கொண்டவர்கள் 4 பரப்பு நிலத்திலேயே விவசாயத்தை மேற்கொண்டி ருந்தனர்.அதுவும் "நீ எனக்கு உதவ வேண்டும். அது போல நானும் உனக்கு உதவுவேன்" என்ற ஒப்பந்த அடிப்படையிலேயே பணிகளை முன்னெடுத்தனர். அதிகம் துலாவினாலேயே நீர்ப்பாசனம் மேற்கோள்ளப்பட்டது. 4 பரப்பு ஆயிரம் கன்றுகள் என்ற நிலப்பரப்பில் மேற்கொள் ளப்பட்ட தோட்டச் செய்கைக்கு, நடு இராத்திரியில் சென்று அதிகாலை புலர்வு வரை நீர்ப்பாசனத்தை மேற்கொண்டதாக அறியக் கிடக்கிறது. அதில், ஆகக் குறைந்தது இருவர் துலாவை மிதிக்க ஒருவர் மிதியில் நின்று பட்டையால் நீரை அள்ளி வாய்க்காலில் இட்டுக் கொண்டிருப்பர். நாலாமவர் நீரைப் பயிருக்குப் பாய்ச்சுவர். அப்படி நடைபெற்ற விவசாயம் நாளடைவில் சூத்திர முறைக்கு மாறியது. அதற்குப் பின்னர் இன்றுவரை நீரிறைக்கும் இயந்திரத்தின் வரவால் இலகுவாகவும் அதே சமயம் பாரிய பரப்பளவிலும் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மண்ணெண்ணெயினாலும், டீசலினாலும், 'மின்சாரத்தினாலும் இயக்கப்படும் இயந்திரங்களே அதிகளவு நீர்ப்பாசனத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

20 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டதாகச் சொல்லப்படும் வேகமான விஞ்ஞான வளர்ச்சியினால் விவசாயத் துறைகளிலும் பெரும் மாற்றத்தை எதிர்கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்டதொரு முற்னேற்றகரமான கண்டு பிடிப்பே சூரிய வெளிச்சத்தால் வலுவைப் பெறுவதென்பது. சூரிய ஒளியினால் இயக்கப்படும் நீரிறைக்கும் இயந்திரங்கள் நீர்ப்பாசன முறைகளை மிகவும் இலகுவாக்கியிருக்கிறது. அத்துடன் சூழல் நட்புடையதாகவும் காணப்படுவதால் அந்த முறையை நோக்கி மக்கள் நகரலாம் என்ற கருத்தும் தற்போது மேம்படத் தொடங்கி இருக்கிறது. இந்தியாவில் அரசினால் வழங்கப்படும் மானிய அடிப்படையில் சூரிய ஒளியினால் இயங்கும் நீரிறைக்கும் இயந்திரங்களைப் பெருமளவில் விவசாயிகள் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். இங்கும் அப்படியொரு அரச திட்டம் வரும் என மக்கள் பேசிக் கொள்கின்றனர்.



### சூரியனை நம்பினால் காணும்

"நான் இந்தக் கிணத்தடியிலை கிட்டத்தட்ட 35வருசம் தோட்டம் செய்யிறன். அதிலை 7பேர் பங்கு. இப்ப இதை அந்தக் கொம்பனி வந்து போட்டு ஒரு இருபது நாள் வரும். பொய் சொல்லக்கூடாது, மிசினாலை இறைக்கிறதைக் காட்டிலும் பறவாயில்லை. சூரிய வெளிச்சம் கூடக் கூடத் தண்ணி அடிக்கிற வீச்சும் கூடும். சில நேரம் தண்ணியை மறிச்சுக் கட்டேலாமைக் கிடக்கும் .அப்பிடித் தண்ணி வரும். ஒரு தனியாளுக்குப் பறவாயில்லை. யாழ்ப்பாண மாவட்டத்திலை இப்ப இருக்கிற சீருக்குக் கறண்டை நம்பத் தேவை இல்லை. முந்தின காலம் மாதிரிச் சூரியனை நம்பினால் போதும். இதுவரை ஒரு சதமும் நாங்கள் குடுக்கேல்லை. எல்லாம் அவங்கள் தான் (நிறுவனம் தான்) செய்தவை. இனித்தான் நாங்கள் கட்ட வேண்டி வரும். இது இப்ப சாம்பிளுக்குத்தான் போட்டிருக்கினம். இனி நாங்கள் 7பேரும் பேசிப் பறைஞ்சுதான் செய்ய வேணும். நாங்கள் விரும்பினால் உதை வேண்டலாம். இல்லாட்டி விடலாம். இப்ப அவங்கள் தங்கடை விளம்பரத்துக்காகப் போட்டிருக்கினம். அரசாங்கம் இதுக்கு மானியம் தருமெண்டால் எடுக்கலாம். இதை வாங்கிறது மட்டும் தான் செலவு, பிறகு ஒரு செலவுமில்லை எண்டதால லாபமும் கூட வரும். இண்டைக்குக் காலமை எட்டு மணிக்கு இறைக்கத் துவங்கினான். இப்ப கிட்டத்தட்ட ஒரு பத்தரையாகுது. இரண்டரை மணித்தியாலயத்திலை 800 கண்டுக்கு மேலை தண்ணி கட்டிப் போட்டன்" என்று சொல்லிவிட்டு பாய்ந்தோடும் தண்ணீரை வழிமாற்றி திருப்பி விட மண்வெட்டியோடு ஓடினார் அங்கு விவசாயத்தில் ஈடுபடும் இராஊசயா அமுதலிங்கம்.

### நவக்கிரிக்கு வந்த சோலர்

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இராசபாதையில் நவக்கிரிக்கப்பால் தொழிற்பேட்டைக்கு முன்னர் உள்ள வளைவில் 7பேருக்குப் பங்கு உள்ள விவசாயக் கிணற்றடியில் ஒரு சோலர் பனல் (SOLAR PANEL ) எனும் சூரிய ஒளியினால் இயங்கும் நீரிறைக்கும் இயந்திரத்தை "எக்ரொடெக் சூரிய கல நீர் வழங்கும் திட்டம்" எனும் விவசாயத் திட்டத்தின் கீழ் 'எக்ரி பவர் லங்கா பிரைவெட் லிமிடெட்' என்ற தனியார் நிறுவனம் பொருத்தியிருக்கிறது. இதை ஒரு பரீட்சார்த்தமாகவே அவர்கள் நிறுவியிருக்கிறார்கள் என்று அந்த கிராமத்தவர் ஒருவர் சொன்னார்.

மொத்தம் 9 ஒளிபெறும் தட்டுகள் பொருத்தப்பட்டு 2 குதிரை வலுவும் 1.5 கிலோ வற் திறனும் கொண்ட தண்ணீர்ப் பம்பு இணைக்கப்படுமாயின் மணித்தியாலத்துக்கு 1,60,000 லீற்றர் நீரைக் கிணற்றிலிருந்து வெளியேற்றலாம். ஒரு மணி நேரத்தில் ஒரு ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாய்ச்சக் கூடிய வகையில் அதன் தொழிற்பாடு அமையும். இதை வியாபார நோக்கத்தில் பொருத்துவதாயின் மொத்தச் செலவினமாக 3 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாவைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் என்று இதை வழங்கிய நிறுவனம் தெரிவித்துள்ளது. இதைப் பொருத்துவதற்கு அரசினால் மானியத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும் என்றும் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இத்தகைய தொழில் நுட்பப் பாவனை என்னவிதமான மாற்றத்தைக் கொண்டு வரும் என்று தெரியவில்லை. ஆனால் நீரிறைக்கும் இயந்திரத்தைவிட இலகுவானதும் பாதுகாப்பானதும், சூழல் நட்பும் இதில் அதிகம் உண்டு. எரிபொருளையோ அல்லது மின்சாரத்தையோ நம்பத்தேவை இல்லை. இயற்கையை நம்பினால் போதும் என்கிறார் விவசாயத்தைப் பகுதி நேரத் தொழிலாகக் கொண்ட அரச அதிகாரி ஒருவர். ■

வேலை வாய்ப்பு



நீங்கள் வேலை தேடுபவரா? நீங்கள் தேடும் வேலை எங்களிடம். உங்கள் கல்வித் தகமைக்கேற்ப தொழில் வெற்றிடம், மாதம் ஒன்றிற்கு 47,000 ரூபா வரை சம்பாதிக்கலாம். கண்டி, கொழும்பு, நுவரெலியா, ஹட்டன் மேலும் உங்கள் வீடுகளை அண்மித்த நகரங்களில், பொதியிடல், மேற்பார்வை, தரம் பிரித்தல் Data Entry, கணனி, சாரதி, 4K/Lift, J.C.B, Roomboy, விமான நிலையம் மேலும் பல தொழில் வெற்றிடங்கள், வருகை தரும் நாளில் இருந்து தொழில். உணவு, தங்குமிடத் துடன் தொழில். உடன் தொடர்பு கொள்ளவும். 077 8499336.

500 /=

உங்கள் சிறு விளம்பரங்களை குறைந்த விலையில் இங்கே விளம்பரப்படுத்தலாம். இதற்கு நீங்கள் செலுத்த வேண்டியது 500 ரூபா மாத்திரமே.

தொடர்புகளுக்கு:

076 711 2932



# “தமிழீழத்துக்கு மட்டுமல்ல, இலங்கைக்கும் சிறுத்தையே தேசிய விலங்கு!”

**நேர்காணல்: ஔண்யன்**

**கிளிநொச்சியில் கடந்த வாரம் ஊருக்குள் நுழைந்த சிறுத்தை ஒன்று, இளைஞர்களால் அடித்துக் கொல்லப்பட்டிருந்தது. இது குறித்து சூழலியலாரும், மாகாணசபை உறுப்பினரும், முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் 'எதிரொலி' க்கு வழங்கிய நேர்காணல் இது.**

கேள்வி: கடந்த சில நாள்களாகக் கிளிநொச்சி அம்பாள்குளத்தில் சிறுத்தை ஒன்று கொல்லப்பட்ட விடயமே பரவலாகப் பேசப்படுகின்றது. முன்னெப்போதும் கிளிநொச்சியில் சிறுத்தைகள் இருந்திருக்கவில்லை எனவும், இது எங்கிருந்து வந்தது எனவும் சந்தேகம் கிளப்பப்படுகின்றதே?

பதில்: கிளிநொச்சியில் சிறுத்தை முன்னர் இருக்கவில்லை என்று சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. எல்லோரும் கிளிநொச்சி என்றவுடன் கிளிநொச்சி நகரையும் அதனை அண்டிய கிராமங்களையுமே மனதில் எண்ணுகிறார்கள்.

ஆனால் கிளிநொச்சியில் உள்ள அடர்காடுகளில் சிறுத்தைகள் இருக்கவே செய்கின்றன. நான் அமைச்சராக இருந்தபோதுகூட கிளிநொச்சியில் சிறுத்தைக் குட்டிகள் விற்பனைக்காக ஓர் இடத்தில் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. உடனே அவற்றை மீட்டு வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைத்திருந்தேன். அந்தக் குட்டிகளின் தாயைக் கூட அவர்கள் கொன்றுவிட்டுத் தான் அவற்றை விற்க எடுத்து வந்தார்களோ தெரியவில்லை.

இலங்கையில் உள்ள சிறுத்தைகள் ஏனைய நாடுகளில் உள்ள சிறுத்தைகளை விடவும் தனித்துவம் வாய்ந்தவை. இவை தனித்த உப இனம்.

கேள்வி: அப்படியானால் இலங்கையின் தேசிய விலங்காகவும் சிறுத்தைகள் தானே அடையாளப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்?

பதில்: பொதுவாகக் காடுகளுக்கு ராஜா சிங்கம் என்றுதான் சொல்வார்கள். ஆனால் இலங்கைக் காடுகளில் எப்போதுமே சிங்கங்கள் வாழ்ந்ததாக எவ்வித ஆதாரங்களுமில்லை. இருப்பினும் சிங்கபாகு என்ற பாத்திரத்தை மகாவம்சம் சிருஷ்டித்ததனால், அவர்கள் சிங்கத்துக்கு முன்னுரிமை கொடுத்து, அது தேசியக் கொடிவரை வந்துவிட்டது. இந்தக் காரணத்தால் அவர்களால் தேசிய விலங்காக வேறொரு விலங்கை தெரிவு செய்ய முடியவில்லை. இலங்கைக்கென தேசிய மரம், தேசியப்பறவை என்பன உள்ளன. ஆனால் தேசிய விலங்கில்லை.

அவ்வாறு தேசிய விலங்கொன்றை அவர்கள் பிரகடனம் செய்யவேண்டுமாயின் அவர்களும் சிறுத்தையைத் தான் பிரகடனம் செய்ய வேண்டி இருக்கும்.

இரை கவ்விகளில் மிக உச்ச நிலையில் இருப்பது சிறுத்தை தான். இலங்கையைப் பொறுத்தவரை காட்டில் உள்ள விலங்குகளில் மிக உச்சமாக இருந்து ஆட்சி செய்யக்கூடியது சிறுத்தையே. ஆகவே காட்டுராஜா என்பது இலங்கையைப் பொறுத்தவரை சிறுத்தை தான். ஆனால் போராட்ட ரீதியாக “புலிகள்,“ இலங்கைக்கு எதிரான அடையாளமாக மாறிவிட்டதாலும், தமிழீழத்தின் தேசிய விலங்காகச் சிறுத்தையைப் புலிகள் அறிவித்ததாலும், சிறுத்தையைத் தமது தேசிய விலங்காகக் கொள்வதில் இலங்கை அரசுக்குத் தயக்கம் இருக்கிறது. இதனால் இன்றைக்கும் தேசிய விலங்கு என்பது இலங்கையில் வெற்றிடமாகவே உள்ளது.

கேள்வி: தேசிய விலங்கு, தேசியப் பறவை, தேசிய மரம் என இப்படிப்பட்ட அடையாளங்கள் அவசியம் தானா?

பதில்: ஓர் இனத்தை ஒருங்கிணைக்கும் வசியக் குறியீடுகளாக எப்படி தேசிய கீதம், தேசியக் கொடி என்பன உள்ளனவோ அப்படித்தான் இந்த தேசிய விலங்கு, தேசியப் பறவை முதலானவற்றையும் நாம் பார்க்கவேண்டும். அத்தோடு இவை சுற்றுச்சூழல் விழிப்பை ஏற்படுத்தக்கூடிய அடையாளங்களாகவும் இருக்கும்.

கேள்வி: அம்பாள்குளத்தில் ஊரவர்களைத் தாக்கியதால் தானே அந்தச் சிறுத்தை கொல்லப்பட்டது. தாக்க வரும் சிறுத்தையைக் கொல்வதும் தவறா?

பதில்: இங்கு சிறுத்தையைக் கொன்றதை விடவும், கொல்லப்பட்ட விதம் மிகப் பாரதூரமானது. அந்தச் சிறுத்தையைக் கொல்லும் போது, இளைஞர்களிடம் இருந்த வெறியும், வன்மமும் காணச் சகிக்க முடியாததாக இருந்தது. வனஜீவராசிகள் திணைக்களத்தினரிடம் சிறுத்தையைப் பிடிக்கும் பொறுப்பைக் கொடுக்க அங்கு நின்றவர்கள் தயாராக இல்லை.

அவர்கள் திரும்பக் காட்டுக்குள் கொண்டு சென்று விட்டுவிடுவார்கள். அதற்கு அங்கு நின்றவர்கள் சம்மதிக்கவில்லை. காட்டுக்குள் விடப்பட்டால் அது மீண்டும் நகரத்துக்கு வருமென்றே எண்ணியுள்ளார்கள். உண்மையில் அது மிகத் தவறான கருத்து. ஒரு நாகபாம்பும் எம்மைத் தீண்டும். ஆனால் நாகபாம்பு வீட்டுக்குள் வந்தால் கூட நம்மில் பலர் அதனை அடிப்பது கிடையாது. நாகத்தைக் கடவுளாக வழிபடும் மத நம்பிக்கை காரணமாக அதனைக் கொல்லாது மிகக் கவனமாக அப்புறப்படுத்துவோம். அப்படித்தான் இந்தச் சிறுத்தையும் காப்பாற்றப்பட்டு காட்டுக்குள் கொண்டு சென்று விடப்பட்டிருக்க வேண்டும்.

தற்காப்புக்காக சிறுத்தையைத் தாக்கியிருந்தால், அதனைக் காட்டுக்குள் அடித்து விரட்டி இருக்கலாம். அதை விடுத்துச் சிறுத்தையைச் சாகடிக்கும் நோக்குடனேயே செயற்பட்டிருக்கிறார்கள். ஒரு “கும்பல் மனோபாவமே” அவர்களை இப்படிச் செய்ய உந்தித் தள்ளியிருக்கிறது.

கேள்வி: அப்படியானால் அங்கு நின்றிருந்த வனஜீவராசிகள் திணைக்களத்தினர் பொறுப்போடு நடந்திருந்தால் சிறுத்தையைக் காப்பாற்றியிருக்கலாமே?

பதில்: இந்த இடத்தில் பொலிஸார் அவர்களைக் கட்டுப்படுத்தியிருக்க வேண்டும். மக்களைக் கட்டுப்படுத்துவது வனஜீவராசிகள் திணைக்களத்தினரின் வேலையல்ல. மக்களைக் கட்டுப்படுத்தி பொருத்தமான சூழலைப் பொலிஸார் ஏற்படுத்திய பின்னர், வனஜீவராசிகள் திணைக்களத்தினர் சிறுத்தையைக் கட்டுப்படுத்த விட்டிருக்க வேண்டும்.

கேள்வி: கொத்துக் கொத்தாகத் தமிழர்களே கொன்றொழிக்கப்பட்டுவிட்ட பின்னர் ஒரு சிறுத்தைக்காக நாம் கவலைப்படவேண்டுமா? என்று சமூக வலைத்தளங்களில் ஒரு கருத்துப் பரவுகின்றதே..?

பதில்: ஆம், கட்டாயம் கவலைப்படத்தான் வேண்டும். முதலாவது அது நம்முடைய தேசியச் சொத்து. இரண்டாவது, உலகில் அருகிவரும் இனங்களில் சிறுத்தையும் ஒன்று. இப்படி அருகிவரும் உயிரினத்தை நாம் பேணவேண்டும், அவ்வாறில்லாவிட்டால் ஒரு நிலையில் இப்படியான அருகி வரும் விலங்குகளை, விலங்குக் காட்சிச் சாலைகளில் மாத்திரமே காணக்கூடிய துர்ப்பாக்கிய நிலை வந்துவிடும்.

யானைகள் தாக்குகின்றன, சிறுத்தைகள் தாக்குகின்றன என்று நாம் சொல்கிறோம். ஆனால் இதற்கு என்ன காரணம். விலங்குகளின் காடுகளைநாம்அபகரித்துக்கொண்டுவிட்டோம். வன்னிக்குள் உள்ள காட்டுப் பகுதியின் பெரும்பகுதியைஇராணுவம்ஆக்கிரமித்துள்ளது. அப்படி காட்டை அழித்து படைமுகாம் அமைப்பதும், அவை தொடர்ச்சியாக இருப்பதும் காட்டு விலங்குகளுக்கு இடையூறாக இருக்கின்றது, அதனால் அவை வெளியே வர முற்படுகின்றன. காட்டின் அமைதி குழம்பும் போது இப்படி விலங்குகள் வெளியே வரும் வாய்ப்புண்டு.

கேள்வி: இத்தகைய அருகிவரும் விலங்குகளை வேட்டையாடும் மனோபாவத்தை எப்படி இல்லாமலாக்க முடியும்?

பதில் : எங்கள் எல்லோருக்குமே வேட்டைக் குணம் உண்டு. வேட்டையாடி மனிதர்களாக இருந்தே இப்படி வந்தோம்.

வேட்டைக் குணாம்சம் என்பது எங்கள் மரபணுவில் இருக்கிறது. அது அவ்வப்போது விழித்துக்கொள்ளும் போது இப்படியான சிறுத்தை கொல்லப்பட்டமை போன்ற சம்பவங்கள் நடக்கின்றன. அப்படியான வேட்டைக் குணம் விழித்துக் கொள்ளாமல் பார்ப்பதே சிறந்தது.

கிளிநொச்சியில் நடந்த சம்பவத்தைப் பார்க்கும் போது, சிறுத்தை கொல்லப்பட்ட பின்னர் அந்த இளைஞர்கள் “செல்பி” எடுத்து நடந்து கொண்ட விதம், சிறுத்தையை விடவும் வேட்டைக் குணாம்சம் நமக்குத்தான் அதிகமாக இருப்பது போலத் தெரிகின்றது.

கேள்வி: விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் ஊடாக சிறுத்தை போன்ற அருகிவரும் விலங்குகளைக் காப்பாற்றுமளவுக்கு எம்மவர்களிடம் மாற்றம் நிகழுமென நம்புகிறீர்களா?

பதில்: மாற்றம் வருகின்றதோ இல்லையோ நிச்சயமாக விழிப்புணர்வு நடவடிக்கைகளில் இறங்கத்தான் வேண்டும். குறிப்பாக வன்னி மாவட்ட எல்லைப் பகுதிகளில் இதைச் செய்யவேண்டும். இதை ஒரு கூட்டு முயற்சியாகவே செய்ய முடியும்.

**(08ஆம் பக்கம் பார்க்க)**



## மண் மூடும் சுவடுகள்

■ ந.சத்தியபாலன்

# போத்தலுக்குள் மாறும் வாழ்வு




காலமாற்றத்தாலும், மனிதர்களின் தேவைகளின் தன்மைகளில் தோன்றுகின்ற மாற்றத்தாலும் இந்த யுகத்தின் ஓர் இயல்பென ஆகிப்போன அவசரத் தன்மையாலும் தீர்க்கமாக ஆராய்ந்து பார்க்கும் தன்மை குறைந்து போய்விட்டதாலும், இன்று பரவலாகப் பல புதிய பழக்க வழக்கங்களை நம்மில் பலரும் இயல்பாக ஏற்றுக்கொள்ளத் தொடங்கி விட்டோம்.

அவற்றிலொன்று தான் போத்தல் தண்ணீர் அருந்துகிற பழக்கம். ஆரம்பத்தில் ஒரு அவசரத் தேவையின்போது பயன்படுத்துவது என்ற நிலை மாறி இப்போது அது அங்கீகரிக்கப்பட்ட, அவசியப் பழக்கமாக இந்தப் போத்தல் தன்ணீர் நிலைகொண்டு விட்டது.

பலரும் போத்தலில் அடைக்கப்பட்ட நீர் ஆரோக்கியமானது என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். 'சுத்திகரிக்கப்பட்ட நீர்' என்ற அச்சடிக்கப்பட்ட வாசகத்தைச் சத்திய வாக்கியமாகக் கருதிக்கொண்டு பயணங்களின் போதும் திருமணம் முதலான கொண்டாட்டங்களின் போதும் உணவகங்களில் உண்ணும் போதும் எனத் தொடங்கிய இந்தப் பழக்கம், இப்போதெல்லாம் நாளாந்த வீட்டுத் தேவைகளுக்கும் பயன்படுத்துமளவுக்கு வந்துவிட்டது.

போத்தலில் அடைக்கப்பட்ட நீரை அருந்துவதை ஒரு "சுகாதாரப் பழக்கம்" என்ற பிழையான கருதுகோளைப் பலரும் ஏற்றுக்கொள்ளத்தொடங்கி விட்டனர்.

சுத்தமான நீர் அருந்துவது அவசியம் என்பது ஒரு சுகாதார – தேகநலம் சார்ந்த உண்மை என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் கொதிக்க வைத்து ஆறிய நீர் அருந்துவது சிறந்தது என்பதற்கிணையான ஒரு கருத்தாகப் போத்தல் தண்ணீரைக் குடிக்கும் பழக்கத்தைப் பலரும் கைக்கொண்டு வருதைப் பார்க்கமுடிகின்றது.

சுத்தமில்லாத நீரை அருந்துவதால் நோய்கள் உண்டாகும் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனாலும் அதற்கான ஒரு மாற்றீடான நடவடிக்கையாகப் போத்தலில் அடைக்கப்பட்ட நீரை அருந்துவதைக் கடைப்பிடிப்பது சரியாகாது என்ற கருத்துப் பரவலாக மருத்துவர்களாலும் முன் வைக்கப்பட்டு வருகின்றது. இதனையும் பலர்அறிந்திருப்பார்கள்.

நீரைச் சுத்திகரிப்பதற்காக பயன்படுத்துப்படும் இரசாயனப் பொருள்கள் பற்றியும் போத்தலில் அடைப்பதற்காகப் பெறப்படும் நீர் எங்கிருந்தெல்லம் பெறப்படுகிறது என்பது பற்றியும் யாரும் சரியான கரிசனையோடு செயலாற்றுவதில்லை. முன்னைய காலங்களில் கிணறு முதலான நீர் நிலைகளைச் சுத்தமாக வைத்திருந்ததில் காட்டப்பட்ட அக்கறையை இந்தப் போத்தல் தண்ணீரை நாடும் பழக்கத்தால் பலரும் இழந்து விட்டனர்.

நாளுக்கு நாள் மண் மூடிப்போகின்ற சீரான சுகாதார நோக்குகளை விழிப்புடன் பின்பற்றுவது அனைவருக்குமான ஒரு சுகாதார நடவடிக்கையாக அமையும்.

# ஆருக்குச் சொல்லியழ....!

● நவீன சவாரித்தம்பர்



வாசகப் பெருமக்களுக்கு வணக்கமுங்கோ!

நான் இதாலை சந்தைக்குப்போகலாமெண்டு வந்தாப்போலை உங்களோடை சில விசயங்களைப் பறைஞ்சு போட்டுப் போவம் எண்டு நினைக்கிறன்.

இப்ப நாட்டில நடக்கிற கூத்துகள், கும்மாளங்களைப் பார்க்கேக்கை வாயைத் திறக்கவும் பயமாக் கிடக்குது. கதைக்கவும், கருத்துக்களை மற்றவையோடை பரிமாறவும் யோசினையாக் கிடக்குது.

எந்தப் புத்துக்குள்ளை எந்தப் பாம்பு கிடக்குது எண்டு தெரியாமல், வாயைத் திறந்துபோட்டு, உங்கினேக்கை வாங்கிக் கட்ட வேண்டியும் வரும்...எண்டதும் பொய்யில்லைக் கண்டியளே!

இருந்தாலும், எனக்கென்ன! வயசும் போட்டுது. காடு வா...வா எண்டு சொல்லுது. வீடு போ...போ எண்டு சொல்லுது. அதாலை சில விசயங்களை வெளிப்படையாய் பேசிவிட்டுப் போனால் என்னெண்ட மாதிரியும் மனசில படுகுது.

நான் இப்ப இதில என்ன சொல்ல வாறன் எண்டால், உந்தக் கோயில் திருவிழாக்களிலை மட்டுமில்லாமல்,

வெள்ளிக்கிழமையளிலையும் கூட, 'லவுட்ஸ்பீக்கரை' சத்தமாகப்போட்டு, அயலுக்கை இருக்கிற சனங்களுக்கும் படிக்கிற பொடி பொட்டையளுக்கும் இடைஞ்சல் குடுக்கக் கூடாது எண்டு எங்கட பேப்பர் காரரும்சரி, நீதிமன்றங்களில நீதவான்களும் சரி ஒரு அறிவுறுத்தலை எச்சரிக்கையாக விடுத்தாலும் அதை சில கோயில்காரர் கடைப்பிடிச்சு வருகினம் எண்டதை மறுக்கேலாதுதான்.

ஆனால், இந்த நீதிவான்களும், பேப்பர் காரரும் சொன்னது கோயில்காரருக்கு மட்டுமில்லை, எல்லாருக்கும் பொதுவாகத்தான் சொல்லியிருக்கினம். இப்படிச் சொன்ன பிற்பாடு, ஆர்... எவர்... எத்தனை பேர்... இதைக் கடைப்பிடிச்சு நடக்கினம் எண்டது யோசிக்க வேண்டிய விசயம்.

கோயில்காரர் ஒரு சிலர் மட்டும் சட்ட திட்டங்களைக் கடைப்பிடிச்சு நடந்தால் மட்டும் பத்தாது. அதை எல்லாரும் பின்பற்றி நடந்தால் தான், அடுத்தவருக்கு அரியண்டம் இல்லாமல் இருக்கும்.

இப்ப கொஞ்ச நாளா என்ர வீட்டுக்குப் பக்கத்தில 'இடியோசை' கேட்கத் தொடங்கியிருக்குது. மனிசர் இரவு - பகலெண்டு நித்திரை கொள்ளேலாமல் கிடக்குது. அட! அவன்தான் அப்படியெண்டால் இன்னொரு வீட்டுக்காரன் இவனுக்குப் போட்டியாக, "ஏன் நான் மட்டும் குறைஞ்ச ஆளோ...?

எண்ட தோரணையில அவனும் 'இடிக்கத்' தொடங்கியிருக்கின்றான். சத்தம் எண்டால் அந்த மாதிரி! மாரி மழை வெள்ளத்துக்கை பேத்தைத் தவளையள் கிடந்து கத்தின மாதிரி.

நான் ஆருக்குச்சொல்லி அழ...
கெடுகுடி சொல் கேளாது.

# யாழ்ப்பாண 'கிளீன்கட்'

● வேதநாயகம் தபேந்திரன்

'இதை ஒருக்கா கிளீன்கட் அடித்து தாங்கோ" கடைக்காரர் வாங்கி அவர் கேட்டதைச் செய்து கொடுத்தார்.

பக்கத்தில் நின்ற நான் 30 வயது மதிக்கத்தக்க அந்த இளைஞனைக் கேட்டேன். கிளீன்கட் என்ற இந்தச் சொல்லை சொல்லித் தந்தது யார்?

வீட்டில் இப்படித் தான் கதைப்பார்கள். அதனால் நானும் இப்படி தான் கதைப்பேன்.

கடைக்காரரைப் பார்த்தேன். அவருக்கும் 35 வயது மட்டில் தான் வரும். அவரைக் கேட்டேன். தம்பி இதை வேறு என்னவென்று சொல்லலாம்.

இதை லெமினேசன் என்றும் சொல்லலாம் என்றார். அது தான் சரி என்றார். கிளீன்கட் என்ற சொல் எவ்வாறு வந்ததென இருவரையும் கேட்டேன். தெரியாது என்றனர்.

1980 களின் ஆரம்பத்தில் யாழ்நகர் மின்சார நிலைய வீதியில் கிளீன்கட் என்ற பெயரில் ஒரு கடை திறக்கப்பட்டது.

அங்கு போட்டோ கொப்பி ,லெமினேசன் செய்யும் வேலைகள் நடைபெற்றது. அப்போது ஆவணங்களை பிளாஸ்ரிக் கவர் இட்ட போது கிளீன்கட் அடித்தனாங்கள். அடித்தோம். என கதைக்கும் மரபு உருவானது.

பின்னாளில் தற்போது வரைக்கும் கிளீன்கட் என கதைக்கும் தலைமுறை தொடர்கிறது.

இலங்கையில் சொக்கிலேட் தயாரிக்கும் கன்டோஸ் கம்பனியின் சொக்கிளேட் உற்பத்திகளை சொக்கிலேட் என இல்லாமல் கன்டோஸ் என அழைக்கும் பழக்கம் தொடர்கிறது.

இந்தியத் தமிழகத்தில் போட்டோ கொப்பி என அழைக்காமல் அதை உருவாக்கும் ஜெராக்ஸ் கம்பனி இயந்திரத்தின் பெயரால் ஜெராக்ஸ் அடித்தல் என அழைக்கப்படுகிறது.


அதாவது போட்டோ பிரதி அடித்தலை ஜெராக்ஸ் அடித்தல் என அழைக்கப்படுகிறது. இது போல கம்பனியின் பெயரால் பொருளை அழைக்கும் வழக்கம் பல உள்ளன.

# "தமிழீழத்துக்கு மட்டுமல்ல, இலங்கைக்கும் சிறுத்தையே தேசிய விலங்கு!"

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

*கேள்வி: அந்த விழிப்புணர்வை யார் செய்யவேண்டுமென எண்ணுகிறீர்கள்?*

பதில்: வனவளத்திணைக்களம், பொலிஸ் மற்றும் அரசியல்வாதிகள் ஆகியோர் இந்த நடவடிக்கையில் இணைய வேண்டும். ஆனால் சிறுத்தை கொல்லப்பட்ட சம்பவத்தின் போது எந்தவொரு அரசியல்வாதியும் பிரசன்னமாகியிருக்கவில்லை. அதற்குப் பின்னரும் கூட அது குறித்து அரசியல்வாதிகள் கருத்துக் கூட சொல்லவில்லை. உண்மையில் நாங்கள் வாழும் உலகு உயிரிகளின் உலகம் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவை. இந்த உயிர்வலையில் ஓர் உயிருக்கு ஊறு நிகழுமாயின் அதேயளவு பாதிப்பு நமக்கும் உண்டு. ஓர் உயிரினம் அழிந்தால், ஓர் இழை அறுந்தால் நாமும் அழிவோம். இதை அனைவரும் உணர்ந்தால், சிறுத்தை போன்ற அருகிவரும் உயிரினத்தைப் பாதுகாக்கும் எண்ணம் இயல்பாகவே வரும்.



"சிறுத்தை கொல்லப்பட்ட சம்பவத்தின் போது எந்தவொரு அரசியல்வாதியும் பிரசன்னமாகியிருக்கவில்லை."

*கேள்வி: ஏன் சிறுத்தைக்கு மட்டும் இப்படி கரிசனை காட்டுகிறீர்கள். ஆனால் ஆடு,மாடு போன்ற விலங்குகளைக் இறைச்சிக்கான கொல்லும் போது மனிதாபிமானம் எங்கே போனது என்று சிலர் கேட்கிறார்களே?*

பதில்: அவை வளர்ப்புப் பிராணிகள். இதற்கேற்ற வகையில் அவற்றின் இனப்பெருக்கமும் இயற்கையாகவும், செயற்கை முறையிலும் நிகழ்கின்றன. ஆனால் சிறுத்தை அப்படியானதல்ல.ஏற்கனவே அரிதாகிப் போய்க் கொண்டிருக்கும் ஒரு உயிரி. இப்போது அநேக இளைஞர்களிடத்தே தேசிய அடையாளங்கள், உயிரினங்கள் குறித்த அக்கறை இருப்பதையும் நான் பார்த்திருக்கிறேன். வீதிகளில் அடிபட்டுக் கிடக்கும் செம்பகங்களைக் காப்பாற்றி அவற்றை பத்திரமாக வீதிக் கரையில் தூக்கி வைத்துவிட்டுச்செல்லும் பல இளைஞர்களை நேரில் கண்டிருக்கிறேன். ஒரு சிறு தொகையினரே இப்படி அருகிவரும் உயிரினங்கள் மீது அக்கறையில்லாமல், கும்பல் மனோபாவத்தோடு எல்லை தாண்டிய வன்மத்தோடு செயற்படுகிறார்கள்.

நான் அமைச்சராக இருந்திருந்தால் சம்பவ இடத்துக்கு உடனே போய், சிறுத்தையைக் கொல்வதைத் தடுத்து நிறுத்தியிருப்பேன். ■

# ஆறுமுகனா வெறுமுகனா?



(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சபைக்கு வெளியிலும் பல நாடாளு மன்றக்குழுக்கள் இயங்குகின்றன. அவற்றின் அமர்வுகளில்கூட அர்த்தமுடையதாக எதையும் செய்வதில்லை. சுருக்கமாகச் சொல்லப்போனால், 'தலைகாட்டி செல்லும் அரசியலே' மலையக மக்களுக்காக நடத்தப்படுகின்றது. கூட்டரசில் பாதி அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றுள்ள முத்து சிவலிங்கத்தின் நடத்தையும் தலைவரின் சாதனையை முறியடிக்கும் வகையிலேயே அமைந்துள்ளன.

தனிப்பட்ட ரீதியில் எவ்விதத் தாக்குதல்களையும் இப்பத்தியினூடாக நாம் தொடுப்பதற்கு முற்படவில்லை. மக்களால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதி, மக்களுக்காக சேவையாற்றவேண்டும். மக்களின் குரலாக ஓங்கிஒலிக்கவேண்டும். தவறுகளைப் பட்டியலிட்டுக்காட்டி இனியாவது சிறப்பாக செயற்படுமாறு ஊக்கப்படுத்துவமே பதிவின் நோக்கமாகும். பேசவேண்டிய இடத்தில் ஊமை வேடம் தரித்து, செய்யவேண்டிய இடத்தில் கைகட்டி நின்று, அதைப் பேசினோம், இதைச் செய்தோமென வீரவசனம் பேசுவதென்பது வெட்கப்படவேண்டிய விடயமாகும்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி மீதான வெறுப்பையே கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது இதொகாவை ஆதரித்து மக்கள் வெளிப்படுத்தினர். இந்த முடிவின் மூலம் மக்கள் தம்பக்கமே நிற்கின்றனர் என்ற முடிவுக்கு இ.தொ.கா. வந்துவிடக்கூடாது.

மலையகத்தில் பலமானதொரு மாற்று அரசியல் சக்தி உதயமானால், காணாமல் போன பட்டியலில் இணையவேண்டிய நிலையேற்படும் என்பதை மனதில் நினைத்து, மக்களுக்காக, மக்களின் அரசியல், பொருளாதார மேம்பாட்டுக்காக அரசியல், தொழிற்சங்கம் நடத்தும் நிலை இதொகவுக்குள் உருவாகவேண்டும். எம்.பியாக இருந்தும், நாடாளுமன்ற தரவுகளின் பிரகாரம் - செயற்பாடுகளில் 'எம்.டியாக' பார்க்கப்படும் ஆறுமுகன் தொண்டமான், சபைக்குள் தனது அரசியல் ஸ்டைலை மாற்றவேண்டும். இல்லையேல் எதிர்காலத்தில் 'சிஸ்டம்' பிழைத்துவிடும். ■

# "வெள்ளையில்லையா? வெளியே நில்!"



உலகின் திறவுகோல் பாடசாலைகள் என்று சொல்வார்கள். ஆனால், உலகின் பூட்டும் பாடசாலைகள் தான் போலும். மாணவர்களின் சிறகுகளை எப்படியாவது ஒட்ட நறுக்குவதில் முனைப்பாக இருக்கும் பாடசாலை நிர்வாகங்கள், அவர்கள் உயரப் பறப்பதற்கான வழி களைக் காட்டுவதில் பின்னடிக்கின்றன.

கடந்தவாரம் யாழ்.நகரில் உள்ள, பெண்கள் பாடசாலையொன்றில் நடந்த நிகழ்வு இது. அரக்கப் பரக்க எழுந்து, அவசரமாகப் பாடசாலைக்கு வந்த சுமார் 50 மாணவிகள் முதலாம் பாடவேளை முடியும் வரை வகுப்பறைகளுக்குள் செல்லவிடாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பின்னர் அவர்களின் பெற்றோர் வரவழைக்கப்பட்டு, பிள்ளைகள் செய்த 'தவறு' சுட்டிக்காட்டப்பட்டு, இனிமேல் அப்படியான 'தவறு' நடக்காது என்று உறுதிமொழி வாங்கப்பட்ட பின்னரே, மீண்டும் மாணவிகள் வகுப்பறைக்குள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி என்ன தான் தவறு செய்தார்கள் அந்த மாணவிகள்?

வேறொன்றுமில்லை, அவர்கள் அணிந்து வந்த வெள்ளைச் சீருடையின் நிறம் மங்கிப் போய்விட்டதாம். பளிச்சிடும் வெண்மையாக இல்லையாம். அடிக்கடி துணிகளைத் துவைத்துக் காயப்போடுவதால் வெள்ளைச் சீருடைகள் மங்குவது இயல்பே. அதை ஒரு பாரதூரமான தவறாகக் கண்டுபிடித்து மாணவிகளை வகுப்புக்குள் செல்ல விடாமல் தடுப்பது எந்தவகையில் நியாயம்? இந்தச் செயலுக்காக குறித்த பாடசாலையின் அதிபர், மேலதிகாரிகளிடம் முறையான 'டோஸ்' வாங்கியது வேறுகதை.


## எழுதுகோல் போராளிகளே!

சிறுகதை, கவிதை, கட்டுரை, தகவல்கள், துணுக்குகள், பத்தி எழுத்துக்கள், விமர்சனங்கள், புகைப்படங்கள் எதுவாயினும், எதிரொலிக்கு எழுதி அனுப்புங்கள். தரமான படைப்புகளுக்கு தலைவணங்கி, பிரசுரிக்க எதிரொலி காத்திருக்கிறது.

தொடர்புக்கு:

'எதிரொலி'
அம்பலம் பதிப்பகம், இல. 241, கைதடி - மானிப்பாய் வீதி, உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

# பிரமாண்ட '3டி' பிரிண்டர்!



முப்பரிமாண அச்சு இயந்திரங்களைக் குட்டியாகப் பார்த்தவர்கள், அவுஸ்ரேலியாவில் டைடோமிக் (Titomic) நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ள 3 டி பிரின்டரைப் பார்த்தால் அசந்து விடுவார்கள். சரியாக 9 மீற்றர் நீளமும், 3 மீற்றர் அகலமும், 1.5 மீற்றர் உயரமும் கொண்ட இந்தப் பிரிண்டர் ஒரு பெரிய அறையையே அடைத்துக்கொள்கிறது .

இதற்கு முன்பே உலோகத்தால் புதிய பொருட்களை வடிவமைக்கும் முப்பரிமாண அச்சு இயந்திரங்கள் வந்துவிட்டனவே? ஆம், இருந்தாலும், அது கைனடிக் பியூசன் முறையில் உலோகத்துகளை படலம் படலமாக அடுக்குவதன் மூலம், முப்பரிமாணத்தில் உலோகப் பொருளைத் தயாரிக்கிறது.

ஆனால், 40.5 சென்ரி மீற்றர் அளவுக்கு உள்ள பெரிய பொருட்களைக் கூட இந்த இயந்திரத்தில் வைத்துத் தயாரிக்க முடியும். இதனால் இது தான் இன்றைய திகதிக்கு உலகின் மிகப் பெரிய உலோக 3 டி பிரிண்டராக உள்ளது. இது மணிக்கு 45 கிலோ வரை உலோகத் துகள்களை வடிவமைக்கும் வேகம் கொண்டது.

# புத்திசாலி சூட்கேஸ்!




கொஞ்சம் செயற்கை நுண்ணறிவு, சக்திவாய்ந்த சில்லு, இரண்டு மோட்டார் சக்கரங்கள். இவற்றையெல்லாம் சேர்த்தால் கிடைப்பதுதான் 'ஓவிஸ்' சூட்கேஸ். சீனாவைச் சேர்ந்த, பார்வேர் எக்ஸ் ரோபாடிக்ஸ் தயாரித்துள்ள ஓவிஸ், ஒரு புத்திசாலி சூட்கேஸ் ஆகும்.

அது தன் உரிமையாளரை அடையாளம் கண்டுகொள்ளும் கமரா வசதியுடன் இருப்பதால், வேறு யாரும் அதைக் 'கையாள' முடியாது. உரிமையாளர் எங்கு சென்றாலும், அவரது வலது பக்கமாகக் கூடவே வரும் விசுவாசம் கொண்டது. படிகள், தடைகள் வந்தாலோ, பெட்டரி தீர்ந்து போனாலோ உரிமையாளர் அதன் கைப்பிடியைப் பிடித்து இழுத்துச் செல்லலாம். ஓவிஸ் தானாக உடன் வரும் போது யாரும் எதிரே வந்து மோதாமல், அதுவே நகர்ந்து செல்லும்.

ஓவிஸை விட்டு உரிமையாளர் 2 மீற்றர் தொலைவைத் தாண்டிப் போனால் , இதன் செயலி உரிமையாளரின் மணிக்கட்டில் கட்டியிருக்கும் கருவிக்குச் செய்தி அனுப்பும். சூட்கேசுடன் குடித்தனம் நடத்தும் சர்வதேச பயணிகளுக்கு இது உற்ற துணை .

# டான்ஸ் ரோபோக்கள் கின்னஸ் சாதனை




இத்தாலி நாட்டில் ஆயிரத்து 372 ரோபோக்கள் ஒன்றாக நடனமாடி கின்னஸ் சாதனையை நிகழ்த்தி உள்ளன.' இதன் போது, ரோபோக்கள் இசைக்கு ஏற்றார் போல் நடனமாடியது காண்போர் கண்களுக்கு விருந்தாக அமைந்தது.

ரோபோக்களைத் தயாரித்து, அதனைப் பெரிய அளவில் நடனமாட வைக்கும் முயற்சியைக் கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தீவிரமாகச் செய்து வருகின்றன. 2017ஆம் ஆண்டு சீனாவில் நிகழ்த்தப்பட்ட ரோபோ நடனம் தான் இதுவரை மிகப்பெரியதாக இருந்தது. அந்த நிகழ்ச்சியில் ஆயிரத்து 69 ரோபோக்கள் இடம் பெற்று நடனமாடின. தற்போது அந்தச் சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது.

இதில் நடனமாடிய ஒவ்வொரு ரோபோவும் 40 சென்ரி மீற்றர் உயரத்தில் உருவாக்கப்பட்டிருந்தன. இவை ஆல்பா 1 எஸ் வகை ரோபோக்கள் ஆகும். அலுமினியத்துடன் பிளாஸ்டிக் கலந்த மெட்டிரியலால் இந்த ரோபோக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

# "ஆளை விடுங்கோ அரசியலே வேண்டாம்"



## எதிர்க்கட்சித் தலைவர் த
## திடீர் முடிவுக்குக் காரண

**கேள்வி: அண்மைக்காலமாக 'பாவப்பட்ட பணம்' விவகாரத்தில் உங்கள் பெயர் பரவலாக அடிபட்டது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு எனப் பணம் கொடுத்து விட்டுப் பின்னர் அதைத் திருப்பித் தரச் சொல்லிக் கேட்டது நியாயமா?**

பதில்: நான் முள்ளிவாய்க்காலுக்கு எனப் பணம் எதுவும்வழங்கவில்லை. மாகாணசபையில் எனக்கு ஒரு கடிதம் தரப்பட்டது. அதில், "முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை இதற்கு முந்தைய வருடம் போல மாகாணசபையே மேற்கொள்வதற்கு ஏற்புடையதாக உங்களது சம்பளத்தில்இருந்து 7ஆயிரம் ரூபாவை அளிப்பதற்கு உங்களுடைய இணக்கத்தைக் கோருகின்றோம்" என்று கூறப்பட்டிருந்தது. அதற்கு நான் இணக்கப்பட்டேன். 7 ஆயிரம் அல்ல. 70 ஆயிரம் ரூபா பணத்தைக் கொடுப்பதென்றாலும் நான் தயார். அந்த நினைவஞ்சலி முக்கியமாகச் செய்ய வேண்டிய ஒன்று. அதற்குப் பின்னர் நினைவேந்தல் குழு ஒன்று அமைக்கப்பட்டது. நான் அந்த குழுவில் இல்லை. ஆனால் கூட்டங்களுக்குச் செல்வேன். அந்தக் கூட்டங்கள் சுமூகமாகத் திட்டமிடல்களுடன் தான் நடைபெற்றன.

முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி நடைபெற்ற அந்தத் தினத்தில், முள்ளிவாய்க்கால் சென்ற போது. அங்கு நாங்கள் திட்டமிட்டதைப் போல எதுவும் நடக்கவில்லை. வடக்கு மாகாணசபையில் தெரிவு செய்யப்பட்ட நினைவேந்தல் குழுவைக் கூட அந்த நினைவிடத்துக்குப் போக அனுமதிக்கவில்லை. வேறு யாரோ இருந்து முதலாளிகள் போன்று செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். முதலமைச்சர் மட்டும் தான் போனார். மற்றவர்கள் எல்லாம் சூழ நின்று கத்திக்கொண்டிருந்தார்கள். அப்போது நான் சொன்னேன். "நீங்கள் எதுவானாலும் செய்யுங்கள் நீங்கள் சொன்னதைப்போல செய்யவில்லை. அதனால், என்னுடைய பணத்தைத் திருப்பித் தாருங்கள்" என்று மாகாணசபையிடம்தான் கேட்டேன். வேறு யாரும் எனக்குப் பணம் தரத் தேவையில்லை. எனக்கு வேறு யாரிடமும் கொடுக்கல் வாங்கலும் இல்லை. மாகாணசபை தான் என்னிடம் பணம் பெற்றது. அதனால், மாகாணசபையிடமே நான் திருப்பித் தருமாறு கேட்டேன். அதற்குப் பிறகு இந்த விடயம் சபையில் விவாதப் பொருளாக எடுக்கப்பட்டு, இறுதியில் இந்த விடயத்தில் விட்டுக்கொடுத்து நடக்குமாறு சிவாஜி லிங்கம் வேண்டுகோள் விடுத்தார். சிவாஜிலிங்கம் என்னுடைய தனிப்பட்ட நண்பர் என்ற முறையிலும், அவரின் கோரிக்கையின் அடிப்படையிலும் நான் அந்த விடயத்தில் விட்டுகொடுத்து நடந்து கொண்டேன். அத்தோடு இந்த விடயம் முடிந்தது. மாகாணசபை ஒவ்வொரு செலவுகளுக்கும் பொறுப்புக் கூற வேண்டும். அந்த அடிப்படையில் மாகாண-சபை பொறுப்புக்கூறத் தவறியதால்தான் நான் கேட்டேன்.

**கேள்வி: ஆனால் அது எதிர்மறையான விடயமாகப் பரவலடைந்து, கிழக்கு மாகாணம் வரை சென்றதாலேயே, கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் 'பாவப்பட்ட பணம்' என்று பெயரிட்டு இந்தப் பணத்தைச் சேகரித்தார்கள். அவர்கள் அதை உங்களிடம் நேரடியாகத் தர முயற்சிக்கவில்லையா?**

பதில்- எனக்குத் தெரியாது . பணத்தை யார் சேர்த்தனர் என்றும் எனக்குத் தெரியாது. இது ஊகம். ஊகத்துக்கு நான் பதில் சொல்ல முடியாது. அவர்களை அழைத்து நான் அடையாள அட்டையையா பார்த்தேன். அவர்கள் யாரென்றே எனக்குத் தெரியாது. நான் அவர்களைக் காணவும் இல்லை. சந்திக்கவும் இல்லை. ஊடகங்களில் வெளியான புகைப்படங்களில் தான் பார்த்திருக்கின்றேன். நான் அவர்களை அறியவும் முயலவில்லை. அதற்கான தேவையும் இல்லை. இதனை யார் செய்தாலும் அவர்களின் அறியாமையின் விளைவேயொழிய வேறொன்றும் இல்லை. மாகாணசபை என்றால் என்ன? என்பது அவர்களுக்குத் தெரியவில்லை

அதற்குப் பின்னர் நடந்த சபை அமர்வின் போது, நான் கொழும்பில் இருந்தேன். அப்போது யாரோ பார்சல் ஒன்றை முதலமைச்சரிடம் கொடுப்பதற்காக கொண்டு வந்ததாகவும், முதலமைச்சர் அதனை வாங்காமல் நிராகரித்ததாகவும் அறிந்தேன். பின்னர் என்னுடைய வீட்டுக்குச் சென்று வாசலில் அதனைக் கட்டி விட்டுச் சென்றிருந்தனர். அதனைப் புகைப்படங்களில் பார்த்தேன். என்னுடைய வீட்டில் பொலிஸ் காவல் உள்ளது. நான் இங்கு இல்லை என்பதால் அவர்கள் தங்களுடைய அறைக்குள்இருந்துள்ளனர். பின்னர் வெளியே வந்து பார்த்தபோது, பார்சலைக் கண்டுள்ளனர். பின்னர் அவர்களே பொலிஸாருக்கு

அறிவித்துள்ள
சென்றுள்ளனர்
களையிட்டு
ளின் அறியாமை

**கேள்வி: வடக்கு மாக
வில்லை. மக்களுக்கு
என்றெல்லாம் பரவ
கின்றன.நீங்கள் கூட
தாபித்திருக்கிறீர்கள்.
சபை இயங்காமைக்
எண்ணுகிறீர்கள்?**

பதில்: மாகாண
பொறுத்தவை
காணியும், பெ
குரியதாக இ
35 விடயங்க
விடயங்களாக
நாட்டில் இரு
களைத் தான்
அவ்வாறு மத்
மத்திய அடை
பாவிக்க அதி
றம் தீர்ப்பளித்
பரப்புக்கும் நா
களைக் கொ
யீட்டைக் கு
லாவது நிறுத்

வடக்கு மாகா
உருவாக்கப்பட
சபைக்குரிய
மையாக அனு
டம் என்னவெ
களே வடக்கு
டுள்ளன.

எமக்கான நி
மாகாணசபை
ருக்கோ அவ்
அக்கறையீன
செயற்றிட்ட
கடைசியாக
பக்கங்களில்
இன்றுவரை
நிறைவேற்ற
றும் தெரியவி

**கேள்வி: நியதிச் சட்ட
பொறுப்பு யாருடைய**

பதில்: அது
தான் அதனை
பெற்றபின்னர்
தலைவரிடம்


**கேள்வி: கூட்டுறவு
கும்போதே உருவா
நிறைவேற்றவில்லை
ஐங்கரநேசன் எம்பி
சட்டம் நிறைவேற்ற**

பதில்: அந்த
டேன். அது
குரிய தன்மை
தூரமான ப
ருந்தது. அ
வேற்ற வேண்
கள் இதில்
மைச்சருக்கு
சமர்ப்பித்த
பிரயோகம்
கத்தில் அ
நிறைவேற்ற
மென நினை

**கேள்வி: வடமாகா
மிருந்து பறிபோகும்
தான் காப்பாற்றிய
கே சிவஞானம் எதி**

பதில்: சரத்
போது, மஹி
தாகக் கூறி
நீதியையே
அவைத்தலை
நீதியாக நட
வர் பதவி ப
றுக்கொள்கி
தால், தவநா

# ...வர் தவராசாவின் ...ரணம் என்ன?



அறிவித்துள்ளனர். பொலிஸார் அதனை எடுத்துச் சென்றுள்ளனர். நான் இவ்வாறான செய்கை களையிட்டு கவலை அடைகின்றேன். அவர்க ளின் அறியாமையின் செயற்பாடுகள் தான் இவை.

**...வி: வடக்கு மாகாண சபை வினைத்திறனோடு பணியாற்ற ...லை. மக்களுக்குத் தேவையானவற்றைச் செய்யவில்லை ...ல்லாம் பரவலான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படு ...ன.நீங்கள் கூட பலமுறை சபையில் இது குறித்துப் பிரஸ் ...திருக்கிறீர்கள். ஆனால் அப்படி வினைத்திறனோடு மாகாண ... இயங்காமைக்கு அடிப்படைக் காரணம் என்னவென ...னுகிறீர்கள்?**

*...பதில்:* மாகாணசபையின் அரசியலமைப்பைப் பொறுத்தவரை 37 விடயங்கள் உள்ளன. இதில் ...காணியும், பொலிஸ்அதிகாரமும் இன்னும்சர்சைக் ...குரியதாக இருக்கின்றன. அதனை விட ஏனைய 35 விடயங்களும் எங்களுக்கென்று தரப்பட்ட விடயங்களாகஇருந்தும், நாங்கள். ஏற்கனவே இந்த நாட்டில் இருக்கின்ற -மத்திய அரசின் - சட்டங் களைத் தான் பாவித்துக் கொண்டிருக்கின்றோம். அவ்வாறு மத்தியின் சட்டங்களைப் பாவிப்பதால் மத்திய அமைச்சருக்கும் அந்தச் சட்டங்களைப் பாவிக்க அதிகாரம் உள்ளது என்று உச்சநீதிமன் ...றம் தீர்ப்பளித்துள்ளது. ஆனால், ஒவ்வொரு விடயப் பரப்புக்கும் நாங்கள் முழுமையான நியதிச்சட்டங் களைக் கொண்டு வந்தால் மத்திய அரசின் தலை ...யீட்டைக் குறைந்த பட்சம் இந்த 35 விடயங்களி ...லாவது நிறுத்தலாம்.

வடக்கு மாகாணசபையில் 300 நியதிச் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் மாகாண சபைக்குரிய உரிமைகளை எமது மக்களும் முழு ...மையாக அனுபவிக்க முடியும். ஆனால் துரதிர்ஷ் ...டம் என்னவென்றால், இதுவரை 9 நியதிச்சட்டங் ...களே வடக்கு மாகாண சபையில் உருவாக்கப்பட் ...டுள்ளன.

...மக்கான நியதிச் சட்டங்களை உருவாக்குவதில் மாகாணசபை உறுப்பினர்களுக்கோ, முதலமைச்ச ...ருக்கோ அவ்வளவாக அக்கறை கிடையாது. இந்த அக்கறையீனத்தால் மக்களுக்குத் தேவையான பல செயற்றிட்டங்கள் கூடத் திரும்பிச் சென்றுள்ளன. ...கடைசியாக நானே மீன்பிடி நியதிச்சட்டத்தை 28 ...பக்கங்களில் உருவாக்கிக் கொடுத்தேன். ஆனால் இன்றுவரை அதை சபையில் கொண்டு வந்து ...நிறைவேற்றவுமில்லை, அதற்கு என்ன நடந்ததென் ...றும் தெரியவில்லை.

**...: நியதிச் சட்டங்களைச் சபையில் கொண்டுவர வேண்டிய ...ப்பு யாருடையது?**

*...பதில்:* அது முதலமைச்சரின் பொறுப்பு. அவர் ...தான் அதனைச் சபையில் கொண்டு வந்து ஒப்புதல் பெற்றபின்னர், அதை நிறைவேற்றுவதற்கே அவைத் ...தலைவரிடம் கொடுக்கவேண்டும்.

**...: கூட்டுறவு நியதிச் சட்டத்தை தான் அமைச்சராக இருக் ...தே உருவாக்கியதாகவும், அதனை அவைத் தலைவர் ...வேற்றவில்லை என்று முன்னாள் வடமாகாண அமைச்சர் ...நேசன் எம்மிடம் தெரிவித்திருந்தார். ஏன் அந்த நியதிச் ...நிறைவேற்றாமல் கிடப்பில் இருக்கிறது?**

*...பதில்:* அந்த நியதிச்சட்டத்தை நானும் பார்வையிட் ...டேன். அது உண்மையில் ஒரு நியதிச் சட்டத்துக் ...குரிய தன்மைகளைக் கொண்டிருக்கவில்லை. பார ...தூரமான பல குறைபாடுகளை அது கொண்டி ...ருந்தது. அதைப் படித்துவிட்டு, "இதை நிறை ...வேற்ற வேண்டாம், நியதிச் சட்டத்துக்குரிய அம்சங் ...கள் இதில் இல்லை," என நான் கூட முதல ...மைச்சருக்குச் சொல்லியுள்ளேன். ஐங்கரநேசன் ...சமர்ப்பித்த அந்த நியதிச் சட்டத்தின் மொழிப் ...பிரயோகம் கூட, சட்டவாக்கத்துக்குரிய பிரயோ ...கத்தில் அமைந்திருக்கவில்லை. எனவே அதை ...நிறைவேற்றாமல் இருப்பதற்கு இதுதான் காரண ...மென நினைக்கிறேன்.

**...: வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் பதவி உங்களிட ...ம் பறிபோகும் நிலை ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் உங்களைத் ...காப்பாற்றியதாக , வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வி. ...ஞானம் எதிரொலிக்கு கூறியிருந்தார். அது பற்றி..?**

*...பதில்:* சரத் சில்வா பிரதம நீதிபதியரசாக இருந்த ...போது, மஹிந்த ராஜபக்சவைப் பலமுறை காப்பாற்றிய ...தாகக் கூறியுள்ளார். அங்கு அவர் உண்மையில் ...நீதியையே நிலைநாட்டியிருந்தார். அதேபோல, ...அவைத்தலைவர் சிவஞானமும் ஒரேயொரு முறை ...நீதியாக நடந்ததால், எனது எதிர்க்கட்சித் தலை ...வர் பதவி பறிபோகாமல் இருந்தது. அதனை ஏற் ...றுக்கொள்கிறேன். ஏனெனில் அவர் நினைத்திருந் ...தால், தவநாதனை எதிர்க்கட்சித் தலைவராக நிய மிக்கச் சம்மதித்திருக்கலாம். ஆனால் அவர் ஜன நாயக முறைப்படி, மிகச் சரியான தீர்மானத்தை எடுத்திருந்தார். ஆகவே அவர்என்னைக்காப்பாற்றி னார் என்று சொல்வதை விடவும் நீதியாக நடந்து கொண்டார் என்பதே பொருத்தமாக இருக்கும்.

**கேள்வி: நீங்கள் இப்போது எந்தக் கட்சியில் இருக்கிறீர்கள் என்ற சந்தேகம் பலருக்குண்டு. ஏனெனில் நீங்கள் சார்ந்த ஈ.பி.டி.பி தான், உங்களை எதிர்க்கட்சித் தலைவர் பதிவியில் இருந்து விலக்குமாறு கோரியிருந்தது. உங்களுக்கும் ஈ.பி.டி.பிக்கும் இடையிலான முரண்பாடுகள் தீர்ந்து விட்டனவா?இப்போதும் நீங்கள் ஈ.பி.டி.பி. உறுப்பினர் தானா?**

*பதில்:* நான் ஈ.பி.டி.பி மூலமே தெரிவுசெய்யப் பட்டு மாகாணசபைக்கு வந்தேன். இதுவரை என்னைக் கட்சியை விட்டு வெளியேறுமாறு கூறவோ, அல்லது எனக்கு எதிராக எவ்வித ஒழுக் காற்று நடவடிக்கையையுமோ கட்சி மேற்கொள்ள வில்லை. என்னை எதிர்க்கட்சித் தலைவர் பதவி யில் இருந்து அகற்றி தவநாதனை நியமிக்கு மாறு என்னைக் கேட்காமல் தான் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளருக்கு கடிதம் அனுப்பினார்கள். அதற்குப் பின்னர் நான் கட்சியோடு இணைந்தும் செயற்படவில்லை, எதிராக வும் செயற்படவில்லை. அதேவேளை, நானும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் தனிப்பட்ட முறையில் இன்னமும் உறவு பாராட்டியே வரு கின்றோம்.

**கேள்வி: இப்போது தமிழ் அரசியல் பரப்பில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் எந்தக் கட்சியினூடாக மாகாண சபைத் தேர்தலைச் சந்திக்கப்போகிறார் என்பதே பேசுபொருளாக இருக்கிறது. அதே போன்று இப்போதைய எதிர்க்கட்சித் தலை-வரான நீங்கள் எந்தக் கட்சியினூடாக மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வதாக உத்தேசம்?**

*பதில்:* நான் அரசியலில் இருந்தே ஒதுங்கப் போகின்றேன். அது பற்றித்தான் இப்போது யோசித்துக் கொண்டிருகின்றேன். ஏனெனில் நான் கிட்டத் தட்ட 18 வயதில் இருந்து அரசியலில் இருக் கின்றேன். மற்றையவர்களைப் போல் முந்தநாள் அரசியலுக்கு வந்தவனல்ல. ஆனால், இப்போது அரசியலைப் பற்றி எதுவுமே தெரியாத பலர், தங்களுடைய கொடி, கோஷங்களை எடுத்துக் கொண்டு உரிமை கொண்டாடுகிறார்கள். உதாரண மாக முள்ளிவாய்க்கால். அங்கு இறந்தது, கஷ்டப் பட்டது, தங்களை அர்ப்பணித்தது எல்லாம் யாரோ. ஆனால், இப்போது வேறுயாரோ கொடி பிடித்துகொண்டு நிற்கின்றார்கள். இந்த நினை வேந்தலில் கொடி பிடிப்பவர்களுக்கும், முள்ளி வாய்க்காலுக்கும் என்ன சம்பந்தம் உள்ளது என்று எனக்குத் தெரியாது. இவர்கள் எல்லாம் முள்ளி வாய்க்கால் யுத்தம் நடக்கும்போது தத்தம் அலு வல்களைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள்.

குறிப்பாக முதலமைச்சர். நான் நேரடியாகவே சொல்கின்றேன். அவர் இதுவரை காலமும் எங் கிருந்தவர்? மக்கள் இன்னல்கள், அவலங்களை அனுபவிக்கும் போது எங்கேயோ இருந்தவர், இன்றைக்கு வந்து நின்று கொண்டு தம்பி பிரபா-கரன் என்று பேசுகின்றார்கள். இவர்களுக்கு எல்லாம் என்ன அருகதை உள்ளது? நான் புலிகளுக்கு ஆதரவில்லைத் தான். ஆனால், போராட்டத்துக்கு ஆதரவு. போராட்டம் என் பது வேறு குறிப்பிட்ட அமைப்பின் சில செயற் பாடுகளைக் கண்டிப்பதென்பது வேறு. ஆரம்பத் தில் இருந்தே போராளிகளாக நாம் இருந்தி ருக்கின்றோம். முதன் முதல் வன்முறைக் கலாசா ரத்தை இந்தப் பிரதேசத்துக்குக் கொண்டு வந்த பங்கு எனக்கும் உள்ளது.

ஆனால், அன்றைக்குப்போராடாதவர்கள்எல்லோ ரும் இன்றைக்கு அந்தத் தகுதியைக் கையில் எடுத்து வைத்திருக்கின்றார்கள். இதனைப் பார்க் கும் போது அரசியலில் இருந்து ஒதுங்கி இருப் பதுநல்லதுஎனத்தோன்றுகின்றது. அடுத்தமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் திட்டம் இது வரை இல்லை. ஏனெனில் பொய் வார்த்தைகளைப் பேசி உணர்ச்சிபூர்வமாகப் பேசி வாக்குகளைப் பெற்று விட்டு, பின்னர் அதனை நிறைவேற்ற முடியாது. இது தான் அரசியலில் நடக்கின்றது. நடந்து கொண்டு இருக்கின்றது.

மாகாணசபைத் தேர்தலின் போது, மாகாண-சபையால் என்ன செய்ய முடியும் என்பதை மையப் படுத்தியே செயற்படவேண்டும். நாடாளுமன்றத் தில் செய்யவேண்டியதை, மாகாணசபையில் பேசி பிரயோசனம் இல்லை. மாகாணசபையின் அதிகார வரம்புக்கு அப்பாற்பட்ட விடயங்க ளைச் செய்ய முடியாது. அதிகார வரம்பில் உள்ள குறைபாடுகளைப் பற்றி பேச முடியும். அப்பாற்பட்ட விடயங்களைப் பேச மாகாண சபை பொருத்தமான இடம் இல்லை. ஆனால் இதுதான் மாகாணசபையில் நடந்து கொண்டிருக் கின்றது.

**கேள்வி: அரசியலில் ஒதுங்குவதாகச் சொல்கிறீர்கள். ஆனால் ஊடவியலாளர் வித்தியாதரனும் நீங்களும் இணைந்து 'முன் னோக்கிநகர்வோம்' என்ற அமைப்பை ஆரம்பித்திருக்கிறீர்களே. அது அரசியல் ரீதியான உங்கள் செயற்பாட்டினைத் தக்கவைப் பதற்காகத் தானே உருவாக்கப்பட்டது?**

*பதில்:* அது அமைப்பல்ல. ஒரு வேலைத்திட்டம். இன்னும் தெளிவாகச் சொன்னால் ஒரு வினைத் திறனான அழுத்தக் குழு. அரசியலில் இருந்து நான் ஒதுங்கினாலும் 'முன்னோக்கி நகர்வோம்' மூலம் எனது செயற்பாடுகள் தொடரலாம்.

**கேள்வி: அப்படியானால் 'முன்னோக்கி நகர்வோம்' அரசியல் நலனை நோக்காகக் கொண்டதல்ல. அப்படியா?**

*பதில்:* இதில் உள்ளவர்கள் அரசியலுக்குப் போக லாம். அதில் எந்தவொரு பிரச்சினையுமில்லை. இன்றைக்கு வெளிநாடுகள் தீர்க்கமான கொள்கை முடிவுகளைஎடுப்பதில்இத்தகைய அழுத்தக்குழுக் களே இயங்குகின்றன. குறிப்பாக இந்தியாவில் பெண்களுடைய பிரதிநிதித்துவத்தைக் கொண்டு வருவதற்கும் இத்தகைய குழுக்களே காரணமாக இருந்தன.

**கேள்வி: 'முன்னோக்கி நகர்வோம்' உருவாக்கத்தின் பின் னணியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திர குமாரும், ஊடக நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தக்காரரும், ஜனாதிபதியின் இணைப்பாளர்களில் ஒருவருமான குக்நாத னுமே இருப்பதாகச் சொல்லப்படுகிறதே?**

*பதில்:* இதில் யார் வேண்டுமானாலும் இணைய-லாம். அப்படி ஏன் சொல்கிறார்கள் என்றால், முன்னோக்கி நகர்வோம் செயற்படுகின்ற வீடு, முன்னர் ஈ.பி.டி.பி இருந்த வீடு. பின்னர் அதனைச் சந்திரகுமார் வாடகைக்கு எடுத்திருந்தார். இப் போது குகநாதன் அந்த வீட்டை தனது வியாபார நடவடிக்கைக்காக வாடகைக்குப் பெற்றுள்ளார். அந்த வீட்டின் ஒரு பகுதியை எமது 'முன்னோக்கி நகர்வோம்' செயற்பாட்டுக்காகத் தந்துள்ளார். கிட்டத் தட்ட ஒரு வருடமாக தொடர்ச்சியாக பலருடன் கலந்துரையாடியதன் அடிப்படையிலேயே இது உருவாக்கப்பட்டது. எனவே அங்குரார்ப்பண நிகழ்வில் அவர்களில் சிலர் வந்திருந்தனர். அந்த அடிப்படையிலேயே அன்றைக்கு குக நாதனும், சந்திரகுமாரும் வந்தனர். இதைத் தவிர அவர்களுக்கும், முன்னோக்கி நகர்வோம்' அழுத்தக் குழுவுக்கும் வேறு தொடர்பில்லை. .




# முயன்றால் முடியும்

அவனுடைய பெயர் செந்தில். அவன் கல்வி கற்கும் பாடசாலை, வசதிகள் குறைந்த கிராமம் ஒன்றில் அமைந்துள்ளது. பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் முதலிடம் பெற்ற அவனை, ஆசிரியர் ஒருவர் வெளியூர்ப் பாடசாலை ஒன்றுக்கு விளையாடுவதற்குக் கூட்டிச் சென்றார். போட்டிகள் அங்கு ஆரம்பமாகின. செந்தில் அனைவரையும் சுற்றிப்பார்த்தான். அங்கு அனைவரும் சப்பாத்துக்களுடனும், உரிய விளையாட்டு உபகரணங்களுடனும் இருந்தனர். அனைவரும் நகரப் பாடசாலை மாணவர்களாகவே இருந்தனர். செந்திலோ வெற்றுக் கால்களுடன் நின்றான். அவனைப் பார்த்து எல்லோரும் ஏளனம் செய்வார்கள் என வருந்தினான். அத்துடன் அங்கு வந்திருந்த மாணவர்கள் எல்லோரும் பார்ப்பதற்கு திடகாத்திரமாக இருந்தார்கள். வெற்றுக்கால்களுடன் மெலிந்த சிறிய தோற்றம் கொண்ட செந்திலை அவர்கள் ஏளனமாகப் பார்த்தார்கள். அப்பொழுது அவனுடைய ஆசிரியர் அருகில் வந்தார். " அடுத்தது நீ தான் " என்றார். அவன் துயரத்தைக் களைந்தான். நம்பிக்கையோடு ஓடினான். அனைவரும் தத்தம் பாடசாலை மாணவர்களின் பெயர்களைக் கூறி உற்சாகமாகக் கூச்சலிட்டார்கள். இதுவே அவனுடைய பாடசாலையாக இருந்தால் "செந்தில் ஓடு" என்று கூச்சலிட்டு இருப்பார்கள். இருந்தாலும் அவன் மிக வேகமாக ஓடினான். இலக்கை அடைந்தான். அப்போது "செந்தில் முதலிடம் " ஒலிபெருக்கியில் அவன் பெயர் ஒலித்தது. கரகோசம் வானைப் பிளந்தது. செந்தில் நம்பிக்கையை இழந்திருந்தால் இந்த வெற்றி அவனுக்குக் கிடைத்திருக்காது. சப்பாத்து இல்லை என்றால் என்ன? உறுதியான கால்களை இறைவன் தந்திருக்கின்றார். அதை பயன்படுத்துவோம். வெல்வோம்.

**-றெஜினோல்ட் றெஸ்மி**
**யாழ். இந்து மகளிர் கல்லூரி**

## அறிந்து கொள்ள...

- அடி முதல் நுனி வரை நம் நகங்கள் வளர 6 மாத காலம் ஆகிறது.
- தும்மலின் வேகம் மணிக்கு 160 கிலோ மீற்றர்.
- கார் டயரை விடவும் பெரிதான மலர் இந்தோனேஷியாவில் மலர்கிறது. இதுவே உலகின் மிகப்பெரிய மலர்.
- மூளை அனுப்பும் செய்திகள் நரம்புகள் வழியாகப் பயணிக்கும் வேகம் மணிக்கு 312 கிலோ மீற்றர்.
- கரப்பான் பூச்சிகளால் நீருக்கடியிலும் 15 நிமிடங்கள் உயிர்வாழ முடியும்.
- 5 ஆயிரம் ஆண்டுகள் வயதான மரங்கள் பூமியில் உள்ளன.



# குடை பிறந்த கதை

மழையில் இருந்து பாதுகாத்துக்கொள்வதற்கே இன்று பெரும்பாலும் குடையைப் பயன்படுத்துகிறோம். ஆரம்பக் காலத்தில் வெயிலில் இருந்து பாதுகாத்துக்கொள்வதற்கே குடை பயன்படுத்தப்பட்டது.

4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சீனாவில் குடை போன்ற ஒரு பொருளைப் பயன்படுத்த ஆரம்பித்துவிட்டனர். இது வெயிலில் இருந்து மனிதர்களைக் காப்பாற்றியது. பின்னர் எகிப்து நாட்டில் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், செல்வந்தர்கள், மதகுருமார்கள்ஆகியோர் மட்டும் வெயிலுக்குக் குடை பிடிக்க ஆரம்பித்தனர்.

கி.மு. 11 ஆம் நூற்றாண்டில் சீனாவில் மழையிலும் பயன்படுத்தக் கூடிய, தண்ணீர் புகாத குடைகள் உருவாக்கப்பட்டன. 5 ஆம் நூற்றாண்டில் ரோமானியர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு, ஐரோப்பாவில் குடை காணாமல் போனது. 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் காரணமாகக் காணாமல் போன குடைகள் மீண்டும் வந்தன. 18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா, வட அமெரிக்கா முழுவதும் குடைகள் பரவின. அதிக அளவில் குடைகளை உற்பத்தி செய்யும் நாடு எது தெரியுமா? குடையைக் கண்டுபிடித்த சீனாதான். ஆயிரக்கணக்கான குடை நிறுவனங்கள் அங்கே இருக்கின்றன.



# கதை கேளு... கணக்குப்போடு...



ஒரு குளத்தின் நடுவில் தாமரைப் பூக்கள் சில மலர்ந்து காண்பவர் கண்களைக் கவர்ந்து கொண்டிருந்தன. அந்தக் குளத்தை நோக்கிச் சில வண்ணத்துப் பூச்சிகள் பறந்து வந்தன. குளத்தில் மலர்ந்திருந்த தாமரைப் பூக்களின் அழகு வண்ணத்துப் பூச்சிகளின் கண்களைக் கவர்ந்தன.

தாமரைப் பூக்களின் அழகு வண்ணத்துப்பூச்சிகளின் மனங்களைக் கொள்ளை கொண்டன.சிறிதுநேரம் இந்தப் பூக்களின்மீது அமர்ந்து தேனருந்தி, இளைப்பாறிச் செல்லலாம் என்று ஒரு வண்ணத்துப்பூச்சி கூறியது. மற்றைய வண்ணத்துப்பூச்சிகளும் மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டன.

ஒவ்வொரு பூவின்மீதும் ஒரு வண்ணத்துப்பூச்சி சென்று அமர்ந்தது. அப்போது ஒரு வண்ணத்துப்பூச்சிக்கு மட்டும் உட்காருவதற்குப் பூ கிடைக்கவில்லை.எனவே, ஒரு பூவுக்கு மேல் இரண்டு வண்ணத்துப் பூச்சிகள் வீதம் அமர்ந்து தேனருந்தி, இளைப்பாற முடிவுசெய்தன. ஒவ்வொரு பூவிலும் இரண்டு வண்ணத்துப்பூச்சிகள் அமர்ந்தன. அப்போதும் ஒரு பூ மட்டும் மீதி இருந்தது. அப்படியானால், குளத்தில் இருந்த மொத்தப் பூக்கள் எத்தனை? அதில் தேனருந்தி இளைப்பாற வந்த வண்ணத்துப்பூச்சிகள் எத்தனை?

## அறிவியல் விடுகதை

1. என்னைப் பார்க்க முடியும். எனக்கு நிறை கிடையாது. என்னை ஒரு பாத்திரத்தில் போட்டால் அதன் அளவைக் குறைத்திடுவேன். நான் யார்?

2. பார்க்க முடியாது பிடிக்கவும் முடியாது. வாயில்லை. ஆனால் ஓசை எழுப்பும்?

3. மயிலிறகைவிட மென்மையானவன். ஆனால் மனிதர்களால் அதிக நேரம் பிடித்து வைக்க முடியாது.

4. உயிரில்லை, ஆனால் வளரும். நுரையீரல் கிடையாது. ஆனால் க்காற்று அவசியம் ?

**விடைகள்**
1. துவாரம்
2. காற்று
3. சுவாசம்
4. தீ



## கதை சொல்வோம்...

சிறுவர்களே! உங்கள் கற்பனை உலகத்தில் உருவாகும் கதைகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தரமான கதைகள் எதிரொலி வாரமலரில் பிரசுரமாகும் .

அனுப்ப வேண்டிய முகவரி....

**'கதை சொல்வோம்'**
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி - மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
**அல்லது**
ethirolimedia@gmail.com

## வித்தியாசம் கண்டுபிடியுங்கள்







# தவிக்கும் வாய்களுக்கு கிடைக்குமா தண்ணீர்?

● நிரோஷா ரமேஷ்

"என்ர வீட்டில இருந்து 500 மீற்றருக்கு அங்காலதான் எப்பயாவது ஒரு நாளைக்கு இந்த சர்வோதயக்காரர் தண்ணி தாறாங்கள். இந்தத் தள்ளாடுற வயசில தண்ணிக்காக தெருத் தெருவா அலையிறன். அப்பிடி தண்ணி கிடைச்சாலும் அந்தளவு தூரத்தில இருந்து தூக்கி கொண்டு நான் எப்பிடி வருவன்? என்ர மகளும் வலது குறைஞ்சவள். நான் இதிலேயே சாகப்போறன் "இந்த தழுத்த அவலக் குரலுக்குச் சொந்தமான மூதாட்டிக்கு 80 வயது. அவருக்குச் சொந்தம் என்று சொல்லிக் கொள்ள மாற்றுத்திறனாளியான ஒரே ஒரு மகள் மட்டுமே உள்ளார். எங்கு திரும்பினாலும் நல்ல தண்ணீர் பற்றிய பேச்சும், தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கான போராட்டங்களுமாகவே இருக்கின்றன. இது தென்னாபிரிக்காவிலோ, இந்தியாவிலோ ஒலிக்கும் குரல்கள் அல்ல. எமக்கு மிக அருகில் உள்ள தீவக மக்களின் அவலக் குரல்கள் தான்.

**உணவில் கொஞ்சம் உப்புக் கூடினாலே அந்த உணவைக் கொட்டி விடுவோம். ஒரே ஒரு நாள் கூட அந்த உப்பை எம்மால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. ஆனால், காலா காலத்துக்கும், தலைமுறை தலைமுறையாக அந்த உப்புத் தண்ணீரின் கரிப்பைத் தாங்கி வாழும் தீவக மக்களால், தண்ணீர் விடயத்தில் அரச அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் காட்டும் அலட்சியத்தின் கரிப்பைத்தான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.**



மாட்டிறைச்சிக்காகவும், மஸ்தானுக்காகவும், ஜல்லிக்கட்டுக்காகவும், தூத்துக்குடிக்காகவும் போர்க்கொடி தூக்கிக்கொண்டிருக்கும் நமக்கு, நம் தாய் வீட்டு உறவுகள் தண்ணீருக்காகப் போராடுவது பற்றி தெரிந்திருக்க வாய்ப்போ, நேரமோ இல்லை என்பதில் அதிசயம் ஒன்றுமில்லை. ஆனால், தண்ணீருக்காகக் கண்ணீர் சிந்தும், போராடும் கூட்டம் எம் நிலத்திலும் உள்ளது.

முப்பது வருடகால யுத்தத்துக்குப் பின்பு இன்னும் முழுமையாக மக்கள் மீள்குடியமராத பகுதியாக தீவகம் உள்ளது. இங்குள்ள மக்களின் முக்கிய பிரச்சினை வளமான குடிதண்ணீர் இல்லாமை. அதாவது இங்கு உவர் நீரே உள்ளது. உணவில் கொஞ்சம் உப்புக் கூடினாலே அந்த உணவைக் கொட்டி விடுவோம். ஒரே ஒரு நாள் கூட அந்த உப்பை எம்மால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. ஆனால், காலா காலத்துக்கும், தலைமுறை தலைமுறையாக அந்த உப்புத் தண்ணீரின் கரிப்பைத் தாங்கி வாழும் தீவக மக்களால், தண்ணீர் விடயத்தில் அரச அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் காட்டும் அலட்சியத்தின் கரிப்பைத்தான் ஏற்று கொள்ள முடியவில்லை.

தீவகமக்கள் அனைவரும் சாட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளில் இருந்து வரும் தண்ணீரை நம்பியே வாழ்கின்றார்கள். அங்குள்ள தண்ணீரை பவுசர்களில் ஏற்றி வந்து, புங்குடுதீவு, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு வீடு வீடாகச் சென்று தனிப்பட்ட சிலரும், சர்வோதயம் என்ற நிறுவனமும், புங்குடுதீவு ப.நோ.கூ. சங்கமும் விநியோகித்து வந்தனர். அரச நிதி ப.நோ.கூ சங்கத்துக்கும், சர்வோதயத்துக்கும் வழங்கப்பட்டு, அதனூடாக இலவசமாக ஒவ்வொரு வீட்டுக்கும் குறிப்பிட்டளவான குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டது. மேலதிக நீரைப் பெற விரும்பினால் சர்வோதயம் பணத்துக்கும் நீர் விநியோகித்தது. அதேபோன்றே தனியாரும் பணத்துக்கு நீரை வழங்கி வந்ததால், குடிநீர் பற்றி பெரியளவிலான பிரச்சினைகள் எழவில்லை.

ஆனால், வேலணைப் பிரதேச செயலகத் தீர்மானத்தின் படி தனியார் பவுசர்கள் இங்குள்ள நீரை வழங்க முடியாத நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. புங்குடுதீவு சர்வோதயம் என்னும் தனியார் நிறுவனத்துக்கே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தொண்டு நிறுவனம் என அடையாளப்படுத்தப்பட்டாலும், உண்மையில் ஒரு தனிப்பட்ட வியாபார நிறுவனமாக இயங்கி வரும் புங்குடுதீவு சர்வோதயம் குடிதண்ணீரை மக்களுக்கு சீராக விநியோகிப்பதில்லை என தீவக மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தண்ணீர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட சர்வோதயம், அதனைச் சரியாக நடைமுறைப்படுத்தவில்லை. தண்ணீர் கொண்டு வருவதில் ஒரு ஒழுங்கைக் கடைபிடிப்பதில்லை. எப்போதும் இருக்க வேண்டிய அத்தியாவசியமான வளம் தண்ணீர். ஆனால், அந்த நிலைமை மாறி, தண்ணீர் எப்போதாவதுதான் வரும் என்ற நிலைமையை தீவகத்தில் சர்வோதயம் ஏற்படுத்தி உள்ளது. ஆனால் இந்த ஒப்பந்தம் காரணமாக அவர்களுக்கு மாதாந்தம் 8 இலட்சம் வருவாய் கிடைக்கவுள்ளது . ஒவ்வொரு நாட்களும் தண்ணீர் விநியோகம் செய்யவே பிரதேச செயலகம் ஊடாக சர்வோதயத்துக்குப் பணம் வழங்கப்படுகிறது . ஆனால் பெரும்பாலான இடங்களில் மூன்று நாட்களுக்கு ஒரு தடவையும் , சில இடங்களில் கடந்த பத்து நாட்களுக்குக் கூடத் தண்ணீர் விநியோகிப்படவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கிய நீரையும், சர்வோதயம் தினமும் வியாபார நிலையங்களுக்கும் , கோயில் கட்டட நிர்மாண வேலைகளுக்கும் பணத்துக்கு விற்றுச்செல்வதும் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், தமக்கு வேண்டியவர்களுக்கு மாத்திரம் தொடர்ச்சியாக சர்வோதயம் நீர் வழங்குகின்றதும் என்றும் சர்வோதயத்துக்கு எதிராகத் தொடர்குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. மேலும், சர்வோதயம் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற திட்டத்தால் மக்கள் தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கு பல கீலோ மீற்றர்கள் அலைய வேண்டியுள்ளது. பெரும்பாலான நாட்களில் தண்ணீர் விநியோகிக்கப்படாததால் மக்கள் ஏமாற்றத்துடன் வெற்றுக் குடங்களுடனும், வறண்ட நாக்களுடனும் வீடு திரும்புகின்றனர். இல்லாவிட்டால் பக்கத்து வீட்டில் கடன் வாங்க இது வேறு பொருளல்ல. உயிர் வாழ அத்தியாவசியமான தண்ணீர். இதனை எங்கு சென்று தான் வாங்குவார்கள் அந்த அப்பாவி மக்கள்.

ஆனால், கடந்த காலங்களில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பொது நிறுவனமான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் மக்களுக்கு குடிதண்ணீரை வழங்கியது. இலங்கையின் ஏனைய பிரதேசங்களிலும் அந்த நடைமுறைதான் உள்ளது. ஆகவே இந்த ஏகபோக உரிமையை உடனடியாக இரத்துச் செய்து, புங்குடுதீவுக்குத் தினமும் நான்கு பவுசர்கள் என்ற அடிப்படையில் சர்வோதயத்துக்கு ஒன்று, புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஒன்று, புங்குடுதீவு சென் சேவியர் கத்தோலிக்க தேவாலயத்துக்கு ஒன்று, தனியாருக்கு ஒன்று என்றவாறு மண்கும்பான், சாட்டியில் தண்ணீர் ஏற்றுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்பதே தீவக மக்களின் கோரிக்கையாக உள்ளது.

இதேவேளை, சாட்டி, மண்கும்பான் பகுதிகளில் முகாம் கடற்படையினர் தினமும் 12 ஆயிரத்து 500 லீற்றர் கொள்ளளவு உடைய பவுசரில் ஏழு , எட்டு தடவைகள் தண்ணீர் ஏற்றிச்சென்று குளிப்பதற்கும், ஆடைகள் கழுவுவவதற்கும் பயன்படுத்துகின்றனர். இதனைத் தடைசெய்யுமாறு சூழகம் என்ற அமைப்பினர் பலதடவைகள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதில் வேடிக்கை என்னவென்றால் தமிழ் மக்களோடு எல்லா விடயத்திலும் பங்கு போடும் படையினர், இறுதியில் தண்ணீரையும் விட்டு வைக்கவில்லை.

(17ஆம் பக்கம் பார்க்க)



# ~~சிறப்பு~~ சித்திரவதை முகாம் 2

தோழர் பாலன்

**ஜெயா அம்மையார் சிறப்பு முகாம்கள் குறித்து எடுத்த நடவடிக்கைகள் என்ன?**

பொதுவாக கலைஞர் திட்டங்களுக்கு எதிராகச் செயற்படும் குணம் கொண்ட ஜெயா அம்மையார் கலைஞர் ஆரம்பித்த சிறப்பு முகாம்களை மூடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவரோ செங்கல்பட்டு, பூந்தமல்லி, மேலூர், துறையூர், திருவையாறு, பழனி என பல்வேறு இடங்களில் இருந்த கிளைச் சிறைகளில் புதிய சிறப்பு முகாம்களை உருவாக்கினார். ராஜீவ்காந்தி கொலையைக் காரணம் காட்டி பல அப்பாவி அகதிகளைப் பிடித்துச் சிறப்பு முகாம்களில் அடைத்தார்.

கலைஞரும் ஜெயா அம்மையாரும் ஒற்றுமையாக செயற்பட்ட ஒரேயொரு விடயம் இந்த சிறப்பு முகாம் விடயம் மட்டுமே! ஈழ அகதிகளை சிறப்பு முகாமில் அடைத்து துன்புறுத்துவதில் இருவரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை என்பதை தங்கள் ஆட்சிக் காலங்களில் நன்கு நிரூபித்தார்கள்.

**சிறையை விடக் கொடிய சித்திரவதை முகாம் என சிறப்பு முகாம் ஏன் கருதப்படுகிறது?**

சிறைச்சாலையானது கொடிய சித்திரவதைகள் நிறைந்த இடம் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் அந்த சிறைகளில் வழங்கப்படும் அற்ப சலுகைகள் கூட சிறப்பு முகாம்களில் வழங்கப்படுவதில்லை. அதனால் தான் சிறப்புமுகாம் சிறையைவிடக் கொடிய சித்திரவதை முகாம் எனக் கருதப்படுகிறது.



சிறையில் அடைக்கப்படும் கைதிகள் பராமரிப்பு மற்றும் உரிமைகள் தொடர்பாக சிறை விதிகள் உண்டு. ஆனால் இந்த சிறப்பு முகாமில் அடைக்கப்படும் அகதிகள் உரிமைகள் தொடர்பாக எந்த விதியும் இல்லை. இதனால் இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு ஒன்றில் (WP 15044/91) உயர்நீதிமன்ற நீதிபதிகள் அருணாசலம் மற்றும் பிரதாப்சிங் அவர்கள் வழங்கிய தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பது என்னவெனில்,

(1) சிறப்பு முகாமில் உணவு வழங்குவதற்கும், நிர்வகிப்பதற்கும் பொறுப்பாக ஒரு உதவி தாசில்தார் நியமிக்கப்பட்டுள்ளார்.
(2) சிறப்பு முகாமில் வைக்கப்படுபவர்களுக்கு அவர்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப் பட்டுள்ளதேயன்றி மற்றும்படி அனைத்து உரிமைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
(3) சிறப்பு முகாமில் வைக்கப்பட்டவர்கள் விரும்பினால் குடும்பத் தலைவர்களை வரவழைத்துத் தங்களுடன் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இக் குடும்பத்தவர்களின் செலவையும் அரசே ஏற்றுக் கொள்ளும்.
(4) சிறப்பு முகாமுக்குள் இருப்பவர்களை சிறையில் சிறைவாசிகளை 'லாக்கப்" செய்வதுபோல் (செல்களில் வைத்துப் பூட்டுதல்) செய்வது கூடாது. முகாமின் எல்லைக்குள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப் படுவார்கள்.

[சித்திரவதை தொடரும்]

## இந்த வாரம் உங்களுக்கு... (27 ஜூன் - 03 ஜூலை 2018)

### மேடம்

இந்தவாரம் உங்களுக்கு தொட்டதெல்லாம் துலங்கும். தடைகளெல்லாம் நீங்கும். இழுபறியாக இருந்து வந்த வேலைகள் முடிவடையும். அரசு சம்பந்தப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வழக்குகள் சாதகமாகும். சிலருக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். வேலைக்கு விண்ணப்பித்துக் காத்திருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும்.

### கடகம்

வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். பால்ய நண்பர்கள் உங்களைத் தேடி வருவார்கள். தடைப்பட்ட காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். கணவன் மனைவிக்குள் ஒற்றுமை அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். சகோதர வகையில் மனக்கசப்புகள் தொடரும். கலைத்துறையினருக்கு கிசு கிசுத் தொல்லைகள் வரும். உங்களின் படைப்புகளை இரகசியமாக வையுங்கள்.

### துலாம்

பெரிய பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். அக்கம் பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். பழைய கடன் பிரச்சினைகள் தீரும். பணவரவு திருப்தி தரும். திருமண முயற்சிகள் கை கூடும். வாகனத்தைச் சீர் செய்வீர்கள். சிலர் புது வாகனம் வாங்குவீர்கள். மாணவர்களுக்குப் படிப்பில் ஆர்வம் உண்டாகும். கன்னிப் பெண்களுக்கு காதலில் வெற்றி உண்டு. வியாபாரம் செழிக்கும்.

### மகரம்

கல்வியாளர்களின் நட்பு கிட்டும். வீண் சந்தேகத்தால் சிலரின் நட்பை இழக்க நேரிடும். அவசரப்பட்டு சில வார்த்தைகள் சொல்லி அதனால் மனக்கசப்புகள் ஏற்படக்கூடும். அதனால் அதிரடிப் பேச்சுகளைக் குறைப்பது நல்லது. பெரிய முதலீடுகள் செய்ய வேண்டாம். அரசியல்வாதிகள் எதிர்க்கட்சியிரைத் தாண்டி முன்னேறுவர்.

### இடபம்

செலவுக்குப் பணம் வரும். கொடுக்கல், வாங்கலில் இருந்து வந்த சிக்கல்கள் தீரும். உறவினர்கள் எதிர்பார்ப்புகளுடன் பேசுவார்கள். நட்பு வட்டம் விரியும். அரசியல்வாதிகள் தலைமைக்கு நெருக்கமாவார்கள். மாணவர்களுக்கு எதிர்பார்த்த கல்வி நிறுவனத்தில், விரும்பிய பாடப் பிரிவில் உயர் கல்வி தொடரும் வாய்ப்பு கிட்டும். கன்னிப் பெண்களின் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும்.

### சிம்மம்

பூர்வீகச் சொத்தை அதிகம் செலவு செய்து பராமரிக்க வேண்டி வரும். எதிர்த்தவர்கள் நண்பர்களாவார்கள். இயக்கம், சங்கம் ஆகியவற்றில் கௌரவப் பதவிகள் தேடி வரும். கணவன் மனைவிக்குள் நெருக்கம் கூடும். பெண்களுக்கு புது வேலை கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி இலாபம் கிடைக்கும்.

### விருச்சிகம்

பணப்பற்றாக்குறை, வீண் செலவு ஏற்படும். பிரபலங்களின் நட்பை இழக்க நேரிடும். வருங்காலத்தை நினைத்து கவலைப்படுவீர்கள். மனைவி வழி உறவினர்கள் ஆதரவாகப் பேசுவார்கள்.

மாணவர்கள் புதிய நண்பர்களால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புதியவர்களை நம்பி பெரிய முதலீடுகள் செய்ய வேண்டாம்.

### கும்பம்

அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். கர்ப்பிணிப் பெண்கள் கொஞ்சம் கவனமாக இருங்கள். மருத்துவரின் ஆலோசனையின்றி எந்த மருந்தையும் உட்கொள்ள வேண்டாம். அரசியல்வாதிகளுக்குள் உட்கட்சிப் பூசல் வெடிக்கும். வெளிப்படையான விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் கலைத்துறைகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

### மிதுனம்

மிதுன இராசியினருக்கு சகோதரர்களுடன் மனத்தாங்கல் ஏற்படும். தூக்கமின்மை, கனவுத் தொல்லை வரக்கூடும். குடும்ப அந்தரங்க விடயங்களை யாரிடமும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். மாணவர்களுக்கு, உயர் கல்வி விடயத்தில் இருந்த குழப்பம் நீங்கும். பெண்களே உங்களை ஏமாற்றி வந்த சிலரிடமிருந்து விடுபடுவீர்கள்.

### கன்னி

சகோதரர்களால் நிம்மதி இழப்பீர்கள். தாய் மாமா, அத்தை வழியில் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வார்கள். குழம்பிக் கொண்டிருந்த நீங்கள், தெளிவாக முடிவுகள் எடுப்பீர்கள். மதிப்பு, மரியாதைக் கூடும். சிலரின் சுயரூபத்தை அறிந்து கொண்டு வருத்தப்படுவீர்கள்.

### தனுசு

முன்கோபத்தைத் தவிர்க்கப் பாருங்கள். உணர்ச்சி வசப்பட்டு பேசுவதையும் தவிர்ப்பது நல்லது. மனைவிவழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளி வட்டாரத்தில் அந்தஸ்து உயரும். ஒருவித படபடப்பும் இருக்கும். சகோதர, சகோதரிகள் உதவுவார்கள். கணவன் மனைவிக்குள் ஒற்றுமை பிறக்கும். மனைவி உங்களின் புது முயற்சியைப் பாராட்டுவார்.

### மீனம்

தாய்வழிச் சொத்தைப் பெறுவதில் இருந்து வந்த தடைகள் நீங்கும். தாயாரின் ஆசீர்வாதமும் கிடைக்கும். எதிர்பார்த்த விலைக்கே பழைய மனையை விற்பீர்கள். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். அரசியல்வாதிள் இழந்த பதவியை மீண்டும் பெறுவீர்கள். மாணவர்கள் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெறுவீர்கள் .

# உரு கொண்டது யார்?

## ஓர் இரசனைக் குறிப்பு




**யாமினி**

"அப்பா அல்லது அம்மா வந்த பின் முற்றத்தில் பொங்குவோம்" என்றிருக்கும் எம் தேசத்துப் பிஞ்சுகளுக்காக,

"அண்ணா வந்த பின் என் கழுத்தில் தாலி ஏறட்டும்" என்றிருக்கும் எம் தங்கைகளுக்காக,

"மகன் வந்த பின் என் ஆவி பிரியட்டும்" என்றிருக்கும் எம் அன்னைகளுக்காக உருக்கொள்ள வாரீர்! என்று தான் அழைக்கப்பட்டோம். இந்த அழைப்புக்கள் கொண்ட ஒரு சமூகம், அந்த ஒரு சமூகத்தில் ஓங்கி ஒலித்த ஒரு குரல் என்பதாக ஞானதாஸ் காசிநாதரின் 'உரு' குறுந்திரைப்படத்தை அணுகலாம் . இலங்கைத் தமிழ் சினிமாவில் தாயகம் சார்ந்த படைப்புக்கள் ஆங்காங்கே வெளிப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. யுத்தம் முடிவடைந்து ஆண்டுகள் கரைந்தோடினாலும் அதன் வடுக்களும் நினைவுகளும் அப்படியே தான் இருக்கின்றன. மக்கள் சார்ந்த பிரச்சினைகளை வெளிப்படுத்தி சில படங்கள் வந்துள்ள நிலையில், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான எண்ணக் கருவைக்கொண்டு வெளிவந்த முதல் திரைப்படம் இது எனலாம்.

பொதுவாக எமது சமூகத்தில் திரைப்படங்களினூடாகத் தீர்வுகள் தேடப்படுகின்றன. ஆனால், என்னைப் பொறுத்த வரை திரைப்படங்கள் தீர்வாக அமைந்து விடாது. அது வழிகாட்டுதலாகவோ அல்லது ஒரு செய்திப் பரப்பு ஊடகமாகவோ மட்டுமே இருக்க முடியும். நாம் முடிவையோ அல்லது ஒரு தீர்வையோ நமக்குள் தெளிந்து கொள்ள முடியும். அது திரைப்படம் நமக்குத் தந்த எழுச்சியாகவே இருக்கும். இந்தத் திரைப்படம் தான் கருக்கொண்ட ஒரு சிக்கலை உடைத்து அதாவது காணாமல் ஆக்கபட்டோர் தொடர்பான ஒரு பிரச்சினையை எடுத்து அதன் மூலம் தனிமைப்படுத்தப்பட்டதாக உணரும் ஒரு குடும்பத்துக்கு, நீங்கள் தனியாக இல்லை, உங்களுக்காக ஒரு சமூகம் உண்டு என்று உரத்துக் கூறியிருப்பதாகவே நான் உணர்கின்றேன் .

இந்தக் குறுந்திரைப்படத்தில் தாய் கதா பாத்திரம் சிறப்பாக கட்டமைக்கப்பட்டுள்ளது. அதற்கு இயக்குநரைப் பாராட்டியே ஆகவேண்டும். தன் மகனது பொருட்களைத் தொடர்ந்து பாதுகாத்தல், அவன் வயதொத்தவர்களைக் காணும் போது அதாவது அவன் காணாமல் ஆக்கப்பட்ட போது இருந்த வயதை ஒத்தவர்களைக் காணும் போதும், அவன் நண்பர்களைக் காணும்போதும் தன் மகன் மீதான உணர்வு கிளர்ந்து வெளிவருகின்றது. ஒரு நேரம் கோபம் ஒரு நேரம் சாந்தம் அதுவும் குறிப்பாக தாயிடமிருந்து கன்றைப் பறிக்கையில் துடித்துப்போகும் உணர்ச்சியும், கணவன் தன்னைக் கடந்து செல்கையில் அவரைத் தொடர்ந்த அந்த கண்கள். அப்பா! ஆயிரம் அர்த்தங்கள் சொல்லலாம் அதற்கு. ஜெயரஞ்சனி தனது கதா பாத்திரத்தைச் சிறப்பாகவே வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இந்த ஓர் உணர்வை உடையவர்களை நான் கண்கூடாகக் கண்டிருக்கின்றேன். எனது வீட்டுக்கு அருகாமையில் இருக்கும் பெண்ணொருவரின் மகன் யுத்தகாலத்தில் காணாமல் போயிருந்தார். சிலவேளைகளில் அவரை எங்கேயோ கண்டதாக யாரும் சொல்வதைக் கேட்டு அவர் திடீரென்று தனியாகவே அங்கு அவரைத் தேடிச் சென்றுவிடுவார். அவர் என்னை அன்றுதான் முதன் முதலில் பார்த்தார். ஆனால் பார்த்துச் சில கணங்களுக்குள்ளேயே அவரது மகனது புகைப்படத்துடன் வந்து இது என் மகன் அவன் அப்படிச் செய்வான் இப்படிச் செய்வான் என்று அவரைப்பற்றியே பேசத் தொடங்கி விட்டார். அத்தோடு அவருடைய மகளுக்கும் அவருக்கும் அடிக்கடி இதனாலேயே வாக்குவாதம் எழுவதையும் கண்டிருக்கிறேன். எனக்கு இந்த குறும்படத்தின் தாயும் மகளும் அந்த இருவரையும் நினைவுபடுத்தினர் என்பது உண்மை.

இத்திரைப்படத்தைப் பொறுத்தவரையில், இயக்குநர் கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றையும் செதுக்கி இருக்கிறார் என்றே சொல்லவேண்டும். சிலர் அவரவர் பாத்திரங்களாகவே வாழ்ந்திருந்தாலும் சில இடங்களில் மிகை உணர்வுகள் தோன்றுவதைத் தடுக்க முடியவில்லை. இரும்பொறை கதாபாத்திரம் இன்னும் நம் சமூகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு கதாபாத்திரம். யுத்தம் முடிவடைந்து நாங்கள் கடந்து வந்த பாதையில் பிறரிடமும் சொல்ல முடியாத வேதனைகள் பலவற்றைச் சுமந்து வந்திருப்போம். நமது நம்பிக்கைக்கு உரிய ஒருவரிடம் தான் நம்மால் அந்த மனநிலையைக் கட்டுடைத்து பிரவாகப்படுத்த முடியும் . அந்த நிலை இந்த குறும்படத்தைப் பொறுத்தவரையில் ஆதி மரணமடைந்தான் என்பதை நேரடியாகச் சந்திக்காவிடிலும் அது நிகழ்ந்திருக்க சாத்தியங்கள் உண்டு என்பதை மிகவும் நெருக்கமான நிலையில் நின்று அறிந்து கொண்ட ஒருவன், என்ன மாதிரியான மனநிலையைக் கொண்டிருக்க முடியும். அவன் பார்க்கும் அந்தக் குடும்பம் ஆதியின் இருப்பை நம்புகின்றது. தாய் கதா பாத்திரம் நிச்சயம் அவன் உயிருடன்தான் இருக்கின்றான் என்பதில் உறுதியுடன் இருக்கின்றார். அப்படியிருக்கையில் ஆதியின் இருப்பை நிறுவும் வகையில் போலியாக வந்த சி.ஐ.டி இருவரும் அவனது மனநிலையில் மறக்க நினைத்த ஒன்றின் மீள் நினைத்தலை ஏற்படுத்துகின்றனர். அவனுக்குள் எழுந்த கோபம் கூட திருமணப் பேச்சால் அல்ல. அந்தச் சொல்ல முடியாத நினைவின் மீட்டலால் எழுந்த வெறுப்பாகவே அமைந்து விடுகின்றது. ஒரு கட்டத்தில் அவன் அந்த உண்மைகளைச் சொல்லும் போது அவனையும் மீறி அவனது உணர்ச்சிகள் தான் கண்ட காட்சிகளின் காலகட்டத்துக்கே அவனை இழுத்துச் சென்று விட்டன என்பதே உண்மை. அவன் விபரிக்கும் போது நாமும் அந்தச் சூழலுக்குள் இழுக்கப்பட்டு விடுகின்றோம் .

மதீசனின் இசை இந்தத் திரைப்படத்துக்கு பக்கபலமாக இருந்துள்ளது என்பது மறுப்பதற்கு இல்லை . சில இடங்களில் கதை நகர்கையில் இசை அதிவேகமாக அந்த நிலை உணர்வுகளுக்குள் எம்மையும் இட்டுச் சென்றிருக்கின்றது. குறிப்பாக கடந்த காலத்தை நினைவுபடுத்துகையில் எழுந்த இசை நமது மண்ணுக்கு நெருங்கிய இசையாகவே அமைந்துள்ளது. அதே சமயம் பலகாரங்கள் மற்றும் இதர பொருட்களை மகனுக்காக அனுப்பும் வேளையில் எழுந்த இசை கொஞ்சம் கிண்டல் கலந்த வலியைத் தந்ததாக உணர முடிகின்றது. ஒளிப்பதிவாளர் சிவா சாந்தகுமார் தனது பங்கைச் சிறப்பாகச் செய்திருக்கின்றார். உணர்ச்சிகளுக்கு ஏற்ப கமராவும் இசைந்ததாகவே சில காட்சிகள் அமைந்துள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை தொடர்பாகப் பாதிக்கப்பட்டவர்கள் தொலைத்த உறவுகள் வேறு வேறாக இருக்கலாம் ஆனால் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்னவோ ஒரே மாதிரியானவையாகத் தான் இருக்கின்றன. இந்தப் பிரச்சினைக்கான தீர்வை சர்வதேச சமூகம் இணைந்தும் கூட எம் அரசால் இன்னும் தர முடியவில்லை. ஒரு படைப்பாளன் அதன் வலியைச் சுமந்து வந்து நமக்கு அதை மீள் நினைவுறுத்தி சென்றிருக்கின்றான். யுத்தம் கடந்து இன்று சமாதானம் என்று கூறும் நிலையில் இன்றைய நம் சமூகம் எப்படி உள்ளது. நம்மவர் நம்மவர்களையே அடித்து பிழைப்பதாகவே மாறிவிட்டோம். அந்த சி.ஐ.டி கதாபாத்திரம் அதற்கு சிறந்த உதாரணம் எனலாம்.

இந்தப் படைப்பாளன் சமூகம் ஒன்று திரள வேண்டும் என்ற தன் மனப்பாங்கை தான் வெளிப்படுத்தியிருக்கிறான். ஆனால் இவற்றில் எது இனியும் சாத்தியம் என்ற கேள்வி எமக்குள் எழுவதைத் தடுக்க முடியவில்லை. சிறுத்தையை அடிக்க ஓடிய இந்தச் சமூகம் இப்படியான சமூகக் களைகளைப் பிடுங்க உருக்கொள்ளுமா?

# லஸ்ட் ஸ்டோரிஸ்: காதல் முக்கியம்தான். ஆனால்...?

-லக்ஷ்மி சரவணகுமார்




உடல் குறித்த உரையாடல்களில் தனி மனிதர்களின் விருப்பங்களை, தேவைகளை நாம் ஒருபோதும் முன்வைத்துப் பேசுவதில்லை. குழந்தைப் பேறுக்காக மட்டுமே கல்யாணம் செய்து உடலுறவு கொள்கிறோம் என்னும் நம்பிக்கை உள்ள சமூகம் நாம். இன்னும் கொஞ்சம் நெருங்கிப் பார்த்தால் தெரியும் சொல்லப்படாத கதைகளில் ஏராளம் உடல் சார்ந்து சுற்றிக் கொண்டிருக்கிறது. குடும்பம் என்ற அமைப்பில் காமத்துக்கான இடம் எப்போதும் இரண்டாம்பட்சம் தான்.

அனுராக் காஷ்யப், ஜோயா அக்தர், திபாகர் பானர்ஜி மற்றும் கரண் ஜோஹர் ஆகிய நான்கு ஹிந்தி இயக்குநர்கள் இணைந்து இயக்கி உள்ள 'லஸ்ட் ஸ்டோரிஸ்' (Lust Stories) என்ற இந்தப் படத்தின் நான்கு கதைகளிலும் குடும்பம் இருக்கிறது. உறவுகளுக்கிடையிலான சிக்கல்களும் முரண்களும் இருக்கின்றன. ஆனால் உடல் தேவையை அதற்காக தன் இணையின் வெளித் தேடலை குற்றமாகப் பார்க்கும் மனநிலை இல்லை. அதன் நியாயங்களைப் புரிந்து கொள்ளும் பக்குவம் வாய்த்திருக்கிறது. சமகாலத்தின் மனித உளவியலை நுணுக்கமாக அணுகும் இவற்றுள் அனுராக் காஷ்யப் இயக்கிய பகுதி எனக்கு முக்கியமானதாகப் படுகிறது. ராதிகா ஆப்தேயின் அசுரத்தனமான நடிப்பை ஒரு இயக்குநர் எத்தனை தூரம் வெளிக்கொண்டு வர முடியும் என்பதற்கு அந்தப் பகுதி சாட்சி.

வெவ்வேறு வயதுகளில் இருவர் சேரும் போது தனது துணை குறித்து இருக்கும் சந்தேகங்களும் பொசசிவ்னஸுமாய் அது அலைச்சலான நிலை. தன்னை மீறிச் செல்லுதலையும் அனுமதிக்காமல், ஓர் எல்லைக்கு மேல் தன்னிடமும் நெருங்க விடாமல் நமக்கு அறிமுகமான எவ்வளவு பேரை நினைவுபடுத்துகிறது.

தாய்மை, பெண்கள் என்பன குறித்து தொடர்ந்து புனிதங்களை கட்டமைப்பதற்கு பின்னால் பெண்கள் தங்களின் ஆளுகையில் இருந்து வெளியேறுடக் கூடாதென்கிற ஆண்களின் மனம் சிக்கலானது. பெரும்பாலான ஆண்கள் உடல் விஷயத்தில் தங்களைப் பாதுகாப்பற்றவர்களாகவே உணர்கிறார்கள்.



# பாஸ்கர் ஒரு ராஸ்கல்

**கே. என். சிவராமன்**

மாயா படத்தில் நயன்தாராவிடம் தென்பட்ட தனித்து வாழும் தாய்க்கு உரிய கம்பீரம் அமலா பாலிடம் மிஸ்ஸிங். அது போலவே மம்முட்டியின் அலட்சிய உடல்மொழி அரவிந்த்சாமியிடமும் காணோம்.

என்றாலும் இது நல்ல குடும்பப் படம். ஒரிஜினல் பார்க்கவில்லையெனில் ரீமேக் கவரும். மலையாள மூலத்தைப் பார்த்திருந்தாலும் தமிழில் ஒன்ற முடியும்.

'எங்கள் அண்ணா' படத்துக்குச் சமமான நகைச்சுவை செய்யும் வாய்ப்பு இதில் இருந்தும் அதைச் செய்து வேற லெவலுக்கு உயர்த்த வடிவேலு இந்தப் படத்தில் இல்லாதது பெரிய குறைதான்.

பார்க்கலாம். பார்க்கத் தவறவும் செய்யலாம். கண்டாலும் பிரச்சினையில்லை. காணாவிட்டாலும் இழப்பில்லை.

## மனிதியே வெளியே வா



# ஒட்டாரா: வெற்றிகளின் செல்ல மகள்

பெயின்ற் வாளியை இடது கையில் பிடித்தபடி, வலது கையில் இருந்த தூரிகையால் வண்ணக் கலவையைத் தோய்த்தபடி சுவருக்குப்பெயின்ட்பூசிக்கொண்டிருந்தவளுக்கு வியர்க்கத் தொடங்கியது. தூரிகையைப் பிடித்த படியே புறங்கையால் நெற்றியில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளைத் துடைத்த போது தூரிகையில் இருந்த பெயின்ற் துளிகள் முகத்தில் அங்கங்கு தெறித்து ஒட்டாராவின் அழகை மேலும் மெருகூட்டியது. 1989 ஆம் ஆண்டு பம்பலப்பிட்டி டிக்மன்ஸ் வீதியில் 350 சதுர அடிப் பரப்பளவான ஒரு கட்டடத்தை வாடகைக்குப்பெற்று, வியாபாரத்தை ஆரம்பிப்பதற்காகத் தனியனாக நின்று கொண்டு சுவர் முழுவதற்கும் பெயின்ற் பூசி முடித்தாள் ஒட்டாரா. களைப்பால் முழங்கால்களை மடித்து தரையில் அமர்ந்து கொண்டவள் தன் உடலிலும் ஆடையிலும் படிந்து கிடந்த நிறப் பூச்சை ஒரு துணியால் துடைத்தபடி எல்லா வேலைகளையும் தனியாகச் செய்துவது கடினம். இரண்டு பேரையாவது துணைக்குவைத்துக்கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தாள். அதன் படி இரண்டு விற்பனைப் பிரதி நிதிகளை வேலைக்கு அமர்த்தி தனது 'ஒடெல்' என்ற நவீன ஆடை விற்பனை நிலையத்தை ஆரம்பித்தாள்.

இலங்கையில் கொழும்பு நகரில் 1964ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 30ஆம் திகதி பிறந்த ஒட்டாரா டெல் க.பொ.த. உயர்தரம் வரை இலங்கையில் கல்வி கற்றுப் பின்னர் அமெரிக்காவின் ஒஹியோ நகரத்தின் போவ்லிங்க் கிறீன் பல்கலைக் கழகத்தில் உயிரியல் கற்கை நெறியில் பட்டம் பெற்றாள். 6 அடி உயரமும் இளவரசி டயானவின் தோற்றத்தையும் ஒத்திருக்கும் ஒட்டாரா தன் மனம் நாட்டம் கொண்ட மொடலிங் துறைக்குள் நுழைந்தாள். மொடலாக இருந்த காரணத்தால் நவீன பெஷன் ஆடை, அணிகலங்களைப் பற்றிய அவதானிப்பும் அக்கறையும் அதிகரிக்கத் தொடங்கியது. ஒட்டாரா என்ற பெயரின் "ஒ" என்ற முதல் எழுத்தையும் இரண்டாவது பெயரான "டெல்"என்பதையும் இணைத்து ஒடெல் (Odel) என்ற பெயரில் அவுஸ்ரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தலைமுடி அலங்காரம், பாதுகாப்பு என்பனவற்றுடன் தொடர்புடைய பொருட்களை விற்பனை செய்யத் தொடங்கினாள்.

ஆனாலும் நவீன ஆடைத்துறை அவளின் மனதைக் குடைந்துகொண்டு இருந்தது. கொழும்பு, டிக்மன்ஸ் வீதியில் தனது முதலாவது ஆடை விற்பனை நிலையத்தை இரண்டு உதவியாளர்களுடன் 1990 ஆம் ஆண்டு தொடங்கியவள் மூன்று, நான்கு ஆண்டுகள் முடிவடையும் முன்னரே லிபர்ட்டி பிளாசா, மெஜஸ்டிக் சிற்றி விற்பனைக் கூடங்களிலும் ராண்ட்ஸ் ஏசியா, மவுண்ட்லெவனியா ஹோட்டல்களிலும் தனது நவீன ஆடை ஸோரூம்களைத் திறந்து வைத்தாள். ஒடெல் என்ற பெயரை உச்சரிக்காத மக்களே இல்லை என்றானது. 1990 ஆம் ஆண்டே ராஜூ சந்திரம் என்பவரைத் திருமணம் செய்து கொண்டாள். அவளுக்கு 2 ஆண் பிள்ளைகள் உள்ளனர். 1996 இல் வோட் பிளெஸில் 13 ஆயிரம் சதுர அடிப் பரப்பளவுக் காணியை வாங்கி வியாபர்ரத்தை விரிவாக்கியவள் அடுத்து லிப்டன் சுற்று வட்டாரத்தில் பார்த்ததுமே கால்களை இழுத்துச் செல்லும் மிகப் பிரமாண்டமான ஆடையகத்தைக் காட்சிப்படுத்தினாள். அந்தப் பிரதான காட்சி அறையில் ஒரு நாளைக்கு சராசரியாக 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் ஆடைகளை அள்ளிச் செல்வர்.

2001 ஆம் ஆண்டு மிகச் சிறந்த 'பெண் தொழில் அதிபர் விருது', 2010 ஆம் ஆண்டு அமெரிக்காவின் செவன்த் சொன்டாவில் 'வியக்க வைக்கும் பெண் வணிகர் விருது', 2013 ஆம் ஆண்டு எச்சலன் மெகஸினின்' மிகச் சக்திமிக்க பெண் விருது' என்று ஏராளமான விருதுகளை வாங்கிக் குவித்தவள், 2014 ஆம் ஆண்டு தனது பங்குகள் அனைத்தையும் சொப்ட்லொஜிக் நிறுவனத்துக்கு விற்பனை செய்தாள். தன்னுடைய எம்பாக் (Embark) நிறுவனத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் முழுவதையும் அநாதரவான தெருநாய்களை எடுத்து பராமரிப்பதற்காக செலவு செய்கிறாள். கடற்கரைகளைச் சுத்தம் செய்தல், மரம் நடுதல், சுனாமியால் பாதிக்கப்பட்ட 18 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்தல், விலங்குப் பாதுகாப்பு எனப் பல சமூக சேவைகளைச் செய்தவளுக்கு 'ஆசியாவில் புகழ்பெற்ற பெண்மணி' என்ற கௌரவமும் கிடைத்தது.

- பிறேம்ராஜ், கொழும்பு

## ரௌத்திரம் பழகு



## 'முறியடிக்கப் பழகிவிட்டேன்'

இத்தனை காலமும் பேசுவதற்குத் தயங்கிக் கொண்டிருந்த, மறைத்து வைத்துப் புழுங்கிக் கொண்டிருந்த, தங்களுக்கு நேர்ந்த பாலியல் ரீதியான துன்புறுத்தல்களைப் பற்றி, பாதிக்கப்பட்ட பெண்களே இப்போது பொதுவெளியில் பகிரங்கமாகப் பேச ஆரம்பித்துள்ளனர். எதிரொலி வாசகிகளே! நீங்களும் உடைத்துப் பேச விரும்பும் விடயங்களைப் பொதுவெளியில் பதிவு செய்யுங்கள். உங்கள் இரகசியம் காக்கப்படும். நீங்கள் சந்தித்த பாலியல் சார் பிரச்சினைகளையும், அதைக் கையாண்ட விதத்தையும் எழுதுங்கள். உங்கள் அனுபவம் பல பெண்களைப் பாதிப்புறாமல் காக்கட்டும்.

தனக்கு நேர்ந்த பாலியல் தொல்லைகளைப் பற்றி நடிகை பார்வதி பகிரங்கமாகப் பதிவு செய்திருந்தார். "பாலியல் தொல்லை செய்கின்ற ஆட்களை நானும் சந்தித்திருக்கின்றேன். இது மோசமான அனுபவம் தான். ஆனால், அதிர்ச்சி அடையும் விஷயம் கிடையாது. நான் சினிமாவுக்கு வந்து கடந்த 11 வருடங்களாக இப்படியான சம்பவங்களைக் கடந்து கொண்டு தான் இருக்கின்றேன். ஆனால், அதை முறியடிக்கப் பழகி விட்டேன்." எனக் கூறினார்.

'ரௌத்திரம் பழகு'
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
**அல்லது**
ethirolimedia@gmail.com

# அழகும் தொழிலாகும்

**நேர்காணல்:**
**நிரோஷா ரமேஷ்**

அஞ்சலி சுப்ரமணியம். இவர் கடந்த 8 வருடங்களாக "ஒமேகா" என்ற பெயரில் யாழ்ப்பாணம், நல்லூர் அரசடி அழகு நிலையத்தை நடத்தி வருகின்றார். இதில் இரண்டு பகுதிகள் உள்ளன. பெண்களுக்கானது ஒன்று. ஆண்களுக்கானது மற்றையது. ஆண்களுக்கான அழகு நிலையத்தை இளைஞர் ஒருவரும், பெண்களுக்கான அழகு நிலையத்தை அஞ்சலியும் நடத்தி வருகின்றனர். அவரிடம் பேச ஆரம்பித்தோம்.

### அழகுக் கலை மூலம் பெண்கள் சாதிக்க முடியுமா?

பதில்: - பெண்களைப் பொறுத்தவரை அழகுதான் அவர்களின் தன்னம்பிக்கையை எடுத்துக் காட்டுகின்றது.

எந்த அளவுக்கு ஆரோக்கியமாக இருக்கின்றனரோ, அதே அளவுக்கு அழகாகவும்இருக்கவேண்டும்என்பதே அவர்களின் விருப்பமாக உள்ளது. இதனால்தான் பெண்களின் வாழ்க்கையில் அழகு நிலையங்கள் தவிர்க்க முடியாத அங்கமாகிவிட்டன. அழகு நிலையங்களால் பெண்கள் சாதிக்க முடியாது என்ற ஒரு கருத்து உள்ளது. அது தவறு . ஆரம்ப காலப்பகுதியில் நடிகைகள், மேல் தட்டுப் பெண்கள், மணப்பெண்கள் மட்டும்தான் அழகு



நிலையங்களைப் பயன்படுத்தினார்கள். ஆனால், இப்போது அந்த நிலைமை வெகுவாக மாறிவிட்டது. அனைத்துப் பெண்களும் தங்களை அழகு படுத்துவதில் ஆர்வம் காட்டத் தொடங்கிவிட்டனர். எனவே பெண்கள் இருக்கும் வரை இந்தத் தொழிலுக்கு அழிவில்லை. இந்தத் துறையில் முறையாகப் பயிற்சி எடுத்தால் இதில் சாதிக்க முடியும். நல்ல வருமானத்தையும் பெற முடியும்.

### உங்களுடைய அழகு நிலையத்தில் தனித்துவமான அம்சங்கள் எவை?

பதில்: - எங்களிடம் வரும் பெண்களை அழகு படுத்தும் போது, வெறும் உழைப்பை மட்டுமே மையப்படுத்தாமல், அவர்கள் ஆரோக்கியம் பற்றியும் அதிக கவனம் செலுத்துவோம். இங்கு வரும் பெண்களிடம் எம்மிடம் உள்ள அழகுபடுத்தல் சிகிச்சைகள் தொடர்பில் முதலில் தெளிவுபடுத்துவோம். அவர்களுக்கு நம்பிக்கை இருந்தால் மட்டுமே, அழகு படுத்தல்களை மேற்கொள்வோம் . 200 ரூபா முதல் 3 ஆயிரம் ரூபா வரை எம்மிடம் சேவைகள் உள்ளன. மற்ற அழகு நிலையங்களைப் போல அதிக தொகை பணம் அறவிடுவதில்லை. வழமையான வாடிக்கையாளர்களுக்குச் சிறப்புச் சலுகைகளும் உள்ளன.

### அழகு நிலையம் தொடங்க நினைக்கும் பெண்களுக்கு உங்கள் ஆலோசனை?

பதில்:-அழகுக் கற்கை நெறியை முடித்த உடனேயே சொந்தமாக அழகு நிலையத்தைத் தொடங்காமல், வேறு ஓர் அழகு நிலையத்தில் குறைந்தது இரண்டு வருடங்கள் பயிற்சி பெறுவது நல்லது.

அழகு நிலையம் ஒன்றை ஆரம்பிக்கும் முன் அந்த இடத்துக்கு அருகில் ஏற்கனவே வேறு அழகு நிலையங்கள் இருக்கின்றனவா, அந்த இடம் பெண்கள் பாதுகாப்பாக வந்து போக ஏற்றதுதானா என அறிந்து பின்னர் ஆரம்பிக்க வேண்டும். பொதுவாக இதுபோன்ற சேவை தொடர்பான தொழில் செய்யும்போது, வாடிக்கையாளர்களின் திருப்தியே முக்கியம். அதிக இலாப ஆசையில் அதிகமான கட்டணங்களை அறவிட்டு வாடிக்கையாளரின் முகச்சுளிப்புக்கு ஆளாகக் கூடாது.

## லெக்கின்ஸ் பிரியரா?

தற்போதைய பெண்கள் சுடிதாரை விட அதிகமாக விரும்பி அணியும் ஆடைகளில் ஒன்று தான் லெக்கின்ஸ். ஏனெனில் லெக்கின்ஸ் பெண்களுக்கு மிக வசதியான உடையாகவும், அழகாக காட்டும் உடையாகவும் உள்ளது. இதனால் உடல் நலப் பிரச்சினைகள் உண்டாகும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

லெக்கின்ஸ் போன்ற இறுக்கமான ஆடைகள்சரும வறட்சியை உண்டாக்குகின்றன. இது சருமத்துளைகளில் உள்ள அழுக்கை வியர்வை மூலம் வெளியேற அனுமதிப்பதில்லை. இதனால் உடலில் வெப்பம் அதிகரித்து பக்டீரியா மற்றும் பூஞ்சைத் தொற்றுகள் உண்டாகின்றன, படர்தாமரையும் உருவாகிறது. மேலும் லெக்கின்ஸ் இறுக்கமாக இருப்பதால் உடலில் இரத்த ஓட்டத்தில் பாதிப்பு ஏற்படுகிறது, உடல் எடையை அதிகரிப்பதுடன், சதைகள் இறுக்கமாகி அசிங்கமான தோற்றத்தையும் கொடுக்கிறது. இறந்த செல்களின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன், வலியை உண்டாக்கும் புண்களையும் ஏற்படுத்துகிறது. முக்கியமாக கோடை காலங்களில் பெண்கள் ஜீன்ஸ், லெக்கின்ஸ் போன்ற ஆடைகள் உடுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.



# 'சும்'முக்கு விழுந்த 'கும் கும்'!!



கேட்டு வேண்டித் திண்டிட்டு வில்லங்கப்படுகிறதெண்டு சொல்லுறது உதைத்தான். எல்லாத்திலையும் அபிப்பிராயம் சொல்ல வெளிக்கிடப்பிடாது. எங்கை? எப்ப? ஆருக்கு? ஆரிட்டை? எதைச் சொல்லுறம் எண்டது தெரியாட்டி, சட்டம் என்ன சமஸ்கிருதம் படிச்சும் பிரயோசனமில்லை.

சாப்பாட்டை நாங்கள் கையாலை குழைச்சுத் தின்னுறம். வெள்ளைக்காரன் அதை கரண்டியாலையும், முள்ளுக் கரண்டியாலையும், கத்தியாலையும் தின்னுறான். சைனாக்காரன் இரண்டு குச்சி தந்தால்தான் தின்னுவன் எண்டு அடம்பிடிப்பான். அதையே வேறை ஒராள் வேறைவிதமாத் தின்னுவான். ஆனால் மொத்தத்திலை எல்லாரும் சாப்பாடுதான் சாப்பிடுகினம். முறை தான் வேறை. முதலமைச்சரைப் பார்த்து நீங்கள் கூட்டங்களிலை எழுதி வாசிக்கிறது பிழை எண்டு சுமந்திரன் சொன்னவராம். போன ஞாயிற்றுக்கிழமை வீரசிங்க மண்டபத்திலை நீதியரசர் பேசுகிறார் எண்ட அவற்றை பேச்சுகளைத் தொகுத்துப் புத்தகமா வெளியிட்டவை. நல்ல சனம் வந்திது. அதுக்கை எல்லாக் கட்சியளும் வந்திருந்தினம். சம்பந்தர் வந்தபடியாலை கூட்டமைப்பிலை இருந்து எல்லாரும் வந்திருந்தினம். முன்வரிசையிலை நீட்டுக்கு அவைதான் இருந்தவை. தான் ஏன் அப்பிடி எழுதி வாசிக்கிறவர் எண்ட விளக்கத்தை முன்னமும் ஒருக்காச் சொன்னான். இப்பவும் சொல்லுறன் எண்டு சுமந்திரன்ரை கதைக்கு வடிவாவும், விலாவாரியாயும் சீ.எம் சொன்னவர்.அதுக்குச் சனம் கைதட்டிக் கூக்குரலிட்டு ஒரே ஆரவாரம். சுமந்திரனுக்குப் பின்னாலைதான் நான் இருந்தனான். உடனை எட்டி அந்தாளின்ரை முகத்தைப் பாத்தன் "அசடு வழியும்" எண்டு சொல்லுவினம், அது வழிய ஒரு சிரிப்புச் சிரிச்சிக் கொண்டு அந்த மனுசன் இருந்தவர். இப்பிடி 'கும் கும்' எண்டு கும்மேக்க கூட, அடியே படாத மாதிரி இருக்க 'சும்' மால எப்பிடி முடியுது? எட அப்பிடி இருக்கவும் ஒரு துணிவு வேணும். இல்லாட்டித் தோலிலை சூடு, சுறணை இல்லாத மனுசனா அவர் இருக்க வேணும். நீதியரசர் பேசுகிறார் எண்டதை விட்டிட்டு முதலமைச்சர் பேசுகிறார் எண்டு புத்தகத்தின்ரை தலைப்பை வைச்சிருக்கலாம் எண்டது சிவாஜிலிங்கத்தின்ரை கருத்து.

சிங்கப்பூரிலை இருந்து வந்த ஒரு பேராசிரியர் பேசினவர். அவரும் தமிழாக்கள் ஒற்றுமையா இல்லாட்டி இனிமேல் ஒரு தீர்வை வேண்டுறது கஷ்டம் எண்டு சொன்னவர். அதைத்தான் டொக்டர் லக்சுமனும் சொன்னவர். அவற்றை பேச்சிலை வந்திருந்த அரசியல் கட்சியளுக்கு ஒரு செய்தி கிடைச்சிருக்கும் எண்டு நினைக்கிறன். தமிழ் பேரவையின்ரை நிலைப்பாடும், சீ.எம் என்ன செய்வார் எண்டும் ஒரு கோடு கீறிச் சொன்னவர். பிறகு சம்பந்தர் பேசினவர். அவர் பேசேக்கை எல்லாரும் எழும்பி நுனிக் கதிரையிலை இருந்தினம். அவர் என்னத்தைச் சொல்லப் போறார் எண்டு எல்லாருக்கும் ஒரு இட்டுமுட்டாப் போச்சுது. ஆனால் அவர் விரிச்சமாதிரி ஒண்டையும் சொல்லேல்லை. நல்லா அடக்கி வாசிச்சிட்டார். அந்த மனுசன் திருக்குறளை வடிவா படிச்சிருக்கிறார் போலை. அவர் வந்த எல்லாருக்கும் புத்தி மதி சொல்லுறமாதிரி இருந்தால்தான் தீர்வு பெற்றுக் கொள்ளுறது இலகுவாக இருக்கும்" எண்டு கட் அன்ட் றைட்டாப் பேச்சை முடிச்சிட்டார்.

பிறகு சீ.எம் ஏற்புரை சொல்லேக்கைதான் தன்ரை மனசிலை இவ்வளவு காலமும் அடைக்கி வைச்சிருந்த எல்லாத்தையும் கொட்டு கொட்டெண்டு கொட்டிப் போட்டார். தன்னை அரசியலுக்கை கொண்டு வந்தது சம்பந்தர் எண்டும், தமிழரசுக் கட்சி எண்டும் சொன்னவர். அவைக்கு இண்டைவரை மானசீகமாக ஒரு துரோகமும் தான் செய்யேல்லை எண்டும் சொல்லி மக்களுக்கு ஒரு நேர்மையான அரசியல் சேவையைச் செய்யிறதுதான் அந்தக் கட்சியின்ரை நோக்கம் எண்டதாலை தான் இண்டைவரைக்கும் மக்களை ஏமாத்திறமாதிரி ஒண்டையும் செய்யேல்லை எண்டும் சொன்னவர். தமிழரசுக் கட்சி தன்ரை வசதி வாய்ப்புக் கேற்ற மாதிரி சனத்துக்கு அப்பப்ப பொய் சொல்லி அரசியல் செய்து வந்திருக்கினம் எண்டும் நசூக்காகச் சொன்னவர். அவை அப்பிடி ஒரு நேர்மை இல்லாத அரசியலைச் செய்யததாலைதான் அவைக்கும், தனக்கும் விரிசல் விழுந்து தன்னைக் கட்சியிலை இருந்து நீக்கிறதுக்கும் சிலபேர் குத்தி முறிஞ்சவை எண்டும் சொன்னவர். டக்ளசும் கூட்டத்துக்கு இடையிலை வந்திட்டு இடையிலையே போட்டார். போனது நல்லதாப் போச்சு. ஏனெண்டால் சீ.எம் டக்ளசைப் பற்றிச் சொன்னதைக் கேக்க அவர் நிக்காதது நல்லது. அவர் ஒரு தமிழற்றை கொள்கையோடை இல்லாத ஆள் எண்ட படியாலை அவரும் ஒரு வகையிலை தமிழற்றை எதிரிதான் எண்டும் சொன்னவர்.

கூட்டமைப்புக்காரரும், அவையின்ரை எடுபிடியளும், அடி வருடியளும் சீ.எம்மைப் பாத்து என்னத்தைச் சொன்னாலும, அவர் தன்ரை பிடியை விடுகிறார் இல்லை. மக்களை ஒரு போதும் ஏமாத்தப்பிடாது எண்டதிலை அவர் குறியா இருக்கிறார். அவர் தான் என்ன நோக்கத்தோடை இருக்கிறார் எண்டதையும், தன்ரை பெலம் அதுதான் எண்டதை உலகத்துக்குக் காட்டிற மாதிரியும் ஒரு வேலை செய்திட்டார். சிறப்புப் பிரதியள் குடுத்து சமூகத்திலை தனக்கு எங்கை எங்கை எல்லாம் என்ன மாதிரியான செல்வாக்கு இருக்கிது எண்டதையும் சொல்லாமல் சொல்லிப் போட்டார்.தான் இந்த அரசியல் உலகத்துக்கு வேணுமோ? இல்லையோ! எண்டதைத் தமிழ் சனம் தீர்மானிக்கட்டும் எண்டு பேச்சை முடிச்சுப் போட்டார்.

ஆனால் வந்தவைக்குத் தான் தொடர்பா எல்லாச் செய்தியளையும், எல்லா வகையிலையும் சொன்னவர். அந்தப் புத்தக வெளியீட்டு விழாவிலை துவக்கத்திலை நடந்த நிகழ்ச்சியளிலை ஒரு பொம்பிளைப் பிள்ளை பாரதியாற்றைப் பாட்டுகளை நல்ல வடிவா இசையோடை பாடிச்சிது. கேக்க நல்ல ஆசையா இருந்திது. அது மட்டுமில்லை ஆசை முகம் மறந்து போச்சே .. எண்டது துவக்கம் நல்லதோர் வீணை செய்து... எண்ட பாட்டுவரை அங்கை வந்திருந்த அவற்றை எதிரியளுக்குச் செருப்பாலை சாத்திற மாதிரி இருந்திது. சாத்தெண்டால் சாத்துத்தான். அடி எண்டால் நெருப்படிதான்.. அந்தப் பிள்ளை பாடின பாரதியாற்றை பாட்டு அத்தனையும் அந்த நிகழ்சிக்குப் பொருத்தமா இருந்திது. அதையும் சீ.எம். தான் எழுதிக் குடுத்துப் படிக்கச் சொன்னாரோ தெரியாது. சீ.எம் புத்தகத்தை வெளியிட்டாரோ இல்லையோ கூட்டமைப்புக்கு நல்ல விளக்குமாத்து அடி நடந்திருக்கு..????

• வில்லங்கம் விநாசி

# தவிக்கும் வாய்களுக்கு கிடைக்குமா தண்ணீர்?

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடிப்பதற்கு மட்டுமே தண்ணீர் கேட்கும் தீவக மக்கள், தங்கள் இன்னபிற வேலைகளுக்கு உவர் நீரையே பயன்படுத்துகின்றனர். ஆனால், படையினருக்கு குளிக்கவும் நல்ல தண்ணீர் வேண்டுமாம்.

"மண்கும்பானில நேவி ஒரு நாளைக்கு எட்டு தரம் 12,500 லீற்றர் தண்ணிய பவுசர்ல ஏத்தியெண்டு போய் குளிக்கிறான் கழுவுறான் இதை தட்டிக்கேட்க 'ஏ.ஜி.ஏ' க்கும் துணிவில்லை. பிரதேச சபைத் தவிசாளருக்கும் திராணியில்லை. தண்ணீர்ப் பிரச்சினையை கிளறி விட்ட கள்ளமண் வியாபாரிகளுக்கும் வெட்கமில்லை. ஆனா நாங்கள் வெறும் 4,500 லீற்றர் பவுசர் தண்ணிய ஒரு நாளைக்கு நாலு தரம்தான் குடிப்பதற்கு கேட்டனாங்கள். வேலணை பிரதேச சபையில் உள்ள சிலர் தமது அரசியல் வளர்ச்சிக்காக இந்தத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கினம். ஆனா அவங்கள் ஒருத்தரும் ஊரில (மண்கும்பானில்) இல்லை. காலா காலமா யாழ்ப்பாணத்தில வாழ்ந்து கொண்டு அந்தத் தண்ணிய குடிச்சிட்டு, இங்க அப்ப அப்ப வந்துபோட்டு, தீவக மக்களின் ஒற்றுமையை சீர்குலைப்பதில குறியாய் இருக்கிறாங்கள்" இவ்வாறு புங்குடுதீவு சிவன் கோயில் சுற்றுப் பகுதியில் தண்ணீர் வேண்டி நடைபெற்ற கவனவீர்ப்பு போராட்டத்தின்போது ஒருவர் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

"தனியாருக்கு அனுமதியில்லையெண்டு சொல்லிட்டு தனிநபர் குடும்ப நிறுவனமான சர்வோதயத்துக்கு அனுமதி வழங்குவதற்கு யார் தெரியுமா மூல காரணம் ?மக்களால் தோற்கடிக்கப்பட்டும் போனஸ் எனும் கீழ்த்தரமான முறையால பிரதேச சபைக்குள்ள நுழைஞ்சு சபைய ஒவ்வொரு கூட்டத்திலும் குழப்பியபடி இருப்பவர்களே .

இவங்களுக்கு திடீரெண்டு சர்வோதயக்காரர் மேல பாசம் வந்ததுக்கு பின்னால பல வெத்திலை - பாக்கு விசயமெல்லாம் இருக்கு. மாதா மாதம் தவறாது சாப்பிடலாமாம் .மக்கள் அமைப்பான கூட்டுறவு சங்கத்துக்கு அனுமதி வழங்காமல் குடும்ப வியாபார அமைப்பான சர்வோதயக்காரருக்கு ஏன் அனுமதி வழங்க வேணும் ?" என்று ஒரு வயதான பெண்மணி கேள்வி எழுப்பினார்.

"கடற்படையிடம் தனது திமிரை காட்டப் பயப்படும் பிரதேச செயலர் மக்களிடம் தான் அதை அடிக்கடி காட்டுவார்." இது இன்னொரு பெண்ணின் போர்க்குரல். இவ்வாறு எங்கும் தண்ணீருக்கான போராட்டமும், நீதிவேண்டிய குரல்களுமே தீவகம் முழுவதும்.

உலகில் உள்ள 80 நாடுகளில் 40 சதவீத மக்கள் சரிவரத் தண்ணீர் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர். 110 கோடி மக்கள் நீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் வாழ்கின்றனர். இப்படியே போனால், இன்னும் சில ஆண்டுகளில் உலகமே பாலைவனமாக மாறிவிடும். பூமியில் 30 வீதம் மட்டுமே நிலப்பரப்பு. மீதமிருக்கும் 70 வீதமும் நீர் பரப்புத்தான். ஆனால், இன்று அந்த 30 வீதத்தில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான நீரை அளிக்கும் போதிய வசதியை பூமி இழந்து வருகிறது. அதற்கும் மனித இனம்தான் காரணம். 70 வீதம் பரப்பளவு நீர் இருந்தாலும் அதில் 97.5 விழுக்காடு கடலில் இருக்கும் உப்பு நீர்தான். மீதம் 2.5 விழுக்காடு அளவுக்குத்தான் நிலத்தடி நீர் உள்ளது. இதிலும் துருவப் பகுதிகளில் பனிப் பாறைகளாகவும், பனித்தரையாகவும் மாறிப் போயிருக்கிறன. எஞ்சியுள்ள 0.26 விழுக்காடு நீரைத்தான் உலக மக்கள் அனைவரும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

தீவகத்தைப் பொறுத்தவரை மண்கும்பான், சாட்டி பிரதேசத்தைத் தவிர மற்ற இடங்களில் எல்லாம் உவர்நீராகவே உள்ளது. இங்கு இன்னுமொரு மிகப்பெரிய அவலம் என்னவெனில், மண் அள்ளுவதற்கு அரச அதிகாரிகளால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனை மண் வியாபாரிகள் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு மணல் வேட்டையை நடத்துகின்றார்கள்.அளவுக்கதிகமாக மண் அள்ளப்படுவது நன்னீர் வளம் பாதிப்படைய் வழிகோலும். மேலும் ஒரே இடத்தில் இருந்து தண்ணீர் அதிகளவில் உறிஞ்சப்படுவது நிலத்தடி நீர் பற்றாக் குறையை ஏற்படுத்தும். இந்த அடிப்படை அறிவு கூட இல்லாத, பொறுப்பற்ற அதிகாரிகளின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் என்ன டிசைன் என்றே புரியவில்லை.

சூழலைப் பாதுகாப்பது ஒவ்வொரு மனிதனுடைய கடமை. ஆனால், இங்கு பாதுகாக்க வேண்டியவர்களே பணத்துக்கு விலை போய், இயற்கையை விலை பேசுகின்றார்கள். சூழலில் வாழும் உயிர்களைக் குறிப்பாக மனிதர்களைப் பாதிக்கக் கூடிய எந்த நடவடிக்கையிலும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பொறுப்பற்று நடந்து கொள்வதைப் போன்ற அபத்தம் வேறொன்றுமே இல்லை. இப்போது உவர் நீர் பிரச்சினைதான் உள்ளது. ஆனால், ஒரு சொட்டுத் தண்ணீருக்குக் கூட நாதியற்ற நிலை வெகு விரைவில் உருவாகும். அதற்கான முன்னேற்பாடுகளை, இயற்கையை நாசம் செய்யும் இழி செயல்களை பேராசைபிடித்தவர்கள் ஆரம்பித்து விட்டார்கள். இந்த விடயத்தில் நாம் அலட்சியமாக இருந்தோமேயானால், காவிரி நீர் வேண்டி தமிழகம், கர்நாடகாவிடம் கையேந்துவதைப் போல, தண்ணீருக்காக நாம் கையேந்தும் நிலை வெகு தொலைவில் இல்லை. அப்போதும் அதிகார வர்க்கத்தினர் மினரல் தண்ணீரில் குளித்துக் கொண்டிருப்பார்கள். சாதாரண மக்கள் தண்ணீர்க்குடங்களைவைத்துக்கொண்டு வீதி வீதியாகப் போராட்டம் நடத்திக் கொண்டிருப்பார்கள்.

■

எதிரொலி Ethiroli
27 ஜூன் 20-26.06.2018

# வி.மைக்கல் கொலினின் பரசுராம பூமி




வி.மைக்கல் கொலின் ஒரு பத்திரிகை யாளராக, பதிப்பாளராக, சஞ்சிகை ஆசிரியராக, கவிஞராக, புனைகதை எழுத்தாளராக அறியப் பட்டவர். இடையறாத தேடலும், தளர்விலா முயற்சியும், எடுத்த கருமத்தை நிறைவேற்றும் துடிப்பும் ஓர்மமும் மிக்கவர். அத்தகைய குணாம்சத்தின் காரணமாகவே அவரால் திரு கோணமலையில் இருந்து தாகம் சஞ்சிகையை யும், மட்டக்களப்பில் இருந்து மகுடம் சஞ் சிகையையும் வெளிக்கொணர முடிந்தது. 'என் பிரிய இராஜகுமாரிக்கு' என்ற கவிதைத் தொகுதி யுடன் இலக்கிய உலகுக்கு அறிமுகமான மைக் கல் கொலின் தொடர்ந்தும் வெளியீட்டுத் துறையில் இயங்கினாலும், 26 வருட இடை வெளியின் பின்னர் 'பரசுராம பூமி' என்ற தனது இரண்டாவது நூலுடன் இலக்கிய உலகில் தனது அடையாளத்தைப் பதித்துள்ளார். முழுக்க முழுக்க தொன்மங்களையும், மறைநூல்களை யும் மறுவாசிப்புச் செய்து ஈழத்தில் வெளிவந்த முதல் நூலாக பரசுராம பூமி வெளிவந்து இந்த அடையாள நிறுவுகையைச் செய்துள்ளது.

2012ஆம் ஆண்டு மகுடம் சஞ்சிகையை வெளிக் கொணர்ந்த போது அதன் ஆசிரியர் தலையங்கத்தில் வி.மைக்கல் கொலின் ஒரு விட யத்தை முன்வைத்தார். 'எமது கலை இலக்கியம், சமூகப் பண்பாடு தொடர்பான தொன்மங்களை சமகாலப் பிரச்சினைகளோடு தொடர்புபடுத்தி ஆய்வுக்கு உட்படுத்துவது' என்பதே அது. அதனை சிறுகதைகளாக எழுதி வெளியிட்டு, அவற்றைத் தொகுதியாக்கி பரசுராம பூமியைத் தந்துள்ளார்.

இந்நூலில் ஒன்பது கதைகள் உள்ளன. நூல் நவீன தமிழ் இலக்கியத்தின் கொடுமுடியாக விளங்கிய தருமு சிவராமுவுக்குச் சமர்ப்பிக் கப்பட்டுள்ளது. பேராசிரியர் சி.மௌனகுரு, பேரா சிரியர் செ.யோகராசா, ஜிப்ரிஹாசன் ஆகியோர் நூலின் சிறப்புக்களை வெளிப்படுத்தும் மதிப் புரைகளை எழுதியுள்ளனர். இந்நூலில் இடம் பெற்ற பரசுராமபூமி, குருஷேத்திரபுரம் ஆகியன மகாபாரதத் தொன்மங்களையும், ஓர்மம், ராவணாபுரி, வரம் ஆகியன இராமாயணத் தொன்மங்களையும், புதிய ஏற்பாட்டின் எழுதப் படாத பக்கங்கள், யாருமிங்கே தீர்ப்பிடலாம், எல்லாம் நிறைவேறிற்று ஆகியன விவிலிய மறைநூலையும், ஞானம் பௌத்த ஜாதகக் கதைத் தொன்மங்களையும் மறுவாசிப்புக்கு உட்படுத்துகின்றன.

தொன்மங்களையும், மறைநூல்களையும் மறு வாசிப்புக்கு உட்படுத்த வேண்டுமானால் முத லில் அவற்றை உணர்ந்து, அனுபவித்துப் படிக்க வேண்டும். அவை கூறும் உட்பொருள்களை உள்வாங்க வேண்டும். அதில் ஏற்படும் உணர்வு வேறுபாடு அல்லது பார்வை வேறுபாடே மறுவாசிப்பினை ஊக்கப்படுத்தும். இந்நூலில் தொன்மங்களையும், மறைநூல்களையும் மறு வாசிப்புக்கு உட்படுத்தும் போது மூலத்தில் அதிக சிதைவு நேரா வண்ணம் மைக்கல் கொலின் தனது மறுவாசிப்பைச் செய்துள்ளார்.

பரசுராம பூமி சிறுகதை முள்ளிவாய்க்காலில் நடந்து முடிந்த யுத்தத்தை மறைபொருளில் பேசு கிறது. பரசுராமர் 21 தலைமுறை சத்திரியர்களை அழித்தவர். விஷ்ணுவின் அவதாரங்களில் ஒருவர். அவர் நீள்துயில் கொள்கிறார். பெரும் ஓலம் அவரைத் துயிலெழுப்புகிறது. இறுதி யுத்தத்தின் கோரக் காட்சிகள் அவர் முன் விரிகின்றன. தனது நாடான பாரதம் அதனைச் செய்திருப்பதை எண்ணி கோபமும், கவலையும் கொள்கிறார். தன்வசமிருந்த மழுவைத் தூக்கி எறிந்து விட்டு வெள்ளைக் கொடிகள் போர்த்திய உடலங்களின் மீது குதிரை ஏறிப் பாய்ந்து செல்ல வன்னிக் காட்டுக்குள் காணாமல் போகிறார். பரசுராமர் அழித்த பூமி தொடர்ந்தும் பரசுராமரின் மண்ணால் அழிக்கப்பட்டமையை கதை பேசுகிறது.

அதுபோல வரம் என்ற கதை அகலிகையின் சாபவிமோசனம் பற்றியது. ஏலவே புதுமைப் பித்தன், சம்பந்தன் எனப் பலரும் எழுதிய கதை. ஆயினும் கொலின் அதனை முடிக்கும் விதம் வேறானது. இந்திரனுடன் சுகித்திருந்தாள் என்று கௌதமரால் சாபமிடப்பட்டு, கல்லாகிய அகலிகை இராமனால் சாபவிமோசனம் அளிக்கப்பட்டு எழுகிறாள். கௌதமர் ஒரு வரம் கேள் தருகிறேன் என்று கேட்கிறான். அவள் 'நாதா! நீங்கள் ஒருமுறை இந்திர வேடம் கொண்டு என்னோடு வந்து சுகித்திருக்க வேண் டும்' என்று வரம் கேட்கிறாள். பெண்ணியக் குரலாக, கௌதமரின் சந்தேகத்துக்குச் சாட்டை யடி தருவதாகவும், தனது தாபத்தை அச்சமின்றி வெளிப்படுத்துவதாகவும் இரு நிலைகளில் இதனை நோக்க முடியும்.

இதேபோல ஓர்மம் கதையில் வரும் ஊர் மிளையும் புதுமை மிக்கவளாகப் படைக்கப் பட்டுள்ளார். இராமன் காடேகும் போது தனது ஆசை மனையாளான ஊர்மிளைக்கு எதுவும் சொல்லாமல், அவளது உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் செல்லும் இலக்குவன் திரும்பி வந்து அவளுடன் உறவு கொள்ள அழைக்கிறான். அந்த நேரத்தில் அவள் 'இன்று நான் ஆசா பாசங்கள் அற்ற பெண். தவமே எனது வரம். இனிமேல் நாம் இல்லற இன்பத்தில் சேர்ந்திருப் பது முடியாத காரியம்' என்று சொல்வது ஆயிரம் ஈட்டிகளால் அவனைக் குத்துவதற்குச் சமனானது. எதிர்க் குரலாக, பெண்ணை நினைத்த வாறு பயன்படுத்த முடியாது என்பதை உரத்துச் சொல்லும் குரலாக ஊர்மிளையை கொலின் படைத்துள்ளார்.

விவிலியத்தில் வரும் சம்பவம் 'யாருமிங்கே தீர்ப்பிடலாம்' கதையில் வருகிறது. விபசாரத்தில் ஈடுபட்ட பெண்ணுக்குக் கல்லெறிந்து தண்டனை வழங்கப்படவுள்ள நிலையில் யேசுநாதர் சொல்வதாக வரும் கூற்று இவ்வாறு அமைகிறது


'உங்களில் பாவம் செய்யாதவன் முதற் கல்லை எறிந்து தீர்ப்பிடட்டும்.அதேவேளை இவளுடன்விபசாரத்தில் ஈடுபட்டு பிடிபட்டவனை யும் அழைத்து வாருங்கள்.இருவருக்கும் தண் டனை சமமாக இருக்கட்டும்' இருவரையும் தண்டிப்பது என்பது கொலினுடைய கதையில் வந்த முக்கிய மறுவாசிப்பாகும்.

இவ்வாறே பிணி, மூப்பு, சாக்காட்டைக் கண் டஞ்சி ஞானம் பெற்ற புத்தரை நோக்கி கேள்வி எழுப்புவதாக 'ஞானம்' கதை அமைந்துள்ளது.

'ஞானம் பெற்ற பிறகு இவை வராதா?' என்று கேட்பதன் மூலம் அச்சத்தின் காரணமாகவே சித்தார்த்தன் புத்தரானமை வெளிப்படுத்தப்படு கிறது.

தொன்மங்களையும், மறைநூல்களையும் அதன் போக்கில் வாசித்துச் செல்லும் கொலின் ஒரு சுழிப்பாகத் தனது மறுவாசிப்பினை இறுதி வரிகளில் காட்ட முற்படுகிறார். இக்கதைகள் ஏலவே பலரும் செய்த மறுவாசிப்புக்களுடன் வேறுபட்டனவாக நிற்பதுடன் மேலும் பலரை இத்துறையில் எழுத கொலின் அடியெடுத்துக் கொடுத்துள்ளார் எனலாம்.

**- இயல்வாணன்**



## சாகச மழை

கார்முகில் கூடிவானின் கதவுகள் தாழ்திறக்கக்
கூர்மையாய் ஊசிபோலக் குளிரெமை வாட்டிநிற்கச்
சோர்விலாச் சுடரொழித்துச் சோவெனுஞ் சத்தமோடு
பார்மிசைப் பெய்யுமாரிப் பண்ணினைப் பாடலாமே

பெருமரக் கிளைகளாக பெயர்ந்திடும் வேர்களாக
அருமருந் தன்னமாரன் எறிந்திடும் அம்புபோலக்
கருமுகில் வகிரெடுத்துக் கனகமென் றுகளைப்பூசி
வருமொளி மின்னலோடு வீழ்ந்திடும் மாரிமழையே

திண்ணிய நெஞ்சுளாரும் திசையெலா மாரவாரம்
பண்ணியே பகைநடுங்கப் படையெடுத் தாடும்போது
விண்ணிலே யேறிநின்று விசையுடன் குமுறுகின்ற
குண்டினைப் போன்றதன்றோ குமரியுன் னிடியினோசை


தமிழரின் வாழ்விலின்று தகவிலார் பேணுகின்ற
உமிழ்நிலை கண்டுஉள்ளம் உடைபட அன்றுஎங்கள்
அமிழ்தினு மினியமைந்தர் ஆற்றிய அறங்களெண்ணிக்
கவிழ்முகி லூறுகண்ணீர்க் கனமெனக் கொள்ளலாமோ

காலமென் றிரையினூடே காட்சிகள் மாறுகின்ற
கோலமே கொள்வதேனோ கோடையில் வாடிநின்று
ஓலமிட் டேங்கினாலும் ஒருதுளி காட்டுவாயா
சாலமே செய்யவல்ல சாகசக் காரியன்றோ

**- உடுவில் அரவிந்தன் -**


011 5 411 411
www.sdb.lk | @SDBbank
www.facebook.com/sdbbank
டக்குனு
அடகு வைக்க
வரிசையில்லா அடகு சேவை
18-24
உங்களின் தங்க நகைகளுக்காக எம்மிடமிருந்து...
தங்க பவுணொன்றுக்கு
ரூ. 41,000 வரை
பணத்தேவையா? அப்படியானால் உடனடியாக போங்க SDB வங்கிக்கு
டக்குனு அடகு சேவையை அனுபவியுங்கள்.
ரூ.1,000 இற்கு
வட்டி 50 சதம்
SDB
ஸ்வர்ணகிரண
தங்க நகை அடகுச் சேவை
SDB வங்கி
சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால்
விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ


எதிரொலி Ethiroli
வார இதழ் சிறப்புற வாழ்த்துக்கள்
K.K. House centre
Hattan
உங்களது வீடுகளுக்குத் தேவையான தளபாடங்கள்,
இலத்திரனியல் உபகரணங்கள் எந்தவித முன் கொடுப்பனவுகளும்
இன்றி தவணை முறைக் கொடுப்பனவில் பெற்றுக்கொள்ளலாம்.
Wedding அல்லது வேறு தேவைகளுக்கு
நவீன புதிய கார் வாடகைக்குத் தரப்படும்.
சாரதி
ஒருவருடன் நாள்
ஒன்றிற்கு
5000 ரூபா
மாத்திரம்
No. 02A, Private Bus Stand up Stairs, Hattan.


ஆடித்தள்ளுபடி!
P
போத்தீஸ்
இம்முறையும் ஆடித்தள்ளுபடியை
போத்தீஸ்டன் இணைந்து கொண்டாடுங்கள்
விசேட விலைக்கழிவுகளுடன் அனைத்து விதமான
ஆடைகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்
No. 46, Maain Street, Hotton.
Tel : 051-2225719 / Mob : 077-3650665


எதிரொலியின் ஓராண்டு நிறைவையொட்டி,
பாடசாலை அணிகளுக்கு இடையிலான
'எதிரொலியின் சொற்கணை-2018'
மாபெரும் விவாதப் போட்டி
தொடுங்கள் சொற்கணையை!
வெல்லுங்கள் பரிசுகளை!!!
விண்ணப்ப முடிவுத் திகதி:
31-07-2018
முதற் பரிசு
1,00,000/=
போட்டியில் பங்கு கொள்ள என்ன நிபந்தனைகள்?
ஒரு பாடசாலையில் இருந்து ஓர் அணி மாத்திரமே பங்கு கொள்ளலாம்.
ஓர் அணியில் மூவர் மட்டுமே விவாதிக்க முடியும். இருவர் மேலதிகமாக அணிக்குள் உள்ளடக்கப்படலாம்
அணிப்பட்டியலில் உள்ளவர்கள் மாத்திரமே போட்டியில் பங்கேற்க முடியும்
அணி விபரம் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்படல் வேண்டும்
போட்டிகள் யாவும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும்.
விவாதத் தலைப்புகள் போட்டி இடம்பெறுவதற்கு முன்னதாக, போட்டி நடைபெறுமிடத்தில் வைத்தே வழங்கப்படும்.
பங்குகொள்ளும் சகலருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
முதல் மூன்று இடங்களைப் பெறும் அணியினருக்கு பதக்கங்களும், பணப்பரிசில்களும்.
விண்ணப்பங்களை தபாலிலோ, நேரிலோ கையளிக்கலாம்.
மேலதிக தகவலுக்கும் தொடர்புக்கும்
'எதிரொலியின் சொற்கணை-2018'
அம்பலம் பதிப்பகம், இல. 241, கைதடி - மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

HNB GRAMEEN லீசிங் | INDRA TRADERS (PVT) LTD.

HNB கிராமின் மற்றும் இந்திரா டிரேடர்ஸ் மூலம்

# விசேட சலுகைகள் பல...



எந்தவொரு வாகனத்திற்கு எங்களின் லீசிங்
மனத்திற்கு ஏற்றபடி தெரிவு செய்ய வாகன கனவை நனவாக்க

- சந்தையில் குறைந்த லீசிங் தவணையுடன் விசேட சலுகை
- வாகனத்திற்கு சிறந்த கழிவு

வாகன பதிவு இலவசம்

குறைந்த ஆவணங்கள் | வீட்டிற்கு வந்து சேவை

விரைவான மற்றும் ஒரு நாள் சேவையில் | வாகன காப்புறுதிக்கு விசேட கழிவு

INDRA TRADERS (PVT) LTD.
இணையம் : www.indratraders.lk
ஈ.மெயில் : info@indratraders.lk
உடனடி அழைப்புக்கு :
0112 341 333-7 / 0812 234 346

HNB GRAMEEN Finance
HNB கிராமின் பினான்ஸ் லிமிட்டட்
இல.168, நாவல வீதி நுகேகொடை.
பாக்ஸ் : 0112 17 62 62
ஈ.மெயில் : info@hnbgrameen.lk
இணையம் : www.hnbgrameen.lk
அழையுங்கள் : 0112 17 62 62

HNB GRAMEEN Finance




# SMART CITY



தோதி, குர்த்தா, ஒட்டிக்கோ கட்டிக்கோ வேட்டி, சோலி, லெஹெங்கா முதல் அனைத்து ரக குட்டீஸ் ஆடைகள், மொடர்ன் ரீசேட், பாங்கொக் டவுசர் உட்பட திருமண ஆடைகள், பெண்களுக்கான லெஹெங்கா முகூர்த்த சாறிஸ், லேட்டஸ் சாறிஸ் உட்பட அனைத்து திருமண ஆடைகளையும் இந்திய விலைக்கே பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

SMART CITY

பத்திரிகை உலகின் புதிய அவதாரம் எதிரொலி பத்திரிகை சாதாரண மனிதனின் இதயத் துடிப்பை நாட்டு மக்கள் அனைவரினதும் இதயங்களில் பதிக்கும் புதிய முயற்சி. பத்திரிக்கை உலகின் புதிய புரட்சியை உருவாக்க காத்திருக்கும் இவ் அற்புதக் குழந்தையின் சேவை உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாட்டிலும் தொடர சிமாட் சிட்டியின் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.



இல.139/A, பிரதான வீதி, அட்டன்,
(மறவாதீர்கள் புகையிரத பாலத்துக்கு முன்னால்)

தொ.பே. : 07171 92720



பிரிக்கப்படாத நாட்டின் உரிமையை வலியுறுத்தி
வடக்கு மற்றும் கிழக்குக்கு
புதிய அமைப்பாளர்களை இணைத்தல்

# நீங்களும் நாட்டை நேசிக்கும் பிரஜையா?

உடனே அழையுங்கள் : 0772 900 900
Email செய்ய : gs.unff@gmail.com
www.facebook.com/unff.lk

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி





இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்
தலைவர், பொதுச்செயலாளர் கௌரவ

# ஆறுமுகன் தொண்டமான்

மக்களின் குரலாக எதிரொலி
திக்கெட்டும் ஒலித்திட வாழ்த்துக்கள்

கொட்டகலை பிரதேச சபை தலைவர்

# ராஜமணி பிரசாந்த்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்


இப்பத்திரிகை மானிப்பாய் வீதி, உடுவில் என்ற முகவரியிலுள்ள அம்பலம் பதிப்பகத்தால், 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 27.06.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.